சோவியத் அயல்துறைக் கொள்கை

வினா விடை

சோவியத் அயல்துறைக் கொள்கை

வினா—விடை

சோவியத் நாடு பிரசுரங்கள்

1985

SOVIET FOREIGN POLICY
(Questions and Answers)

(Tamil)

மாஸ்கோவிலுள்ள
நவோஸ்தி செய்தி நிறுவனம்
தயாரித்தளித்த வாசகம்

Published by Y. L. Frolov at Soviet Nadu Office, 115, Theagaraya Road, Madras-600 017, for the Information Department of the USSR Embassy in India. Printed at Pavai Printers (P) Ltd., Madras-600 014.

பொருளடக்கம்

2. சோவியத் யூனியனும் வளர்முக நாடுகளும்

3. சமாதானப் போராட்டம், படைக் குறைப்புப் பிரச்சினைகள்

4. இன்றைய உலகப் பிரச்சினைகள்

சோவியத் அயல்துறைக் கொள்கையைப் பற்றி வெளி நாடுகளில் வசிக்கும் வாசகர்கள் நன்கு தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். சிரியா, இந்தியா, மெக்சிகோ, பிரேசில், இந்தோனேசியா மற்றும் பல வளர்முக நாடுகளிலிருந்து வாசக அன்பர்கள் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். இவற்றுக்கு பதில் அளிக்கும் வகையில் இந்த வினா-விடை பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறோம்.

வெளிநாட்டு வாசகர்கள் எங்களிடம் அடிக்கடி கேட்கும் கேள்விகளையும், சோவியத் பிரஜைகள் வெளிநாடுகளில் பிரயாணம் செய்யும்போது அவர்களிடம் வழக்கமாக எழுப்பப்படும் வினாக்களையும் இந்நூலில் சேர்த்திருக்கிறோம். சோவியத் நாட்டின் சமாதான பூர்வமான அயல் துறைக் கொள்கையைப் புரிந்துகொள்ள இச் சிறு பிரசுரம் மிகவும் பயன்படும் என்று கருதுகிறோம்.

பதிப்பகத்தார்

1. சோவியத் அயல்துறைக் கொள்கை: அடிப்படைக் கோட்பாடுகளும் போக்குகளும்

சோவியத் தலைவர்கள் தமது நாட்டின் அயல்துறைக் கொள்கையை லெனினியக்கொள்கை என்று குறிப்பிடுகின்றனர். இதன் பொருள் யாது?

சோவியத் அயல்துறைக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளை, சோவியத் அரசின் நிறுவகரான விளதீமிர் லெனின் தான் வகுத்துத் தந்தார். அதனுல்தான் அது லெனினியக் கொள்கை என்று அழைக்கப்படுகிறது.

''உடனடியாக ஜனநாயக பூர்வமான சமாதானம், நிலச்சுவான் முறையை ஒழித்தல், உற்பத்தி மீது தொழிலாளர் கட்டுப்பாடு, சோவியத் ஆட்சியை நிலைநாட்டுதல் என்ற எந்த இலட்சியங்களுக்காக மக்கள் போராடினர்களோ, அந்த இலட்சியங்கள் அடையப்பட்டு விட்டன.'' 1917 அக்டோபர் 25 ஆம் தேதி, மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி வாகை சூடிய சில மணி நேரங்களுக்குள் ''ரஷியாவின் குடிமக்களுக்கு!'' லெனின் விடுத்த அறைகூவலில் இந்த சொற்றொடரைக் காண்கிறோம். அக்டோபர் புரட்சியின் இந்த வேலைத் திட்டத்தில், ''ஜனநாயக பூர்வமான சமாதானம்''தான் முதலிடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்; அதை அடுத்துதான் பிரதான சமூகக் கோரிக்கைகள் இடம் பெற்றுள்ளன. ஏனெனில், சுரண்டலிலிருந்து விடுதலை அடைவதற்கான விருப்பமும் சமாதான ஆர்வமும் உழைக்கும் மக்களின் உள்ளங்களில் இரண்டறக் கலந்து இருப்பதைக் கருத்தில் கொண்டுதான் லெனினும் அவர்தம் தோழர்களும் செயல்பட்டார்கள்.

சமாதானம் பற்றிய ஆணையே சோவியத் அரசாங்கத்தின் முதல் சட்டமாகும்; அதையும் லெனின்தான் எழுதினர். ஏகாதிபத்திய யுத்தமானது, மனித குலத்திற்கு எதிராக இழைக்கப்படும் மாபெரும்

குற்றம் என்று தான் கருதுவதாய் அப்போதே இளம் சோவியத் குடியரசு பிரகடனம் செய்தது.

சோவியத் அரசு ''எல்லா நாட்டு மக்களுடனும் சமாதானமாகவே வாழ விரும்புகிறது.'' லெனினுடைய இந்த சொற்கள்தான், லெனினிய அயல்துறைக் கொள்கையின் அடிப்படையாக விளங்குகின்றன. சோவியத் அரசு, தோன்றிய நாள் தொட்டே இக்கொள்கையை உறுதியாகவும் கிஞ்சித்தும் வழுவாமலும் கடைப்பிடித்து வருகிறது.

போர் மற்றும் சமாதானம் பற்றிய லெனினிய அணுகுமுறையை இன்றைய காலத்தின் தேவைகளுக்கேற்ப சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரசுகளும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பிளினம் கூட்டங்களும், சோவியத் தலைவர்கள் அண்மைக் காலத்தில் விடுத்த அறிக்கைகளும் மேலும் செழுமைப்படுத்தியுள்ளன என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

சோவியத் அயல்துறைக் கொள்கையின் பிரதான கோட்பாடுகள் யாவை?

1977 அக்டோபரில் நிறைவேற்றப்பட்ட சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டம் சோவியத் அயல்துறைக் கொள்கையின் இரண்டு அடிப்படையான கோட்பாடுகளைப் பிரகடனம் செய்தது:

—மாறுபட்ட சமூக அமைப்புக்களைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வு நடத்தும் கோட்பாடு;

—இதர சோஷலிச நாடுகளுடனும், சமூக விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் அரசுகளுடனும், மக்களுடனும், ஏகாதிபத்தியத்தையும் காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து தேச விடுதலைப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் மக்களுடனும் கொண்டிருக்கும் உறவுகளில் பாட்டாளிவர்க்க, சோஷலிச சர்வதேசியக் கோட்பாடு.

முதலாளித்துவத்தை அகற்றிவிட்டு சோஷலிசத்தை நிலைநாட்டும் பணி, எல்லா நாடுகளிலும் ஏக காலத்தில் நடைபெறாது என்றும், இந்த நிகழ்ச்சிப்போக்கு ஒரு வரலாற்று சகாப்தம் முழுவதற்கும் நீடித்திருக்குமென்றும், இந்தக் காலகட்டத்தில் மாறுபட்ட சமூக அமைப்புக்களைக் கொண்டிருக்கும் நாடுகள் சகவாழ்வு நடத்துவது தவிர்க்க முடியாதது என்றும், அவை தம்மிடையே அரசியல், பொருளாதார, கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருப்பதும் தவிர்க்க இயலாதது என்றும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே லெனின் நெடுநோக்காய் அறிவித்தார்.

சர்வதேசப் பொருளாதார உறவுகள் மற்றும் வர்த்தகத்தை வளர்ப்பதில் சோஷலிச நாடுகளும் முதலாளித்துவ நாடுகளும்—

இரண்டுமே—அக்கறை கொண்டுள்ளன என்று லெனின் வலியுறுத்தினர். எனவே, மாறுபட்ட சமூக அமைப்புக்களைக் கொண்ட நாடுகள் சமாதான சகவாழ்வு நடத்துதல் என்ற கோட்பாடு, உண்மையான பொருளாதார அடித்தளத்தைக் கொண்டிருப்பது தெளிவு.

சர்வதேச நெருக்கடி நிலையை அகற்றி, பதற்றத்தணிவுப் போக்குக்குப் புத்துயிர் அளிப்பதை நோக்கமாய்க் கொண்டிருக்கும் இன்றைய சோவியத் கொள்கை, சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டையே அடித்தளமாய்க் கொண்டிருக்கிறது. மேற்கு நாடுகளிலுள்ள ஆளும் வட்டாரங்களின் உஷார்த் தன்மையை மழுங்கடிப்பதற்காகத் தான் நாங்கள் பதற்றத்தணிவு பற்றிப் பேசுகிறோம்; இது வெறும் மோசடி என்று சோவியத் எதிர்ப்பாளர்கள் கூச்ச நாச்சமின்றி அவதூறு செய்கின்றனர். சமாதான சகவாழ்வு போலவே பதற்றத் தணிவும் எங்களுடைய உயிர்நாடியான நீண்டகாலத் திட்டமாகும்.

மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை சோவியத் அரசு பிரகடனம் செய்துள்ளது. இதன் அடிப்படையில்தான், சர்வதேச உறவுகள்பற்றிய விதிமுறைகள், 1975-ல் கையொப்பமிடப்பட்ட ஹெல்சிங்கி இறுதி தஸ்தாவேஜுவில் பொறிக்கப்பட்டன. பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த விதிமுறைகளை சோவியத் அரசியல் சட்டத்தின் ஷரத்துக்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. அவையாவன: நாடுகளின் அரசுரிமை சமத்துவம்; பலப்பிரயோகத்தையோ அல்லது பலப்பிரயோக பயமுறுத்தலையோ பரஸ்பரம் கைவிடுதல்; எல்லைகளின் மீறவொண்ணுமை; நாடுகளின் பிரதேச ஒருமைப்பாடு; தகராறுகளுக்கு சமாதான பூர்வமாய்த் தீர்வுகாணுதல்; உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை; மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் மதித்து நடத்தல்; பல இன மக்களுக்கு சம உரிமைகள், தம்முடைய சொந்த கதிப்போக்கைத் தாமே தீர்மானித்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை; நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு; சர்வதேச சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் விதிகளிலிருந்தும், சர்வதேச ஒப்பந்தங்களிலிருந்தும் தோன்றும் கடமைப்பொறுப்புக்களை நன்னம்பிக்கையுடன் நிறைவேற்றுதல்.

சோவியத் நாட்டின் மற்றோர் அடிப்படையான அயல்துறைக் கொள்கைக் கோட்பாட்டினை—பாட்டாளி வர்க்க, சோஷலிச சர்வதேசியம் என்ற கோட்பாட்டினை—இப்போது கவனிப்போம்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எப்போதுமே தொழிலாளி வர்க்கத்தின் சிறப்பியல்பாக இருந்து வந்துள்ளது. முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்து நடைபெறும் பொதுப் போராட்டத்தில் வெவ்வேறு நாட்டுத் தொழிலாளர்களின் ஒற்றுமையைப் பேண வேண்டுமென்பதை இது வெளிப்படுத்துகிறது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்!'' என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதிய கம்யூனிஸ்டு

அறிக்கையில் பொறிக்கப்பட்டிருக்கும் இச்சொற்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்தே அவர்களின் குறிக்கோள் வாசகமாய்த் திகழ்ந்து வந்துள்ளது.

உலகில் முதலில் தோன்றிய ஒரேயொரு சோஷலிச நாடாக சோவியத் யூனியன் திகழ்ந்து வந்த காலகட்டத்தில், சோவியத் அயல்துறைக் கொள்கையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடு எவ்வாறு வெளிப்பட்டது? முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களுடன் சோவியத் மக்களின் ஒருமைப்பாடு; அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் அளித்த ஆதரவு; உலகம் பூராவிலுமிருக்கும் முற்போக்கு சக்திகளிடம் காட்டிய பரிவு ஆகியவற்றில் இந்தப் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வு நன்கு வெளிப்பட்டதைக் காண்கிறோம். வேறுசில நாடுகளும் சோஷலிசப் பாதையில் வெற்றிநடை பயிலத் தொடங்கிய பின்னர், இந்தக் கோட்பாட்டின் ஒரு புதிய அம்சம் மலர்ச்சியுற்றதெனலாம். சோஷலிச சகோதர நட்புறவு, தோழமையான பரஸ்பர உதவி, சோஷலிச சமுதாயத்தைச் சேர்ந்த நாடுகளின் ஒற்றுமை, ஒருங்கிணைவு ஆகியவையே இப்புதிய அம்சமாகும்.

காலனி அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை பயின்று கொண்டிருக்கும் மக்களுடன் சோவியத் மக்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றனர்; குறிப்பாக, வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு, உலகின் பல்வேறு பகுதிகளில் இராணுவ மோதல்களைத் தூண்டிவரக்கூடிய ஏகாதிபத்திய சக்திகளின் ஆக்கிரமிப்புத் தாக்குதல்களை எதிர்த்துப் போரிட்டுவரும் மக்களுடன் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றனர். சோவியத் யூனியனுடைய அயல்துறைக் கொள்கையின் சர்வதேசியத் தன்மையை இதில் தெளிவாகப் பார்க்க முடிகிறது. உலகில் நீடித்த சமாதானம் நிலைபெற வேண்டுமானால், மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதும், பதற்ற நிலைக்களன்களை அகற்றிடப் பாடுபட வேண்டியதும் அத்தியாவசியம் என்று சோவியத் யூனியன் நம்புகிறது.

சோவியத் யூனியனுடைய அயல்துறைக் கொள்கை எவ்வாறு வகுக்கப்படுகிறது?

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக் காங்கிரசுகள்தான், சோவியத் அயல்துறைக் கொள்கையின் வழிகாட்டு நெறிகளை வகுத்துத் தருகின்றன. சோவியத் சமுதாயத்தின் தலையாய, வழிகாட்டும் சக்தியாகவும், அதன் அரசியல் அமைப்பின் மையக் கருவாகவும்

விளங்கும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரத்தைப் பற்றி சோவியத் அரசியல் சட்டத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "சமுதாய வளர்ச்சியின் பொதுவான திசைவழிகளையும், சோவியத் யூனியனின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையின் செயல்போக்கையும் கம்யூனிஸ்டுக் கட்சி... நிர்ணயிக்கிறது.''

1971 ஆம் ஆண்டில்,சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரஸ் சோவியத் சமாதான வேலைத் திட்டத்தை வகுத்தது, அதை ஏற்றுக்கொண்டது. இதன் தர்க்க ரீதியான தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் விளங்கிய ஒரு வேலைத் திட்டம்—சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்காகவும், மக்களின் சுதந்திரம் சுயாதீனத்துக்காகவும் மேலும் போராடுவதற்கான வேலைத் திட்டம்—1976-ல் நடைபெற்ற 25 ஆவது கட்சிக் காங்கிரசில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1981-ல் நடைபெற்ற கட்சியின் 26 ஆவது காங்கிரஸ், அயல்துறையில் பல புதிய விரிவான பிரேரணைகளை முன்வைத்தது; 1980 ஆம் ஆண்டுகளுக்கான சமாதான வேலைத்திட்டம் என்று அவை பிரபலமடைந்தன.

கட்சிக் காங்கிரசுகள் முக்கியமான கடமைகளைச் சுட்டிக் காட்டுகின்றன; மிகவும் அதி அவசரமான சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிவகைகளை விவரிக்கின்றன. காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில், மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங்கள், காங்கிரசின் முடிவுகளுக்குப் பொருத்தமான வகையில் அயல்துறைக் கொள்கை விஷயங்களைப் பரிசீலிக்கின்றன; சர்வதேச நிகழ்ச்சிகளைத் தக்கமுறையில் கணக்கில் எடுத்துக்கொண்டு, இக்கொள்கையை மேலும் வளர்க்கின்றன. பிளீனம் கூட்டங்கள் வழக்கமாக ஆண்டில் இரண்டு தடவை நடைபெறுகின்றன. மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுக் கூட்டங்கள் வாரந்தோறும் நடக்கின்றன. இந்தக் கூட்டங்கள், அயல்துறைக் கொள்கையின் அன்றாடப் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்கின்றன; சோவியத் அயல்துறைக் கொள்கையை நடைமுறையில் செயல்படுத்தும் அமைச்சரவைக்கு, அரசியல் குழு பரிந்துரைகளை செய்கிறது.

கட்சிக் காங்கிரசுகள், மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங்கள், அரசியல் குழுக் கூட்டங்கள் ஆகியவை நிறைவேற்றிடும் தீர்மானங்கள், எல்லா சோவியத் நிறுவனங்களுக்கும் வழிகாட்டு நெறிகளாகத் திகழ்கின்றன; சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனுடைய நலன்களை இவை பாதுகாத்துப் பேணுகின்றன. குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையிலும், இதர சர்வதேச மன்றங்களிலும், ஏனைய இருதரப்புப் பேச்சுவார்த்தைகளிலும் விவாதிக்கப்படும் விஷயங்களில், சோவியத் யூனியனது நிலையை வகுப்பதற்கான அடிப்படையாக இந்தத் தீர்மானங்கள் விளங்குகின்றன.

சோவியத் நாட்டில் மிக உயர்ந்த அதிகார உறுப்பாக விளங்கும் சுப்ரீம் சோவியத் அயல்துறைப் பிரச்சினைகளைத் தீர்மானிப்பதில் முக்கியமான பாத்திரம் வகிக்கிறது. சுப்ரீம் சோவியத் கூட்டங்கள்

வழக்கமாக வருடத்தில் இரண்டு தடவைகள் நடைபெறுகின்றன. அவை, உள்துறை, அயல்துறைக் கொள்கை தஸ்தாவேஜுகளை விவாதித்து ஏற்றுக் கொள்கின்றன; பின்னர் இந்த தஸ்தாவேஜுகள் சட்டத்தின் வலுவையும் அந்தஸ்தையும் பெறுகின்றன.

அடிக்கடி நீங்கள் உங்களுடைய வரலாற்றியல் நன்னம்பிக்கைத் தத்துவம் பற்றிப் பேசுகிறீர்கள். நெருக்கடி மிகுந்திருக்கும் இன்றைய சர்வதேச நிலைமையில் இதன் பொருள் யாது?

1980 ஆம் ஆண்டுகளில், நாம் காணும் பேராபத்தைப்போல, இதற்குமுன் மனிதகுலம் என்றுமே கண்டதில்லை. மிகப்பெரும் ஏகாதிபத்திய வல்லரசான அமெரிக்கா, இப்போது சோவியத் யூனியனைவிட இராணுவத் துறையில் மேலாண்மை நிலையை அடைய முயலுகிறது; அணு ஆயுதப் போரில் வாகைசூட வாய்ப்பு உள்ளது என்று கருதுகிறது; உலகின் பல்வேறு பகுதிகளிலும் நெருக்கடியைத் தீவிரப்படுத்துகிறது; இந்தச் சூழ்நிலையில், அணு ஆயுதப் பேரழிவுக்கான அபாயம் உண்மையில் மிக அதிகமாக உள்ளது. ஆனால் சோவியத் மக்களாகிய நாங்கள் நன்னம்பிக்கை வாதிகள்; மனிதகுலம் முட்டுச்சந்தை நோக்கி முன்னேறிச் செல்கிறது, போரைத் தவிர அதற்கு வேறு மார்க்கமே இல்லை என்று நாங்கள் கருதவில்லை.

இன்றைய சர்வதேச நிலைமை மிகவும் அபாயகரமாய் உள்ளதை சோவியத் யூனியன் நன்கு உணர்ந்துள்ளது; எவினும், ஒரு புதிய உலக யுத்தம் தவிர்க்க முடியாதது அல்ல என்றும், மக்களின் மட்டத்திலும், அரசாங்கங்களின் மட்டத்திலும் முயற்சிகளை ஒன்றுபடுத்துவதன் மூலம், யுத்த எதிர்ப்பு மற்றும் அணு ஆயுத எதிர்ப்பு இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் லட்சோப லட்சக்கணக்கான மக்களின் முயற்சிகளையும், சமாதானம் விரும்பும் அரசுகளின் முயற்சிகளையும் ஒன்றுபடுத்துவதன் மூலம் சமாதானத்தைப் பேணிக்காத்து, பலப்படுத்த முடியும் என்று சோவியத் யூனியன் உறுதியாக நம்புகிறது. உலக அரங்கில் அது எடுக்கும் எல்லா முன்முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இதுதான் அடித்தளம்போல விளங்குகிறது.

எங்களுடைய வரலாற்றியல் நன்னம்பிக்கைத் தத்துவத்தின் சாராம்சம் இதுவே; இன்றைய உலக வளர்ச்சிப் போக்கின் புறவயமான அம்சங்களை இது அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது.

அறிவும் நேர்மையும் நிச்சயம் வாகைசூடும் என்று உறுதியாக நம்புகிறோம்; ஏனெனில், புதிய உலகப் போரைத் தடுப்பதிலும், இரண்டு மாறுபட்ட சமூக அமைப்புகளின் சமாதான சகவாழ்வைப் பேணி வளர்ப்பதிலும் நாங்கள் கடந்த நாற்பதாண்டுகளில்

பெற்றுள்ள அனுபவத்திலிருந்து தோன்றியதாகும் இந்த நம்பிக்கை. வார்சா ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பு வல்லமையையும் இது ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. ஆக்கிரமிப்பைத் தடுத்து மடக்கும் உறுதிமிக்க அரணாகத் திகழ்கிறது வார்சா ஒப்பந்தம்; புதிய உலகப் போரைக் கட்டவிழ்த்து விடாமல், இராணுவ சாகசவாதிகளின் கரங்களையும் இது தடுத்து நிறுத்துகிறது.

உலக சோஷலிச அமைப்பின் பலம், செல்வாக்கு, கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளும் புதிதாக விடுதலைபெற்ற நாடுகளும் மக்களும், சமூக ஜனநாயக சக்திகளும் எடுத்துவரும் மேன்மேலும் உறுதியான சமாதான நடவடிக்கைகள் ஆகியவற்றையும் எங்களுடைய வரலாற்றியல் நன்னம்பிக்கைத் தத்துவம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

யுத்த எதிர்ப்பு இயக்கத்தின் வீச்சும், அதன் சமூக இயைபும் விரிவாக இருப்பதற்கேற்ப எங்களுடைய நன்னம்பிக்கையும் உயர்ந் தோங்கி உள்ளது.

சோஷலிச மற்றும் கூட்டுச் சேரா நாடுகளின் முயற்சிகள் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு புதிய அரசியல் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது; அமெரிக்கா மற்றும் ஏனைய நேட்டோ நாடுகளின் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட இராணுவக் கொள்கை அங்கே உறுதியாகக் கண்டிக்கப்படுகிறது; இந்தச் சூழலில் எங்களுடைய நன்னம்பிக்கை மேலும் வலுவடைவதில் வியப்பேதுமில்லை.

பதற்றத் தணிவை நிலைநாட்ட வேண்டும், ஆயுதப் போட்டியை, குறிப்பாக அணு ஆயுதப் போட்டியைக் கைவிடவேண்டும், கிழக்கு-மேற்கு நாடுகளுக்கிடையேயும், வளர்முக நாடுகளுடனும் பரஸ்பரம் அனுகூலமான ஒத்துழைப்பை விஸ்தரிக்க வேண்டும் என்ற கோட்பாடு களை மேன்மேலும் அதிக எண்ணிக்கையில் பிரபல முதலாளித்துவ அரசியல் வாதிகளும் ராஜியத் தலைவர்களும் ஆதரிக்க முற்பட்டுள்ளனர். இதனாலும் எங்களுடைய நம்பிக்கை வளர்ந்தோங்குகிறது.

விதிமுறைப்படி நிலைநாட்டப்பட்ட வரலாற்று ரீதியான பாதை வழியே—யுத்தம் தவிர்க்கப்படமுடியாதது என்று கடந்த காலத்தில் கருதப்பட்ட நிலையிலிருந்து, இப்போது அதைத் தடுத்து நிறுத்தமுடியும், எதிர்காலத்தில் மக்களின் வாழ்க்கையிலிருந்து அதை அறவே கெல்லி யெறிந்துவிட முடியும் என்ற நிலையை நோக்கி-மனித குலம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்ற எங்களது நம்பிக்கையை இவையெல்லாம் உறுதிப்படுத்துகின்றன.

சோவியத் யூனியன் முன்வைத்திருக்கும் "ஆறு கோட்டுபாடு" களைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அவை யாவை?

அணு ஆயுத வல்லரசுகளுக்கிடையேயுள்ள உறவுகள், கீழ்க்காணும்

கோட்பாடுகளை வழிகாட்டியாய்க் கொண்டிருக்க வேண்டுமென்று 1984 மார்ச் 2-ல் கான்ஸ்தாந்தின் செர்னென்கோ கூறினார். அவையான:

—அணு ஆயுதப் போர் தடுப்புதான், ஒரு நாட்டினுடைய அயல் துறைக் கொள்கையின் பிரதான இலட்சியமாகக் கருதப்படுதல். அணு ஆயுத மோதல் நிலைமைகள் தோன்றுவண்ணம் தடுத்தல். அத்தகைய அபாயம் தோன்றும்பட்சத்தில், அணு ஆயுதப் போரைத் தவிர்க்கும் நோக்குடன் அவசர அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்துதல்.

—சகல விதமான அணு ஆயுதப் போர்களைப்பற்றிய—உலகு தழுவிய அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அணு ஆயுதப் போர்களைப் பற்றிய பிரசாரத்தைக் கைவிடுதல்.

—முதலில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற கடமைப் பொறுப்பை ஏற்றல்.

—அணு ஆயுதங்களைக் கொண்டிராத நாடுகள் மீது, தம்முடைய பிரதேசங்களில் அத்தகைய ஆயுதங்களை நிலைப்படுத்தி வைத்திராத நாடுகள் மீது, எக்காரணம் கொண்டும் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்கக்கூடாது. ஏற்கனவே ஏற்படுத்தப் பட்டிருக்கும் அணு ஆயுத சூன்ய மண்டலத்தின் அந்தஸ்தை மதித்து நடத்தல்; உலகின் பல்வேறு பகுதிகளில் புதிய அணு ஆயுத சூன்ய மண்டலங்களை சிருஷ்டிப்பதற்கு ஊக்கமளித்தல்.

—எந்த வடிவத்திலும் அணு ஆயுதங்களின் பரவலைத் தடுத்தல்; அந்த ஆயுதங்களையோ அல்லது அவற்றின் மீது கட்டுப்பாட்டையோ வேறு எவருக்கும் மாற்றிக் கொடுக்கக் கூடாது; அத்தகைய ஆயுதங்கள் இல்லாதிருக்கும் நாடுகளின் பிரதேசங்களில் அவற்றை நிலைப்படுத்தி வைக்கக் கூடாது; அண்டவெளி உட்பட புதிய மண்டலங்களுக்கு அணு ஆயுதப் போட்டியை விஸ்தரிக்கக் கூடாது.

—எல்லாவகையான அணு ஆயுதங்களையும் இறுதியில் அழித்தொழிக்கும் நோக்குடன் அணு ஆயுத தளவாடங்களைக் குறைப்பதற்காக, சம பந்தோபஸ்துக் கோட்பாட்டின் அடிப்படையில், படிப்படியாகப் பணியாற்றுதல்.

இத்தகைய கோட்பாடுகளைக் கூட்டாக ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில், அவற்றைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்கும் அடிப்படையில், எந்த சமயத்திலும் ஏனைய அணு ஆயுத நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள சோவியத் யூனியன் தயாராக உள்ளது.

அணு ஆயுத வல்லரசுகளுக்கிடையிலுள்ள உறவுகளை நெறிமுறைப் படுத்துவது பற்றி சோவியத் யூனியன் வெளியிட்ட ஆலோசனைகளை, மேற்கு நாடுகளிலுள்ள பிரமுகர்கள் உள்பட உலகெங்கிலுமுள்ள பல

முக்கியமான அரசியல் தலைவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கிறார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்த சோவியத் பிரேரணை எதார்த்த அரசியலையும் பொறுப்புணர்வையும் எடுத்துக் காட்டுகிறது என்று ஐ. நா. சபையின் 39 வது கூட்டத் தொடரில் பொதுவாக வரவேற்கப்பட்டது; இதன் சாராம்சம் பல தீர்மானங்களிலும் பிரதிபலித்தது.

அண்மைக் காலத்தில் சர்வதேச நிலைமை மோசமடைந்துள்ள காரணம் யாது?

1980 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. அமெரிக்க அயல்துறைக் கொள்கையில் ஏற்பட்ட எதிர்மறையான மாற்றங்களே இதற்குக் காரணம். ''வலு நிலைக் கொள்கை''யை அமெரிக்கா கடைப்பிடிக்க முற்பட்டு, ஆயுதப் போட்டியை, குறிப்பாக அணு ஆயுதப் போட்டியை, முடுக்கி விட்டுள்ளது.

நெருக்கடி படுமோசமடைந்திருப்பதற்கான காரணங்களையும், போர் அபாயம் பெருகியிருப்பதற்கான காரணங்களையும் பரிசீலிக்கையில், மூன்று அடிப்படையான அம்சங்களை ஒருவர் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

முதலாவது: ரீகன் நிர்வாகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இராணுவ மேலாண்மை நிலையை எய்திடும் கொள்கையை, உலகம் பூராவையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் கொள்கையை நிறைவேற்ற முனைந்தது. இந்த நோக்கத்துடன், முதல் தாக்குதல் தொடுப்பதற்குத் தேவையான கேந்திர ஆயுதங்கள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டு, நிலைப்படுத்தி வைக்கப்படுகின்றன. எம்எக்ஸ் ஏவுகணைகள், மிட்ஜட்மேன் கண்டம்விட்டுக் கண்டம் செல்லும் பாலிஸ்டிக் ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கும் டிரிடெண்ட்-2 பாலிஸ்டிக் ஏவுகணைகள், தொலைதூர வீச்சுடைய பலதிறப்பட்ட குரூய்ஸ் ஏவுகணைகள் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. நடுத்தர வீச்சுடைய பெர்ஷிங்-2 ஏவுகணைகளும் குரூய்ஸ் ஏவுகணைகளும் மேற்கு ஐரோப்பாவில் நிலைப்படுத்திவைக்கப் படுகின்றன; புதுவகையான சர்வ நாச ஆயுதங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன; அண்டவெளியை இராணுவமயப் படுத்துவதற்கான தயாரிப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சோவியத் யூனியன் மீது, இராணுவத்துறையில் மேலாண்மை நிலையை அடையும் பொருட்டு, பல்லாயிரம் கோடி டாலர்களைச் செலவிட அமெரிக்கா விரும்புகிறது; இது வெறும் குருட்டுத்

துணிச்சலான சாகசம்தான். அமெரிக்கா இந்தக் குறிக்கோளை நிச்சயம் அடையவே முடியாது. 1981-1983 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க இராணுவச் செலவினங்களின் வருடாந்தர அதிகரிப்பு வீதம் சராசரி 17 சதவீதம் இருந்தது என்றும், 1985-ல் அது இராணுவத்திற்காக 30,000 கோடி டாலர்களைச் செலவழிக்குமென்றும் அதிகாரபூர்வமான அமெரிக்கப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இராணுவ மேலாண்மை நிலையை அடைய வாஷிங்டனின் பகிரதப் பிரயத்தனம், அமெரிக்காவில் யுத்த வெறியைத் தட்டி எழுப்புதல், ''முதல் அணு ஆயுதத் தாக்குதல்'', ''கட்டுப்படுத்தப்பட்ட'' மற்றும் ''நீண்ட நெடுங்கால'' அணு ஆயுதப் போர்களை நடத்துதல் முதலிய ஆக்கிரமிப்பு வெறிகொண்ட பல்வேறு திட்டங்களை வகுத்தல், ஆயுதக் கட்டுப்பாடு பற்றி நடைபெறும் எல்லாப் பேச்சு வார்த்தைகளுக்கும் வேட்டு வைத்தல்—இவைதான் ரீகன் நிர்வாகத்தினுடைய இராணுவக் கொள்கையின் சில முக்கிய அம்சங்களாகும்.

இரண்டாவது: பயங்கரவாதத்தை அரசாங்க மட்டத்திற்கு வாஷிங்டன் உயர்த்தியுள்ளது. தனது ஏவலை ஏற்று நிறைவேற்ற மறுக்கும் அரசாங்கங்கள் மீது நிர்ப்பந்தம் கொண்டுவரும் நோக்குடன் பகிரங்கமாகவே அமெரிக்கா பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறது' இதர நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடவும் அது தயங்குவதில்லை. இக்காரியத்திற்காக, தனது இராணுவப் படைகளையும்கூட அது பயன்படுத்துகிறது. லெபனானில் வன்முறை நடவடிக்கைகள், சாட் தேசத்திலும் லிபியாவைச் சுற்றியுள்ள பிராந்தியங்களிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள், பல ஆப்பிரிக்க மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆத்திரமூட்டும் செயல்கள், ஆப்கனிஸ்தானுக்கும் நிகராகுவாவுக்கும் எதிராக நடத்தப்பட்டுவரும் பிரகடனம் செய்யப் படாத போர்கள், கிரெனடா மீது படையெடுப்பு, சால்வடோர் புரட்சியின் குரல்வளையை நெறிக்க முயற்சிகள் ஆகியன அண்மை ஆண்டுகளில் அமெரிக்கா கடைப்பிடித்து வந்த ஆக்கிரமிப்புச் செயல் களுக்கு ஒரு சில உதாரணங்களாகத் திகழ்கின்றன.

மூன்றாவது: சோஷலிசத்துக்கு எதிராக ''புனிதப் போர்'' பிரகடனம் செய்திருக்கும் ரீகன் நிர்வாகம், சோவியத் யூனியனுக்கும், ஏனைய சோஷலிச நாடுகளுக்கும், சில வளர்முக நாடுகளுக்கும் எதிராக, இதற்குமுன் என்றுமே கண்டிராத அளவில் ''மனோதத்துவப் போராட்டத்தை''க் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதற்காக, சோவியத் எதிர்ப்பையும், கம்யூனிச எதிர்ப்பையும் மிகவும் தீவிரமாக முடுக்கி விட்டுள்ளது.

அமெரிக்காவின் இத்தகைய அடாவடிச் செயல்கள் உலகம் பூராவிலும் அரசியல் சூழ்நிலையை நச்சுப்படுத்தியிருக்கின்றன; பதற்றத் தணிவுக்கு வேட்டு வைத்துள்ளன; புதிய உலக யுத்த அபாயத்தை அதிகப்படுத்தியிருக்கின்றன.

மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் சமாதான சகவாழ்வை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். அதேசமயம் தேசவிடுதலை இயக்கங்களின் ஆயுதமேந்திய போராட்டத்துக்கும் ஆதரவு அளிக்கிறீர்கள். இதில் முரண்பாடு இல்லையா?

இதில் எத்தகைய முரண்பாடும் இல்லை. சர்வதேச நிலைமையை ஸ்திரப்படுத்துவதையும், மற்றோர் உலகப்போர் மூளாமல் தடுப்பதையும் தான் எங்களுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கை நோக்கமாய்க் கொண்டிருக்கிறது. இதே குறிக்கோளைத்தான் விடுதலை இயக்கங்களும் கடைப்பிடித்து வருகின்றன. வாஷிங்டன் இட்டுக்கட்டிக் கூறுவது போல, விடுதலை இயக்கங்கள் உலகில் ''ஸ்திரத் தன்மையை சீர்குலைக்கவில்லை,'' அல்லது சமாதானத்தை ''அழிக்கவில்லை.'' மாறாக, வன்முறையின் மூலம் உலகில் நிலைநாட்டப்பட்டிருக்கும் அவக்கேடான விஷயங்களுக்கு முடிவுகட்டவே அவை பாடுபட்டு வருகின்றன. காலனி மற்றும் நவீன காலனி ஒடுக்குமுறைதான், மனிதர்களை, தேசங்களை சுரண்டிக் கொழுக்கும் மிகவும் மிருகத்தனமான வடிவம் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். இந்த வடிவம் கொடிய புற்று நோய்க் கட்டிபோன்றது; அதை உடனடியாக அகற்றாவிட்டால் உடல் முழுவதையுமே, மனித சமுதாயம் பூராவையுமே, அது அரித்து அழித்துவிடும். எனவே, தேச விடுதலைப் போராட்டத்தை, ஓர் அறுவை சிகிச்சைக்கு ஒப்பிடுவதுதான் பொருத்தமாகும். அதனுடைய இலட்சியம், இந்தக் கொடிய நோயை மனித குலத்திலிருந்தே வேரோடு அழித்து ஒழிப்பதாகும்.

காலனி ஆதிக்கத்தின் மிச்ச சொச்சங்களையும், அன்னிய ஆதிக்கத்தின் ஏனைய வடிவங்களையும் ஒழித்துக் களைவதற்காக ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்திவரும் நியாயமான போராட்டத்துக்கு சகல உதவிகளையும் அளிக்கும்படி ஐக்கிய நாடுகள் சபை எல்லா தேசங்களையும் பன்முறை அறைகூவி அழைத்துள்ளதையும் நீங்கள் அறிவீர்கள்.

சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக விளங்குவது மக்களின் விடுதலைப் போராட்டம் அல்ல, மாறாக அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்கு முறையேயாகும் என்பதை வரலாறு நன்கு எடுத்துக் காட்டுகிறது. மக்கள் ஒடுக்கப்படும் நாடுகளில்தான், அவர்களுடைய சுதந்திரமும் சுயமரியாதையும் கௌரவமும் மிதித்துத் துவைக்கப்படும் இடங்களில்தான் அபாயகரமான நெருக்கடி மையங்களும், இராணுவ மோதல்களும் தோன்றுகின்றன. அதனால்தான் தேச விடுதலைக்காக நடைபெறும் போராட்டம்—காலனி ஆதிக்க வடிவங்களை நீடிக்கவும், மக்களின் மீது அடிமைத் தளைகளையோ அல்லது அசமத்துவத்தையோ திணிக்கவும் நடைபெறும் முயற்சிகளுக்கு எதிரான போராட்டம்—சமாதானத்தைப் பேணிக் காக்கவே உதவி செய்கிறது; அதை சீர்குலைக்க அல்ல.

2. சோவியத் யூனியனும் வளர்முக நாடுகளும்

வளர்முக நாடுகளின்பால் சோவியத் யூனியன் கடைப்பிடிக்கும் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை?

வளர்முக நாடுகளின்பால் எங்கள் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் வருமாறு:

வெளியார் தலையீடின்றி, தனது உள்விவகாரங்களை சுதந்திரமாய்க் கடைப்பிடித்து ஒழுக ஒவ்வொரு தேசத்துக்கும் உள்ள உரிமை அங்கீகரிக்கப்படுதல். எந்த ஒரு நாட்டின்மீதும் எத்தகைய ஆதிக்க அல்லது மேலாதிக்க வடிவத்தையும் திணிப்பதற்கோ அல்லது எந்த ஓர் அரசின் செல்வாக்கு மண்டலத்துடனும் அதைப் பிணைத்துக் கொள்ளவோ செய்யப்படும் சகல முயற்சிகளையும் நிராகரித்தல்.

வளர்முக நாடுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையும், அவற்றின் எல்லைகளின் மீறவொண்ணாத் தன்மையையும் மதித்து நடத்தல்; எத்தகைய பிரிவினைவாத இயக்கங்களுக்கும் வெளியிலிருந்து கிடைக்கும் ஆதரவை எதிர்த்தல்.

நவீன காலனியாதிக்கத் தில்லுமுல்லுகளையும், அப்பட்டமான ஏகாதிபத்தியத் தாக்குதல்களையும் எதிர்த்து வளர்முக நாடுகள் நடத்தும் போராட்டத்தில் அவற்றுக்கு ஆதரவு அளித்தல்.

சர்வதேச வாழ்க்கையில் சமத்துவ அடிப்படையில் பங்கெடுத்துக் கொள்ளவும், உலகிலுள்ள எல்லா தேசங்களுடனும் உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் ஒவ்வோர் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டுக்கும் உள்ள உரிமையை எத்தகைய நிபந்தனையுமின்றி அங்கீகரித்தல்.

தம்முடைய இயற்கைச் செல்வாதாரங்கள் மீது வளர்முக நாடுகளுக்குள்ள அரசுரிமையைப் பூரணமாகவும், நிபந்தனையின்றியும் அங்கீகரித்தல்; சர்வதேசப் பொருளாதார உறவுகளில் அவற்றின் முழு

சமத்துவத்தையும், வெறும் ஒப்புக்காக அன்றி, உண்மையிலேயே அங்கிகரித்தல்; காலனி ஆதிக்கத்தின் எச்ச மிச்சங்களைக் கெல்லியெறிவதற்கும், இனவெறியையும் இனஒதுக்கலையும் ஒழிப்பதற்கும் அவை மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்தல்.

மிகப் பெரும்பான்மையான ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் கூட்டுச் சேரா அந்தஸ்தை மதித்து நடத்தல்; அவற்றை இராணுவ-அரசியல் கூட்டணிகளுக்குள் சிக்கவைப்பதற்குச் செய்யப்படும் முயற்சிகளை நிராகரித்தல்.

கூட்டுச் சேரா இயக்கத்தை, ஒரு செல்வாக்குள்ள அரசியல் சக்தியாகக் கருதுகிறீர்களா?

நிச்சயமாகக் கருதுகிறோம். கூட்டுச் சேரா இயக்கம் தோன்றி இருபது ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இந்தக் காலகட்டத்தில் அது, சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான போராட்டத்தில் தனது பயனுறுதித் தன்மையை நிரூபித்துக் காட்டியுள்ளது. இந்த இயக்கம் வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கிறது. 1961 பிப்ரவரியில் பெல்கிரேடில் நடைபெற்ற இந்த இயக்கத்தின் முதல் மாநாட்டில் 25 நாடுகளைச் சேர்ந்த அரசுத் தலைவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்; ஆனால் 1983 மார்ச்சில் புது டில்லியில் நடைபெற்ற இவ்வியக்கத்தின் ஏழாவது மாநாட்டில் 101 நாடுகளையும் தேச விடுதலை இயக்கங்களையும் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

சோவியத் யூனியன் ஆரம்பத்திலிருந்தே கூட்டுச் சேரா இயக்கத்துக்கு தனது இதயபூர்வமான ஆதரவைத் தெரிவித்து வந்துள்ளது; நமது சகாப்தத்தின் மிக முக்கியமான விஷயங்களில் அதனுடன் ஒத்துழைத்திருக்கிறது. சர்வதேச நிலைமையை மேம்படுத்துவதற்குத் தொண்டாற்றிவரும் ஒரு முக்கியமான அம்சம் என்று கூட்டுச் சேரா இயக்கத்தை, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26-வது காங்கிரசில் (1981) சமர்ப்பிக்கப்பட்ட மத்தியக் கமிட்டியின் அறிக்கை வர்ணிக்கிறது. அநேக கூட்டுச் சேரா நாடுகளுடன் சோவியத் யூனியன் நேச உறவுகளைக் கொண்டிருக்கிறது; இந்த உறவுகள் இருதரப்புக்கும் அனுகூலமானவை; உலகில் ஸ்திரத் தன்மையைப் பேணிக்காக்கவும் இவை தொண்டாற்றுகின்றன.

வெவ்வேறு அரசியல் தன்மைகளைக் கொண்ட நாடுகள் கூட்டுச் சேரா இயக்கத்தில் இருப்பதைக் காண்கிறோம். கியூபா, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, வியத்நாம், லாவோஸ், யுகோஸ்லாவியா போன்ற சோஷலிச நாடுகளும், சோஷலிசப் பாதையில் சென்று கொண்டிருக்கும் நாடுகளும், பிற்போக்கு ஆட்சிகளைக் கொண்டிருக்கும்

தேசங்கள் உள்பட, முதலாளித்துவ அமைப்பைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் தேசங்களும் கூட்டுச் சேரா இயக்கத்தில் உறுப்பினர் களாய் உள்ளன. இதனுல் பல்வேறு சர்வதேசப் பிரச்சினைகளை அணுகுவதில் வித்தியாசங்களும், கருத்து வேறுபாடுகளும் தோன்றுவது முற்றிலும் இயல்பேயாகும்; குறிப்பாக சர்வதேசத் துறையில் தற்சமயம் எழுந்துள்ள நெருக்கடிக்கான காரணங்கள், இன்றைய சிக்கலான நிலைமையை மேம்படுத்துவதற்கான வழி முறைகள், உலகிலுள்ள குறிப்பிட்ட நெருக்கடி மையங்களை அகற்றுவதற்கான வழிமுறைகள் ஆகியவை சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. சில கூட்டுச் சேரா நாடுகள் பிரதேசத் தகராறு களிலும் ஈடுபட்டிருக்கின்றன. மேலும், இயக்கத்தில் உறுப்பினராக இருக்கும் பல நாடுகள்,பல்வேறு காரணங்களின் விளைவாக, மாறுபட்ட பொருளாதார வளர்ச்சி மட்டங்களைக் கொண்டிருக்கின்றன. எனினும், இந்த வித்தியாசங்கள் இருந்தபோதிலும், கூட்டுச் சேரா நாடுகள் அனைத்தும் ஒரு பொதுவான இலட்சியத்தால்—ஏகாதிபத்தியத் தையும், காலனி மற்றும் நவீன காலனியாதிக்கத்தையும் இன ஒதுக் கலையும், ஜியோனிசம் உட்பட சகல இனவெறி வடிவங்களையும், அன்னிய ஆக்கிரமிப்பின் சகல வடிவங்களையும் எதிர்த்துப் போராடுதல் என்ற பொது இலட்சியத்தால்—ஒன்றுகப் பிணைக்கப்பட்டிருக் கின்றன.

அணு ஆயுதப் பேரழிவின் விளிம்பை நோக்கி உலகைத் தள்ளிக் கொண்டிருக்கும் சக்திகளின் சதித் திட்டங்களை, கூட்டுச் சேரா நாடுகள் மேன்மேலும் உறுதியுடன் எதிர்த்து வருகின்றன. டில்லி மாநாட்டின் தஸ்தாவேஜுகள் இதை மீண்டும் துலாம்பரமாக்கி உள்ளன; இந்த தஸ்தாவேஜுகள் சமாதானத்தை உறுதியுடன் பேணிக்காக்க அறைகூவல் விடுகின்றன. இந்து மாகடலை சமாதான மண்டலமாக்க வேண்டும் என்ற முயற்சியிலும் கூட்டுச் சேரா நாடுகள் பெரும் பாத்திரம் வகிக்கின்றன. புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கும் இந்த இயக்கம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அத்தகைய அமைப்பு ஏற்படுத்தப் பட்டால், வளர்முக நாடுகளின் இயற்கைச் செல்வாதாரங்களைத் தொடர்ந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கும், அந்நாடுகளின் உழைக்கும் மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டிக் கொண்டிருக்கும் பன்னுட்டுக் கார்ப்பரேஷன்களின் கொடுங் கொள்ளைச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கமுடியும்

சர்வதேச உறவுகள் சம்பந்தமான தலையாய பிரச்சினைகளில், குறிப்பாக, சமாதானத்தைப் பேணிக் காத்தல், புதிய உலகப் போர் ஏற்படாவண்ணம் தடுத்தல் போன்ற பிரச்சினைகளில் சோஷலிச மற்றும் கூட்டுச் சேரா நாடுகளின் கருத்துக்கள் இசைவாகவோ அல்லது ஒரே மாதிரியாகவோ இருக்கின்றன என்பது குறிப்பிடத்

தக்கது. மேற்கு நாடுகளிலுள்ள ஆக்கிரமிப்பு வட்டாரங்கள் இதைக் கண்டு ஆத்திரம் அடைகின்றன; எனவே, சோஷலிச நாடுகளுக்கும் கூட்டுச் சேரா இயக்கத்துக்குமிடையேயுள்ள ஒத்துழைப்பை சீர்குலைக்க அவை சகல வழிகளிலும் முயன்று கொண்டிருக்கின்றன. கூட்டுச்சேரா இயக்கத்தின் ஒற்றுமையைக் குலைக்கவும், அதன் அணிகளில் பிணக்கு ஏற்படுத்தவும் ஏகாதிபத்தியவாதிகள் இடையறாது முயன்று கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இந்த முயற்சிகள் அனைத்தும் கிஞ்சித்தும் பலிக்கவில்லை; டில்லி மாநாட்டின் முடிவுகள் இதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டன. கூட்டுச் சேரா இயக்கம், சர்வதேச உறவுகளை மேம்படுத்து வதற்கு முக்கியமான பங்குப்பணி ஆற்றியது; தொடர்ந்து ஆற்றி வருகிறது.

புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்து வதற்காக வளர்முக நாடுகள் நடத்திவரும் போராட்டத்தின்பால் சோவியத் யூனியனின் கண்ணோட்டம் யாது?

அரசுரிமை, சமத்துவம், பரஸ்பர அனுகூலம் ஆகியவற்றை மதித்து நடத்தல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் சர்வதேசப் பொரு ளாதார உறவுகள் தீவிரமாக மாற்றியமைக்கப்படுவதை நாங்கள் ஆதரிக்கிறோம். வளர்முக நாடுகளின் பொருளாதார சார்பு நிலைக்கு இது முற்றுப் புள்ளி வைக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று வளர்முக நாடுகள் எழுப்பியிருக்கும் கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்; இந்தப் பிரச்சினையைப் பற்றி, ஐ. நா. கட்டுக்கோப் பிற்குள் "உலக அளவிலான பேச்சுவார்த்தைகளை" நடத்த வேண்டு மென்ற கோட்பாட்டையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

புதிய சர்வதேசப் பொருளாதார உறவுகளை, நியாயமும் நேர்மையு மான இத்தகைய உறவுகளை ஏற்படுத்துவது சம்பந்தமான அடிப்படைக் கருத்துக்கள், 1974-ல் ஐ. நா. ஏற்றுக் கொண்ட கொள்கை தஸ்தாவேஜுகள் பலவற்றிலும் பொதிந்திருப்பதைக் காணலாம். அரசுகளின் பொருளாதார உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய சாசனம்,வளர்முக நாடுகளால்—77 நாடுகளின் குழுவால்—பிரரேபிக்கப் பட்ட, புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவது பற்றிய பிரகடனம், செயல் திட்டம் ஆகியன இந்த தஸ்தாவேஜு களில் அடங்கும். சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் அவற்றை செயலூக்கமுடன் ஆதரித்தன. ஆனால், இந்த ஐ. நா. தஸ்தாவேஜுகள் அமல் நடத்தப்படுவதை முக்கியமான முதலாளித்துவ நாடுகள், எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்கா, கடந்த பத்தாண்டு

களுக்கும் அதிகமாகவே உறுதியாக எதிர்த்து வந்துள்ளன; தங்களுக்குக் கொள்ளை லாபம் அளிக்கும் கொள்கையில் தான் அவை அக்கறை கொண்டுள்ளன.

வளர்முக நாடுகள் பன்னெடுங் காலமாய் பின்தங்கிக் கிடந்ததற்கு, முன்னாள் காலனி ஆதிக்க நாடுகள் தான் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் நாம் இங்கே வலியுறுத்த வேண்டியது அவசியம்; ஏகாதிபத்திய நாடுகளின் கொள்கையிலிருந்தும், சர்வதேச ஏகபோகங்களின் நடவடிக்கையிலிருந்தும் இதைத் தனியாகப் பிரிக்க முடியாது. எனவே, வளர்முக நாடுகளின் கஷ்டங்களுக்கெல்லாம் மூலகாரணமாக இருந்த ஏகாதிபத்திய காலனி ஆதிக்க நாடுகள், காலனிக் கொள்ளை மற்றும் நவீன காலனியாதிக்கச் சுரண்டலின் மூலம் அந்நாடுகளுக்குத் தாமிழைத்த பெருஞ்சேதங்களுக்கு நஷ்டஈடாக தொழில் வளர்ச்சிக்குப் பெரும் உதவி புரிய வேண்டுமென்றும், வளர்முக நாடுகளின் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்றும், சர்வதேச அபிவிருத்திக் கடன் உதவி சுலபமாகக் கிடைக்க வகை செய்ய வேண்டுமென்றும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகள் விடுத்திருக்கும் கோரிக்கை முற்றிலும் நியாயமானது என்று நாங்கள் கருதுகிறோம்.

வளர்முக நாடுகள் தம்முடைய தேசப் பொருளாதாரங்களைக் கட்டி நிர்மாணிப்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் தம்மாலியன்றளவு பொருளாதார தொழில் நுட்ப உதவியை எப்போதும் அளித்து வந்துள்ளன; இப்போதும் தொடர்ந்து அளித்து வருகின்றன.

வளர்முக நாடுகளில் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின் நடவடிக்கைகளை நீங்கள் ஏன் கண்டிக்கிறீர்கள்? இளம் நாடுகள் பொருளாதார, சமூகத்துறையில் முன்னேற அவை உதவி செய்யவில்லையா?

வளர்முக நாடுகள் பொருளாதார, சமூகத் துறைகளில் செழித்து முன்னேற வேண்டும் என்ற நோக்குடன் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்கள் அந்நாடுகளில் செயலாற்றிக் கொண்டிருக்கவில்லை. கொள்ளைலாபம் அடிப்பதுதான் ஏகபோக மூலதனத்தின் முழு முதல் நோக்கம். இந்தக் குறிக்கோளுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்கள், பொருளாதாரத் துறையில் இருக்கும் காலனி ஆதிக்கப் பிடிப்பு விலகுவதை எதார்த்த நடைமுறையில் எதிர்க்கின்றன; முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளுடன் சமத்துவ அடிப்படையில் செயல்படவும் மறுக்கின்றன. உதாரணமாக, மூலப் பொருள்களுக்கு அவை அளிக்கும் விலையிலுள்ள தில்லுமுல்லுகளைச் சற்றே கவனிப்

போம். இருபது ஆண்டுகளுக்கு முன்னர், முதலாளித்துவ சந்தையில் 25 டன் இயற்கை ரப்பரை விற்றுவரும் பணத்தைக் கொண்டு ஆறு டிராக்டர்களை வாங்கமுடிந்தது. ஆனுல் இன்றே இரண்டு டிராக்டர்களை மட்டுமே வாங்க முடியும். ரப்பரை ஏற்றுமதி செய்யும் நாடுகள் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாகின்றன என்பது இதிலிருந்து தெளிவு. வளர்முகஉலகில்தற்சமயம் இருந்துவரும் உணவுநெருக்கடியையும்சற்றே பரிசீலிப்போம். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் வழக்க மாக உணவு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்த மிகப்பரந்த பிரதேசங்களில், பன்னுட்டுக் கார்ப்பரேஷன்களின் நிர்ப்பந்தம் காரணமாக, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்குத் தேவையான காபி, ரப்பர், பருத்தி, சணல் மற்றும் இதுபோன்ற தொழில்துறைப் பண்டங்கள் சாகுபடி செய்யப்பட்டன. இதன் விளைவாக, முன்பு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்துவந்த நாடுகள் இப்போது அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. உதாரணமாக பிரேஜிலில், அமெரிக்க ஏகபோகங்கள் சோயா மொச்சையின் உற்பத்தியை அதிகரித்து, அவற்றைக் கால்நடைத் தீவனமாக அமெரிக்க சந்தையில் விற்கின்றன. இதனுல் பிரேஜில் நாட்டு ஏழை மக்கள் வழக்கமாக சாப்பிடும் உணவுப் பொருள்களின் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது.

வளர்முக நாடுகளுக்குக் "கழிசடை"யான தொழில்துறைகளை ஏற்றுமதி செய்வது பன்னுட்டுக் கார்ப்பரேஷன்கள் கடைப்பிடித்து வரும் மற்றெரு தந்திர மோசடியாகும். சுற்றுச்சூழலை மிகவும் பாதிக்கும் தொழிற்சாலைகளை வளர்முக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பன்னுட்டுக் கர்ப்பரேஷன்கள் சல்லிக்காசும் செலவு செய்யாமல் தப்பித்துக் கொள்கின்றன. இவ்விதம் அமெரிக்க ஏகபோகங்கள் மட்டும் 1982-ல் 900 கோடி டாலர்களை நிகர லாபமாக வளர்முக நாடுகளிலிருந்து கொள்ளையடித்துச் சென்றுள்ளன.

கடந்த 20 ஆண்டுகளில், வளர்முக நாடுகளில் பன்னுட்டுக் கார்ப்பரேஷன்கள் அடித்த கொள்ளை லாபம், அந்நாடுகளில் முதலீடு செய்யப்பட்ட அன்னிய மூலதனத்தைக் காட்டிலும் 80 சதமானம் கூடுதலாக இருந்தது.

நிதித்துறையில் வளர்முக நாடுகள் அனுபவித்து வரும் கஷ்டங் களுக்கும் பன்னுட்டுக் கார்ப்பரேஷன்கள்தான் பெரும்பாலும் பொறுப்பாக உள்ளன. அமெரிக்க அரசாங்கத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன், பெரிய முதலாளித்துவ வங்கிகள், தாம் கொடுக்கும் கடன் தொகைகளுக்கான வட்டி விகிதங்களை அதிகரிக்கின்றன; டாலரின் பரிவர்த்தனை விகிதத்தை உயர்த்துகின்றன; ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, மேலைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படும் ஆலை உற்பத்திப் பண்டங்களின் விலைகளை அதிகரிக்கின்றன;

அதே சமயம் வளர்முக நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மூலப் பொருள்களின் விலைகளை அடிமட்டத்திற்குக் குறைக்கின்றன; பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின் இத்தகைய கைங்கர்யங்களின் விளைவாக, அந்த வளர்முக நாடுகளின் கடன் சுமை ஆண்டிற்காண்டு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

உதாரணமாக, அமெரிக்க வங்கிகள் தமது வட்டி விகிதத்தை ஒரு சதவிகிதம் அதிகரித்தாலே, வளர்முக நாடுகளின் கடன் சுமை 400 கோடி டாலர்கள் அதிகரிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1984-ல் மட்டும் வட்டி விகிதங்கள் இரண்டு சதவிகிதம் உயர்ந்துள்ளன.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மொத்தக் கடன் தொகை 1984-ல் 81,000 கோடி டாலர்களாக இருந்தது

''கடன் நெருக்கடி'' நிலைமைகளில், பெரிய சர்வதேச வங்கிகள் கடன் வாங்கிய நாடுகள் மீது (உதாரணம் மெக்சிகோ, பிரேஜில்), கடன் ஒத்திவைப்புக்காக மிகவும் கடுமையான ஷரத்துக்களை விதிக்கின்றன. இதன் விளைவாக, அந்த நாடுகளில் உழைக்கும் மக்களுடைய உண்மை வருவாய்கள் வெட்டப்படுகின்றன; அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத இறக்குமதிகளும் குறைக்கப்படுகின்றன.

படைக்குறைப்பை, உலகின் மிகவும் அதி அவசரமான பிரச்சினைகளில் ஒன்றாக நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால் வளர்முக நாடுகளுக்கு, அவற்றுக்கே உரிய இதர முக்கியமான பிரச்சினைகள் உள்ளன. எனவே, வல்லரசுகளும் ஐரோப்பியர்களும்தான் படைக்குறைப்பைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

வளர்முக நாடுகள் பல கஷ்டமான பிரச்சினைகளை எதிர்க் கொண்டுள்ளன என்பது உண்மையே; அவையெல்லாம் கடந்த காலம் விட்டுச் சென்ற எச்சமிச்சங்கள். ஆனால், அணுவியல் சகாப்தத்தில், குறிப்பாக, சர்வதேச நிலைமை படுமோசமாக உள்ள இன்றைய சூழ்நிலையில், ஆயுதப் போட்டியினால், எல்லாவற்றுக்கும் மேலாக அணு ஆயுதப் போட்டியினால், புதிய உலக யுத்தம் வெடிக்கும் அபாயம் அதிகரித்துள்ளது; இதனால் மனிதகுல நாகரிகமே அழிந்து போகும் அச்சுறுத்தலும் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், ஆயுதப் போட்டியை கட்டுப்படுத்துவதைக் காட்டிலும், அணு ஆயுதப் போரைத் தடுப்பதைக் காட்டிலும் இன்று மனிதகுலத்துக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த கடமை வேறெதுவும் இல்லை.

ஏகாதிபத்திய நாடுகளால் அரங்கேற்றம் செய்யப்பட்ட ஆயுதப் போட்டி, இப்போது ஒரு தொத்து நோய்போல ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவெங்கிலும் வெகு வேகமாய்ப் பரவிக் கொண்டிருக்கிறது. ஆயுத தளவாடங்களுக்காக வளர்முக நாடுகள் ஆண்டு தோறும் சுமார் 10,000 கோடி டாலர்களைச் செலவழிக்கின்றன. முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் 1982-ல் வளர்முக நாடுகளில் முதலிடு செய்த (சுலபமான மற்றும் கடினமான வட்டி விகிதங்களுடன் அளிக்கப்பட்ட கடன் தொகைகள்) மூலதனத்தைக் காட்டிலும் இந்தத் தொகை மிகவும் அதிகமாகும்.

புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளின் சமூக-பொருளாதார வளர்ச்சிமீது ஆயுதப் போட்டி எத்தகைய விளைவை ஏற்படுத்துகிறது? ஓலஃப் பாமி தலைமையில் அமைக்கப்பட்ட படைக்குறைப்பு மற்றும் பந்தோபஸ்து பற்றிய கமிஷன் இவ்விஷயம் பற்றி இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளது; ஆயுதத் தளவாடங்களை வாங்குவதில் வளர்முக நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் போட்டியின் விளைவாக, பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான அவற்றின் மிதமான செல்வாதாரங்கள், இராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திருப்பி விடப்படுகின்றன.

ஆயுத தளவாடங்களை மேன்மேலும் கூடுதலாக வாங்குவதால், வளர்முக நாடுகளின் பலவீனமான பொருளாதாரம் மேலும் நசித்துப் போகிறது; அவற்றின் சேர்ப்பு நிதி தேய்கிறது; தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் ஆக்கப் பணிகளிலிருந்து வேறுபக்கம் திருப்பிவிடப் படுகின்றனர்; அன்னிய நாணயச் செலாவணி இருப்புக்கள் விரயம் செய்யப்படுகின்றன; இதனால் பொருளாதார வளர்ச்சி வீதம் மந்தமடைகிறது.

ஆயுதப் போட்டி, வளர்முக நாடுகளுக்குத் தாங்க முடியாத பெரும் சுமையாகும். ஆயுதப் போட்டியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தினால்கூட, புதிதாக விடுதலைபெற்ற நாடுகளால், குறிப்பாக ஏழ்மையில் சிக்கியிருக்கும் பின்தங்கிய நாடுகளால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் குறிப்பிடத்தக்க சமூக-பொருளாதார முன்னேற்றத்தை சாதிக்கமுடியும் என்று ஐ. நா. நிபுணர்கள் அண்மையில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

உலகு தழுவிய அளவிலும், உலகின் தனித்தனியான பிராந்தியங்களிலும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் உறுதியாக அறைகூவல் விடுத்து வந்துள்ளது. படைக்குறைப்பு நடவடிக்கைகளை அமல்படுத்தியதன் விளைவாகக் கிடைக்கும் நிதிகளை, எல்லா நாடுகளின் பொருளாதார சமூக அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்தவும், முன்னேறிய மற்றும் வளர்முக நாடுகளுக்கிடையேயுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வைக்

குறைக்கவும் பயன்படுத்தவேண்டுமென்றும் அது வற்புறுத்தி வந்துள்ளது.

பெரிய படைபலம் கொண்ட நாடுகளின் இராணுவச் செலவைக் குறைப்பதால் மிச்சப்படும் தொகையில் ஒரு கணிசமான அளவை, வளர்முக நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன் படுத்தவேண்டும் என்று ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத் தொடர்களில் சோவியத் யூனியன் திரும்பத் திரும்பப் பிரேரணைகளை சமர்ப் பித்துள்ளது. ஆனால் இந்த சோவியத் முன்முயற்சிகளை மேலைய நாடுகள் ஏறெடுத்தும் பார்க்காமல் நிராகரித்துவிட்டன.

சோவியத் அயல்நுறைக் கொள்கை முன்முயற்சிகளைப் பற்றி எவ்வளவோ கூறப்பட்டுள்ளது. இதர நாடுகளின், குறிப்பாக வளர்முக நாடுகளின், சமாதான முன்முயற்சிகளைப்பற்றி சோவியத் யூனியனின் கருத்து யாது?

சமாதானத்துக்காகப் போராடும் வீரர்களின் முன் வரிசையில் சோவியத் யூனியன் அணிவகுத்து நிற்பது அனைவரும் அறிந்ததே. யுத்தத்திற்குப் பிந்திய கடந்த நாற்பதாண்டுகளில், சமாதானத்தையும் சர்வதேச பந்தோபஸ்தையும் பலப்படுத்துவதை நோக்கமாய்க் கொண்ட நூறுக்கும் குறையாத முன்முயற்சிகளை, ஐக்கிய நாடுகள் சபையில் மட்டுமே எங்கள் நாடு எடுத்திருக்கிறது.

அதே சமயம், வளர்முக நாடுகள் உள்பட, ஏனைய நாடுகள் முன்வைக்கும் ஆக்கபூர்வமான சமாதானப் பிரேரணைகளையும் சோவியத் யூனியன் ஆதரிக்கிறது. உலகு தழுவிய அளவிலோ அல்லது குறிப்பிட்ட பிராந்தியங்களிலோ உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும் சமாதான முன்முயற்சிகளை—அவற்றை வெளியிட்டவர் யாராக இருந்தாலும் சரி, அத்தகைய எல்லா முன் முயற்சிகளையும்—நாங்கள் எப்போதுமே ஆதரித்து வந்துள்ளோம்; தொடர்ந்து இப்போதும் ஆதரிக்கிறோம். இதோ ஒரு சில உதாரணங்கள்:

அணு ஆயுதங்களின் உற்பத்தியை நிறுத்த வேண்டுமென்றும், அவற்றின் கையிருப்புக்களைக் குறைக்கத் தொடங்க வேண்டுமென்றும் எல்லா அணு ஆயுத நாடுகளுக்கும் அர்ஜென்டைனா, கிரீஸ், இந்தியா, மெக்சிகோ, டான்ஜானியா, ஸ்வீடன் ஆகிய ஆறு நாடுகள் 1984 மே மாதத்தில் விடுத்த வேண்டுகோளை சோவியத் யூனியன் ஏற்றுக் கொண்டது.

மத்திய அமெரிக்காவில் அபாயகரமான மோதல்களுக்கு அரசியல் தீர்வுகாணும் நோக்குடன் வெனிஜுலா, கொலம்பியா, மெக்சிகோ,

பெருமா ஆகிய நாடுகளைக்கொண்ட கன்டடோரா குழு மேற்கொண்ட முயற்சிகளுக்கும் சோவியத் யூனியன் ஆதரவு அளிக்கிறது.

இந்து மாகடலில் ஒரு சமாதான மண்டலத்தை உருவாக்க வேண்டுமெனக் கூட்டுச் சேரா நாடுகள் முன்வைத்திருக்கும் பிரேரணையையும் சோவியத் யூனியன் முழுமனதுடன் ஆதரிக்கிறது.

இறுதியாக, உலகின் பல்வேறு மண்டலங்களில், குறிப்பாக ஆசியா, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில், அணு ஆயுத சூன்ய மண்டலங்களையும், சமாதான மண்டலங்களையும் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தையும் சோவியத் யூனியன் ஆதரிக்கிறது.

மிகப் பெரும்பாலான சர்வதேச அரசியல் பிரச்சினைகளில் சோவியத் யூனியனுடைய நிலையும், வளர்முக நாடுகளின் நிலையும் இசைவுப் பொருத்தமாகவோ அல்லது ஒரே மாதிரியாகவோ உள்ளன. உதாரணமாக, சோவியத் அயல்துறைக் கொள்கை முன்முயற்சிகளும், கூட்டுச் சேரா நாடுகளின் டில்லி மாநாடு வெளியிட்ட தஸ்தாவேஜுகளும் பல அம்சங்களில் ஒன்றுடன் ஒன்று இசைந்து பொருந்தி உள்ளன.

சோவியத் யூனியன் ஐரோப்பாவில் பதற்றத் தணிவுக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறது என்றும், ஆனல் ஆசிய ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்காவில் மோதல் நிலைமைகள் தொடர்ந்து இருந்து வருவதை சகித்துக் கொள்ளலாம் எனக் கருதுகிறது என்றும் கூறப்படுவது சரியா?

இல்லை, சோவியத் யூனியனுடைய நிலை அதுவல்ல.

சோவியத் யூனியன் ஐரோப்பியப் பிரச்சினைகளுக்கு முழு முதல் முக்கியத்துவம் அளிப்பது உண்மையே. இரண்டு உலகப் போர்களும் ஐரோப்பாவில்தான் குமுறி வெடித்தன. இரண்டு பிரதான இராணுவ அரசியல் அணி வகுப்புகள்— **நேட்டோ**, வார்சா ஒப்பந்தம்—நேரடியாக ஒன்றையொன்று எதிர்த்து நின்று கொண்டிருப்பதும் ஐரோப்பாவில்தான். இறுதியாக, ஐரோப்பாவில் தான் அணு ஆயுதங்கள் பெரும் அளவில் குவித்து வைப்பட்டிருக்கின்றன. அவை பயன்படுத்தப்பட்டால் உலகிலுள்ள ஜீவராசிகளே அழிந்து போகும்.

இதனல், உலகின் இதர பகுதிகளில் மோதல் நிலைமைகள் தொடர்ந்து இருந்து வருவது சகித்துக் கொள்ளக் கூடியதே என்று சோவியத் யூனியன் கருதுகிறது என்று அர்த்தமல்ல. இன்றைய நிலைமைகளில், வட்டார மோதல்கள் கூட உலகு தழுவிய அணு ஆயுதப் போராக மாறிவிடக் கூடும் என்பதை மனதிற் கொண்டு, வட்டார மோதல்களுக்கும் சமாதான முறைகளின் மூலம் தீர்வு காணவே

சோவியத் யூனியன் எப்போதும் முயன்று வந்துள்ளது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்த மோதல்களில், நாங்கள் எப்போதுமே ஆக்கிரமிப்புக்கு பலியான தரப்பையே ஆதரித்து வந்துள்ளோம்; அதற்கு முழு உதவி அளித்துள்ளோம்; ஆக்கிரமிப்பாளனை வன்மையாகக் கண்டித்திருக்கிறோம்.

இந்திய பாகிஸ்தான் மோதலுக்கும் (1965) மத்தியக் கிழக்கு நெருக்கடிக்கும் தீர்வு காண்பதை நோக்கமாய்க் கொண்ட பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு சோவியத் யூனியன் முன்முயற்சி எடுத்துள்ளது; இத்தகைய பிரச்சினைகள் சம்பந்தமான சர்வதேச மாநாடுகளிலும் செயலூக்கமுடன் பங்கெடுத்துள்ளது. ஆப்கானிஸ்தானைச் சுற்றியுள்ள நிலைமைக்கு அரசியல் தீர்வு காணவும் சோவியத் யூனியன் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது; மத்தியக் கிழக்கு மோதலுக்கு உண்மையிலேயே நேர்மையான அரசியல் தீர்வு காண்பதற்காகவும், ஈரான்-ஈராக் போருக்கு விரைவில் முடிவு காண்பதற்காகவும் சோவியத் யூனியன் அலுப்பு சலிப்பின்றி முயன்று வருகிறது. மத்திய அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் மோதல் நிலைமைக்கு அரசியல் தீர்வு காண்பதை நோக்கமாய்க் கொண்ட முயற்சிகளையும் சோவியத் யூனியன் உறுதியாக ஆதரிக்கிறது.

மோதலில் நேரடியாக ஈடுபட்டுள்ள இருதரப்புக்களின் நலன்களையும் முழுமையாகக் கணக்கிலெடுத்துக் கொண்டு, சர்வதேச பந்தோபஸ்தை பலப்படுத்துவதென்ற பொதுவான நோக்கங்களையும் பேணிக் காக்கும் விதத்தில், எல்லாப் பூசல்களுக்கும் சமாதான முறைகளின் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும், தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எனவே, எல்லாக் கண்டங்களிலும் நெருக்கடி நிலையைத் தணிப்பதற்காகவே பாடுபட சோவியத் யூனியன் உறுதி பூண்டுள்ளது. இதற்காக வேலை செய்ய வேண்டியது அவசியமாகும்; ஏனெனில், ஏகாதிபத்திய சக்திகள் தமது விருப்பத்தை இதர நாடுகள் மீது திணிப்பதற்கு முயன்று கொண்டிருக்கும் பிரதேசங்களில், நிலையான சமாதானத்தை நோக்கி முன்னேறுவது உண்மையிலேயே மிகக் கடினமாகும். அது கஷ்டம் தான், என்றாலும் இன்றியமையாதது; ஏனெனில், சமாதானத்தையும் நாடுகளின் பந்தோபஸ்தையும் தனித்தனியே பிரிக்க முடியாது; அவை இரண்டற பின்னிப்பிணைந்துள்ளன.

சோவியத் யூனியன் மற்றும் ஏனைய சி. எம். இ. ஏ. நாடுகளின் அயல்துறைப் பொருளாதார உறவுகளில் வளர்முக நாடுகள் எத்தகைய பாத்திரம் வகிக்கின்றன?

பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சிலின் (சிம். எம். இ. ஏ.) உறுப்பினர் நாடுகள், தற்சமயம் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன்

அமெரிக்காவிலுள்ள நூற்றுக்கும் அதிகமான வளர்முக நாடுகளுக்கு (1962-ல் இவற்றின் எண்ணிக்கை 34 ஆகும்) பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப உதவி அளித்துக் கொண்டிருக்கின்றன. சோவியத் யூனியன் 70 நாடுகளுடன் (1961-ல் இவை 18தான்) ஒத்துழைப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கிறது. இந்த நாடுகளில் சி எம் இ ஏ நாடுகளின் உதவியுடன் 6,000-க்கும் அதிகமான தொழிலியல் மற்றும் பொருளாதாரத் திட்ட நிலையங்கள் கட்டியமைக்கப்பட்டிருக்கின்றன; அல்லது கட்டப்பட்டு வருகின்றன. இந்தத் திட்ட நிலையங்கள் அனைத்தும் அந்தந்த வளர்முக நாடுகளுக்கே முற்றமுழுக்க சொந்தமாகும்.

வளர்முக நாடுகள் எரிசக்தி, மின்சாரம் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கும், தொழிற் கேந்திரங்களை அமைப்பதற்கும், தமது விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், கனி வளங்களை வெட்டி எடுப்பதற்கும், தேசிய ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் உதவி செய்வதே சிஎம்இஏ நாடுகளுடைய ஒத்துழைப்பின் அடிப்படை நோக்கமாகும்.

இத்தகைய ஒத்துழைப்பின் காரணமாக வளர்முக நாடுகள் முன்னேற்றமான முறைகளில் தமது பொருளாதாரங்களைப் புனரமைத்துக் கொள்வதும், கேந்திரமான அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாய்த் தீர்வு காண்பதும் சாத்தியமாகிறது.

தம்து தேசியத் தொழிற்துறையை அமைத்துக் கொள்ளவும், தம்முடைய பொருளாதாரத்தை மேலும் வளர்ப்பதற்கான அடிப்படைகளைக் கட்டி நிர்மாணிக்கவும் பல வளர்முக நாடுகளுக்கு சோவியத் யூனியனும் ஏனைய சிஎம்இஏ நாடுகளும் உதவி செய்துள்ளன. சோவியத் யூனியனின் உதவியினால் மட்டும் நிர்மாணிக்கப்பட்ட திட்டநிலையங்கள், இப்போது இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த உருக்கில் ஏறத்தாழ 35 சதவீதத்தையும், ஈரானில் உற்பத்தியாவதில் சுமார் 90 சதவீதத்தையும், எகிப்தில் 65-க்கும் அதிகமான சதவீதத்தையும் உற்பத்தி செய்கின்றன; சோவியத் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மின் நிலையங்கள் சிரியாவில் உற்பத்தியாகும் மொத்த மின் சக்தியில் 60 சதவீதத்தையும், ஆப்கனிஸ்தானில் 50 சதவீதத்தையும் ஈராக்கில் சுமார் 55 சதவீதத்தையும் உற்பத்தி செய்கின்றன.

வளர்முக நாடுகளில் மொத்தம் 236 பயிற்சி மற்றும் கல்விக் கேந்திரங்களையும், 49 மேற்கல்வி நிலையங்களையும், விசேஷ செகண்டரிப் பள்ளிகளையும் நிர்மாணிக்க சோவியத் யூனியன் உதவி செய்திருக்கிறது. இந்த நாடுகளைச் சேர்ந்த சுமார் 15 லட்சம் பேர் சோவியத் உதவியுடன் பல்வேறு தொழில் நுட்பங்களையும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

சோஷலிச நாடுகளின் உதவி, வளர்முக நாடுகளின் பொதுத் துறையைக் கட்டி நிர்மாணிப்பதையே பிரதான நோக்கமாய்க்

கொண்டிருக்கின்றது; இதனால் அந்நாடுகள் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின் மீது அதிகம் சார்ந்திராமல் செயலாற்ற முடிகிறது; உள்நாட்டிலுள்ள தனியார் மூலதனத்தின்மீதும் அதிகக் கட்டுப்பாடு விதிப்பது இதனால் சாத்தியமாகிறது. குறிப்பாக, இந்தியப் பொருளாதாரத்திலும், அல்ஜீரியா, ஈராக் நாடுகளிலுள்ள சுரங்க மற்றும் எண்ணெய், எரிவாயுத் துறைகளிலும் இந்தத் தனித்தன்மை தெளிவாகப் புலனாகிறது. மிகப்பெரிய உலோக உற்பத்தித் தொழிற்சாலையை நைஜீரியாவிலும், பாக்சைட் சுரங்கத் தொகுதியை கினியிலும், ஏராளமான நீர்மின் நிலையங்களை லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் நிர்மாணிப்பதற்கு சிஎம்இஏ நாடுகள் உதவிக் கொண்டிருக்கின்றன.

இருதரப்பினருக்குமிடையேயுள்ள உறவுகளை முறைப்படுத்துவதற்கான அமைப்பு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்ப ஒத்துழைப்புகான அரசாங்கங்களுக்கிடைப்பட்ட இருதரப்புக் கமிஷன்கள் இந்த விஷயத்தில் மிகவும் முக்கியமான பாத்திரம் வகிக்கின்றன. சம்பந்தப்பட்ட துறைகளில் நடப்பு மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகளைப் பற்றி அவை பரிசீலிக்கின்றன; பொருளாதாரப் பிணைப்புகளுக்கான மண்டலங்களையும் வடிவங்களையும் வகுத்துத் தருகின்றன. சிஎம்இஏ நாடுகளும், இந்தியா, அங்கோலா, லிபியா, மொராக்கோ, டுனிஷியா, மெக்சிகோ, எத்தியோப்பியா உள்பட பல வளர்முக நாடுகளும் ஒன்றாக இத்தகைய கமிஷன்களை நிறுவியுள்ளன.

சிஎம்இஏ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையே வர்த்தகமும் பெருகிக் கொண்டிருக்கிறது. 1970-1981 ஆம் வருடங்களில், இந்நாடுகளுக்கிடையே நடைபெற்ற வர்த்தகத்தின் பரிமாணம் ஆறு மடங்கு அதிகரித்து, ஆண்டொன்றுக்கு 3,000 கோடி ரூபிள் அளவை (சுமார் 4,500 கோடி டாலர்) எட்டியுள்ளது. சர்வதேச வர்த்தகத் துறையில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் படும் அவதியைப் போக்குவதற்காக, அந்நாடுகளிடமிருந்து சோஷலிச நாடுகள் சராசரி உலக சந்தை விலைகளைக் காட்டிலும் கூடுதலான விலையில் பண்டங்களை வாங்கிக் கொள்கின்றன. உதாரணமாக, சோவியத் யூனியன், 1965-ல் வளர்முக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த எல்லாப் பண்டங்கள் மீதும் சுங்க வரியை ரத்து செய்து விட்டது.

வளர்முக நாடுகளுடன் பொருளாதார, வர்த்தக, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பேணி வளர்ப்பதுதான், சோவியத் யூனியன் மற்றும் ஏனைய சோஷலிச நாடுகளது சர்வதேச நடவடிக்கையின் கேந்திர திசை வழிகளில் ஒன்றாகும் என்று இறுதியில் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். 1984 ஜூனில் மாஸ்கோவில் நடைபெற்ற சிஎம்இஏ உறுப்பினர் நாடுகளின் பொருளாதார மாநாடு விடுத்த அறிக்கை

இவ்வாறு குறிப்பிட்டதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: ''அணிசேரா நாடுகள் வளர்முக நாடுகளுடன் தமது ஒத்துழைப்பைத் தொடர்ந்து விஸ்தரித்து வரும்; ஏனெனில் இது அந்நாடுகளது தேசப் பொருளாதாரங்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும்; அவற்றின் பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்தும்; அவற்றிடையே பரஸ்பரம் அனுகூலமான பொருளாதாரப் பிணைப்புக்களைப் பேணி வளர்க்கும்.''

உங்களுடைய கண்ணோட்டத்தின்படி வளர்முக நாடுகளில் ஆயுதமேந்திய மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குப் பிரதான காரணங்கள் யாவை?

இதற்கான காரணங்கள் பன்முகப் பட்டவை. அங்கோலா, எத்தியோப்பியா, கம்பூச்சியா, ஆப்கனிஸ்தான், நிகராகுவா போன்ற பல வளர்முக நாடுகள், ஏகாதிபத்தியம் மற்றும் அதன் கைக்கூலிகளின் தாக்குதல்களிலிருந்து தம்முடைய அரசுரிமையைப் பாதுகாத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கின்றன. இந்நாடுகள் நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றன.

காலனி ஆதிக்கம் விட்டுச் சென்ற தீமைகள்தான், குறிப்பாக, தானடித்த மூப்பாக அது ஏற்படுத்தியிருந்த அரசு மற்றும் தேசிய இன எல்லைக் கோடுகள்தான் வளர்முக நாடுகளில் புகைந்து கொண்டிருக்கும் மோதல்கள், சண்டைகளின் அடிப்படைக் காரணங்களில் ஒன்ருகும். ஈரான்-ஈராக், இந்தியா-பாகிஸ்தான், மொராக்கோ-அல்ஜீரியா மற்றும் இது போன்ற நாடுகளுக்கிடையேயிருக்கும் பூசல்களை இதற்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம். தேசிய இன, பிரதேச மோதல்களைத் தவிர, வர்ண இன மற்றும் மதம் சம்பந்தப்பட்ட மோதல்களும் ஏற்படுகின்றன. இவற்றுக்கும் காலனி ஆதிக்கம் விட்டுச் சென்ற நஞ்சு தான் முக்கிய காரணமெனலாம். இத்தகைய மோதல்களுக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண முடியும் என்பதில் ஐயமில்லை. கூட்டுச்சேரா நாடுகள் இயக்கமும், ஆப்பிரிக்க ஒற்றுமைக்கான நிறுவனமும் இந்த நோக்கத்திற்காக அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள ஏராளமான நாடுகள் அரசியல், தேசிய இன, மதப்பூசல்களிலும் இதர தகராறு களிலும் வெவ்வேறு அளவுகளில் ஈடுபட்டிருக்கின்றன.

வளர்முக நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் பல தகராறு களுக்குத் தீர்வு காண முடியாமல் இருப்பதற்கு ஏகாதிபத்திய நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, எடுத்துவரும் நிலையும் முக்கிய காரணம் என்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இந்த மோதல்களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அவை

எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுகின்றன; பல சந்தர்ப்பங்களில் அவை அப்பட்டமாகத் தலையிடவும் செய்கின்றன. (லெபனான், சாட் நிகழ்ச்சிகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.) மத்தியக் கிழக்கு மற்றும் மத்திய அமெரிக்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுவதைப்போல, ஏகாதிபத்திய அரசுகளின் துரோகத்தனமான கொள்கையின் நேரடி விளைவாகவும் இத்தகைய மோதல்கள் ஏற்படக்கூடும்.

எவ்வாறாயும் அச்சுறுத்தப் படாமலிருக்கும் சில வளர்முக நாடுகள் கூட, யுத்தத் தயாரிப்புக்களில் ஈடுபட்டிருப்பதையும் அல்லது தமது அண்டை நாடுகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதையும் பார்க்கிறோம். தனது அரசுரிமையை நிலைநாட்டிக் கொள்வதில் இருக்கும் கஷ்டங்கள், உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள், தலைவர்களின் பேராசைகள், மேலைய நாடுகளுக்கு இராணுவ தளங்களை அளிப்பதன் மூலமும், ''பிராந்தியப் போலீஸ்காரன்'' போல நடந்து கொள்வதன் மூலமும் லெனின் சொற்களில் கூறினால், ''ஏகாதிபத்திய வல்லரசுகளின்'' நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளுதல் போன்ற பல காரணங்கள் இதற்கு இருக்கலாம். சோஷலிச எத்தியோப்பியா மீது சோமாலியா தொடுத்த தாக்குதல், குவாடிமாலா, ஹொண்டுரஸ் எல் சால்வடோர் ஆகிய நாடுகள் நிகராகுவாவுக்கு எதிராக எடுத்துவரும் ஆக்கிரமூட்டும் செயல்கள், ஆப்கன் எதிர்ப்புரட்சியாளர் களுக்கு பாகிஸ்தான் அளித்துவரும் ஆதரவு, எஞ்சியிருக்கும் போல்பாட் வீரர்களுக்கு தாய்லாந்து அளிக்கும் ஆதரவு முதலியன இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இன்னொர் அம்சத்தையும் இங்கே சுட்டிக் காட்டவேண்டும். குறிப்பிட்ட ஒரு நாட்டில் அல்லது பிராந்தியத்தில் உள்ள ஸ்திர நிலையைக் குலைக்கும் நோக்குடனும், இறுதியில் தமது நவீன காலனியாதிக்கக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் நோக்குடனும், வளர்முக நாடுகளில் குமுறி வெடிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு மோதல்களை ஏகாதிபத்திய வட்டாரங்கள் பயன்படுத்திக் கொள்ளும் பொழுது, இந்த மோதல்களின் உண்மையான மற்றும் சாத்தியமான பின்விளைவுகளைக் குறைத்து மதிப்பிட சகல வழிகளிலும் முயலுகின்றன; அந்த மோதல்களின் ஸ்தல அல்லது பிராந்தியத் தன்மையை வலியுறுத்தவே முற்படுகின்றன. ஆனால் இந்த அணுகுமுறைக்கும் எதார்த்தத்துக்கும் எள்ளளவு சம்பந்தமும் இல்லை.

1945 ஆம் ஆண்டுக்குப் பின்னர், முன்னாள் காலனி அல்லது அரைக் காலனி நாடுகளில் 150-க்கும் அதிகமான யுத்தங்களும் ஆயுதமேந்திய மோதல்களும் ஏற்பட்டிருக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றின் விளைவாக, ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் கொல்லப் பட்டார்கள்; மேலும் கோடிகணக்கான பேர் காயமுற்றார்கள் அல்லது முடமானார்கள்; வீடுவாசல்களை இழந்தவர்களின் எண்ணிக்கை

கோடானு கோடி. உதாரணமாக உகாண்டா, கம்பூச்சியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் தலைவிரித்தாடிய பஞ்சம், அங்கே ஏற்பட்ட போர் மற்றும் ஆயுதமேந்திய மோதல்களின் நேரடி விளைவாகும். ஸ்தல யுத்தங்களின் காரணமாக ஏற்படும் பொருளாயத இழப்பு பல்லாயிரம் கோடி டாலர் மட்டத்தையும் அடைய முடியும் என்பதற்கு, ஈரான்-ஈராக் நாடுகளுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடிய யுத்தம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

மேற்கூறிய பல சண்டைகளும் மோதல்களும் உலகப் போரையே மூட்டிவிடக் கூடிய சில சந்தர்ப்பங்களும் அபாயங்களும் இருந்தன என்பதையும் மறந்துவிடக் கூடாது. இத்தகைய யுத்தங்கள் மற்றும் மோதல்களின் போது, சோவியத் யூனியன் உள்பட பல நாடுகள் மீது, அணுகுண்டுகளை வீசுவதற்கான அவசியம் பற்றியும், சாத்தியப்பாடு பற்றியும் அமெரிக்க உச்சிமட்ட ஆளும் வட்டாரங்களில், ஒரு தடவையல்ல பன்முறை, விவாதிக்கப்பட்டது என்பது இப்போது உலகறிந்த ரகசியம். உதாரணமாக, 1973-ல், மத்தியக் கிழக்கில் நான்காவது அரபு-இஸ்ரேலியப் போர் நடைபெற்றபோது, இத்தகைய விவாதம் நடந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக, அச்சமயம் நிகழ்ச்சிகள் அணு ஆயுதப் போர் கட்டத்தை அடையவில்லை. ஆனால் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே பதற்றத்தணிவு நிலவும் போது, உச்சிமட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும் போது இருக்கும் நிலைமையைப் போலன்றி, நெருக்கடியும் பரஸ்பர சந்தேகமும் தலைவிரித்தாடும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிலைமை ஏற்பட்டால் என்ன கதி ஏற்படும்?

வளர்முக நாடுகளுக்கிடையே நடைபெறும் ஆயுதமேந்திய மோதல்கள் அந்நாடுகளுக்கு அளப்பரிய துன்ப துயரங்களை விளைவிப்பது மட்டுமன்றி அணு ஆயுத உலகப் போருக்கும் வழிகோல முடியும் என்பதையும் கண்டோம்.

3. சமாதானப் போராட்டம், படைக்குறைப்புப் பிரச்சினைகள்

படைக்குறைப்பு சாத்தியம்தான் என்று கருதுகிறீர்களா?

ஆம், சாத்தியமே என்று கருதுகிறோம். மனித இன வரலாறு நெடுகிலும் போர்கள் நடைபெற்றுக்கொண்டே வந்திருந்த போதிலும், மேன் மேலும் புது ரகமான ஆயுதங்கள் செய்து குவிக்கப்பட்டு வந்த போதிலும், தம்முடைய சுதந்திரத்துக்கும் பந்தோபஸ்துக்கும் உறுதி அளிப்பதற்காக அத்தகைய ஆயுதங்களை அரசுகள் நம்பி வந்திருந்த போதிலும், படைக் குறைப்பு பற்றி விடுக்கப்பட்ட தனிப்பட்ட அறை கூவல்கள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகியிருந்த போதிலும், இப்போது படைக்குறைப்பு சாத்தியம்தான் என்று உறுதியாகக் கருதுகிறோம்.

இத்தகைய விவகாரங்கள் இனியும் தொடரக் கூடாது, தொடர முடியாது; ஏனெனில் நாம் அணு ஆயுத யுகத்தில் வசித்துக் கொண்டிருக்கிறோம். படை பலத்தை அடிப்படையாகக் கொண்டு பேசுவது வெறும் பயனற்றது என அணு ஆயுதங்கள் பறைசாட்டி விட்டன. கடந்த 39 ஆண்டுகளில் (1945-1984) உலகிலுள்ள அணுகுண்டுகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் விஞ்சி விட்டது; அது தொடர்ந்து பெருகிக் கொண்டே போகிறது. அணுகுண்டுகள் ஏற்றுமதி செய்யப் படுவதால், நிலைமை மேலும் மோசமாகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் சுமார் 25,000 அணுகுண்டுகளை அமெரிக்க இராணுவத் தலைமை நிலைப்படுத்தி வைத்திருப்பதாக அமெரிக்க வட்டாரங்களே கூறுகின்றன.

அணு ஆயுதங்களின் நாசசக்தி மேலும் பெருக்கப்படுவதால், அபாய அச்சுறுத்தல் இன்னும் அதிகமாகிறது. புதிய, ஒத்துப்பார்க்க இயலாத ஆயுத அமைப்புகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அது மட்டுமல்ல; அண்டவெளியில் அணு ஆயுதங்களை நிலைப்படுத்தி வைப்பதற்கான திட்டங்களும் தீட்டப்படுகின்றன. சுருங்கக்கூறின் படைக்குறைப்பை, எல்லாவற்றுக்கும் மேலாக, அணு ஆயுதப் படைக்

குறைப்பை, மனிதகுலத்துக்கு இன்றியமையாத அந்நியாவசியத் தேவை ஆக்கியிருக்கும் சூழ்நிலை தோன்றியிருக்கிறது.

எனவே, படைக்குறைப்பு அவசியம் என்பது தெளிவு. ஆனால் அது சாத்தியமா? அது சாத்தியமே என்று நாங்கள் கருதுகிறோம். ஆயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பதைத் தவிர, யுத்தத்திற்குத் தயாரிப்புக்களைச் செய்வதைத் தவிர, மனிதகுலத்திற்கு வேறு மாற்று வழியே இல்லை என்று கூறும் அழுகுணிப் போக்கை சோவியத் மக்கள் நிராகரிக்கிறார்கள். வளர்ந்து வரும் யுத்த அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவது தவறாகும்; ஆனால் அதே சமயம், யுத்த அரக்கனின் பாதையின் குறுக்கே நம்பிக்கையான தடைமதிலை நிறுவ முடியும் எனப் பார்க்க மறுப்பதும் அதேபோல தவறாகும். அதற்கான காரணத்தைப் பார்ப்போம்.

முதலாவதாக, இந்த பிரம்மாண்டமான கடமையை நிறைவேற்று வதற்கு, இன்றுள்ள நிலைமைகள் சாதகமாக உள்ளன. அமெரிக்கத் தலைமையின் கீழ், மேற்கு நாடுகளிலுள்ள பிற்போக்கு சக்திகள் பதற்றத் தணிவைக் குழி தோண்டிப் புதைக்கப் படுமுயற்சி செய்துவந்த போதிலும், பலநாடுகளும் பதற்றத் தணிவின்பால் கொண்டிருக்கும் ஆர்வமானது சர்வதேச உறவுகளின் அமைப்பு பூராவின் மீதும் தொடர்ந்து ஆக்கபூர்வமான செல்வாக்குச் செலுத்தி வருகிறது. சமாதான சக்திகள்— சோஷலிச நாடுகள், உலகக் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கம், புதிதாக விடுதலை பெற்ற நாடுகள், ஆயுதப் போட்டியை எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்கும் வேறு பல நாடுகள், அரசியல் கட்சிகள் ஆகியன— இன்று யுத்த சக்திகளைக் காட்டிலும் அதிகம் வலுப்பெற்றுள்ளன. சமாதானத்தையும் படைக் குறைப்பையும் பேணி வளர்க்கும் மற்றொரு முக்கியமான அம்சம் பிரம்மாண்டமான யுத்த எதிர்ப்பு இயக்கமாகும். இந்த இயக்கம் இப்போது எல்லா நாடுகளிலும் கண்டங்களிலும் பரந்து வியாபித்துள்ளது.

சமாதானம், படைக்குறைப்புக்கான போராட்டத்தில் சோவியத் யூனியன் முன்னணிப் பாத்திரம் வகிக்கிறது. அதனுடைய இடையறாத முயற்சிகளின் காரணமாக, சுமார் இருபது சர்வதேச ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன; இவை பல்வேறு அளவுகளில் ஆயுதப் போட்டிக்குக் கடிவாளம் போட உதவுகின்றன. வளிமண்டலம், அண்டவெளி மற்றும் கடலுக்கடியில் அணு ஆயுத சோதனைகளை நடத்துவது தடைசெய்யப்பட்டிருக்கிறது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் அமலில் உள்ளது. பூமியை ஒட்டியுள்ள அண்டவெளி சுழல் பாதையிலோ, ஏனைய கோள்களிலோ, கடலுக்கடியிலோ சர்வநாச ஆயுதங்களை நிலைப்படுத்தி வைப்பதில்லையென்று அரசுகள் சங்கற்பம் செய்துள்ளன. நோய்க்கிருமி ஆயுதங்கள், ரசாயன நச்சு ஆயுதங்கள் முதலியன தடை செய்யப்பட்டிருக்கின்றன; இராணுவ-

அல்லது வேறு வகைப் பகைமை நோக்கங்களுக்காக சுற்றுச் சூழலை மாற்றி அமைக்கும் தொழில்நுட்ப முறைகளுக்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது. மிகவும் அபாயகரமான துறையில் ஆயுதப் போட்டியை மட்டுப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன; கேந்திர ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதுபற்றி சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

பதற்றத் தணிவுப்போக்கு உச்சகட்டத்தில் இருந்த சமயத்தில் கூட, ஆயுதப் போட்டிக்குக் கடிவாளம் இடுவது அவ்வளவு எளிதான பணியாக இருக்கவில்லை; எனவே, நெருக்கடி உச்சமட்டத்தில் இருந்த காலகட்டங்களைப் பற்றிக் கூறவே வேண்டாம். இத்தகைய சமயங் களில், ஆயுதப் போட்டியின் வேகத்தையும் வீச்சையும் குறைக்க வேண்டுமென்பதில் பல அமெரிக்கத் தலைவர்கள் கொண்டிருக்கும் ஆர்வம் தணிந்துவிடுகிறது. எனினும், ஐக்கிய நாடுகள் சபையிலும் இதர சர்வதேச நிறுவனங்களிலும் படைக்குறைப்புக்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; ஆயுதப் போட்டியை மட்டுப்படுத்துவதற்கு செயல்முறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று மிகப்பெரும்பான்மையான நாடுகள் மேன்மேலும் உறுதி யுடன் வலியுறுத்தி வருகின்றன. அரசியல் நல்லெண்ணம் மட்டும் இருந்தால், நெருக்கடி காலகட்டங்களில்கூட, படைக்குறைப்புத் துறையில் சிறந்த நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்ற எமது நம்பிக்கையை இது வலுப்படுத்துகிறது.

அணு ஆயுதப் படைக்குறைப்புத் துறையில் உங்களுடைய முக்கிய பிரேரணைகள் யாவை?

முதல் அணுகுண்டுகள் தோன்றிய காலத்திலிருந்தே, அவற்றைத் தடை செய்வதற்காகவும், அணு ஆயுதங்களை அழித்துவிடுவதற்காகவும் சோவியத் யூனியன் உறுதியுடன் இடையறாது பாடுபட்டு வந்திருக் கிறது. அணு ஆயுதங்களைத் தடை செய்ய வேண்டுமென்றும், அணுசக்தியை சமாதான நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தக் கூடிய ஒரு சர்வதேச ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டுமென்று, 1946 ஆம் ஆண்டிலேயே அது பிரரேபித்தது. இத்தகைய ஒப்பந்தத்தை அச்சமயம் செய்து கொள்ள முடியவில்லை; ஏனெனில், தன்னுடைய அணு ஆயுத ஏகபோகத்தைக் கட்டிக் காக்க அமெரிக்கா விரும்பியது.

பிந்திய ஆண்டுகளில், அணு ஆயுதக் குவிப்பைத் தடுத்து நிறுத்துவதை நோக்கமாய்க் கொண்ட பல பிரேரணைகளை சோவியத் யூனியன் உறுதியுடன் முன்வைத்தது.

அவற்றில் சிலவற்றை மட்டுமே நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அணு ஆயுதங்களின் உற்பத்தியை நிறுத்த வேண்டுமென்றும், அவற்றின் கையிருப்புக்களை சன்னஞ்சன்னமாய் அழித்துவிட வேண்டுமென்றும் சோவியத் யூனியன் பிரரேபிக்கிறது. இந்த விஷயத்தை நடைமுறைக்கு உகந்ததாய்ச் செய்யும் பொருட்டு, கட்டம் கட்டமாக அணு ஆயுதப் படைக்குறைப்புச் செய்யும் வேலைத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமென்று சோவியத் யூனியன் பிரரேபித்தது; இது சம்பந்தமான ஒரு தஸ்தாவேஜுவை ஜெனீவா படைக்குறைப்பு மாநாட்டில்* அது சமர்ப்பித்தது. அணு ஆயுத தளவாடங்களைக் கட்டுப்படுத்துவது பற்றி ஒப்பந்தம் செய்து கொள்ள உதவுவதற்காகவும், அவற்றைக் குறைப்பது நோக்கி முதல் நடவடிக்கை எடுப்பதற்காகவும் சோவியத் யூனியன் தனது ஆலோசனையை வெளியிட்டது. அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் எல்லா தேசங்களும் அல்லது ஆரம்பத்தில் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் மட்டுமாவது, தமது அணு ஆயுதப் படைக்கலன்களை அதிகப்படுத்தாமல் அப்படியே வைத்திருப்பது பற்றி உடன்பாடு செய்து கொள்ளத் தயார் என்று சோவியத் யூனியன் பிரகடனம் செய்தது.

புதுவகையான அணு ஆயுதங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறைத் தடுக்கும் பொருட்டு, அணு ஆயுத சோதனைகளைப் பொதுவாகவும் பூரணமாகவும் உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்று சோவியத் யூனியன் கோருகிறது. இந்த விஷயத்தில் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்னர், இந்த இடைக் காலத்தில், சமாதான பூர்வமான நோக்கங்களுக்கானவை உள்பட சகல விதமான அணு வெடிப்புச் சோதனைகளையும் நிறுத்தி வைக்க வேண்டுமென, அணு ஆயுதங்களைப் பெற்றிருக்கும் இதர நாடுகளுடன் சேர்ந்து பிரகடனம் செய்ய சோவியத் யூனியன் தயாராக உள்ளது.

அணு ஆயுதங்களை முதலில் தான் உபயோகிக்கப் போவதில்லை என்று ஒருதலைச்சார்பாகவே சோவியத் யூனியன் சங்கற்பம் செய்துள்ளது; தன்னுடைய உதாரணத்தைப் பின்பற்றும்படி இதர அணு ஆயுத வல்லரசுகளையும் அது அறைகூவி அழைத்துள்ளது.

அணு ஆயுத மற்றும் அண்ட வெளி ஆயுதங்கள் சம்பந்தமான பிரச்சினைகள் அனைத்தையும்பற்றி அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த சோவியத் யூனியன் முன்வைத்திருக்கும் பிரேரணையை உலக மக்கள் வரவேற்றுள்ளனர். சோவியத் அயல்துறை அமைச்சர் ஆந்திரி குரோமிகோவுக்கும் அமெரிக்க அரசாங்கச் செயலர் ஜார்ஜ் ஷுல்ட்சுக்குமிடையே ஜெனீவாவில் 1985 ஜனவரி 7-8 தேதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, கேந்திர மற்றும் நடுத்தர வீச்சுடைய அண்டவெளி

---

* 1984 ஜனவரி முதல் தேதியிலிருந்து ஜெனீவா படைக் குறைப்புக் கமிட்டி இவ்வாறுதான் அழைக்கப்படுகிறது.

மற்றும் அணு ஆயுதங்கள் சம்பந்தமான பல பிரச்சினைகள் பற்றியும் பேச்சுக்கள் நடைபெற்றன; எல்லா பிரச்சினைகளும் பரிசீலிக்கப்பட்டு, ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவையாகக் கருதப்பட்டு, தீர்வு காணப்படவேண்டும். அண்டவெளியில் ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துதல், புவிக்கோளிலும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப் புள்ளி வைத்தல், அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்திக் குறைத்தல், கேந்திர ஸ்திரநிலையை பலப்படுத்துதல் முதலியவற்றை நோக்கமாய்க் கொண்ட பயனுறுதியான உடன்பாடுகளை வகுப்பதுதான் பேச்சுவார்த் தைகளின் குறிக்கோளாகும். செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் எல்லா அம்சங்களையும் பேச்சுவார்த்தைகளின்போது கறாராகக் கடைப் பிடிப்பதன் மூலம் மட்டுமே, ஆயுதப் போட்டியைத் தடுப்பது நோக்கியும், அணு ஆயுதப் போர் அபாயத்தை அகற்றுவது நோக்கியும் இறுதியாக, அணு ஆயுதங்களையே ஒழித்துக்கட்டுவது நோக்கியும் உண்மையான முன்னேற்றம் காண முடியும் என்று, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் குழு இவ்விஷயம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் வலிவுறுத்தியது.

சோவியத் யூனியன் இவ்வாறுதான், கோட்பாடு ரீதியாகவும், ஆக்கபூர்வமாயும் பேச்சுவார்த்தைகளை அணுகுகிறது; அமெரிக்கா விடமிருந்தும் இதையேதான் அது எதிர்பார்க்கிறது.

அணு ஆயுதங்களை முதலில் உபயோகிப்பது இல்லையென்று சங்கற்பம் செய்யும்படி சோவியத் யூனியனைத் தூண்டியது எது?

அணு ஆயுதங்களை முதலில் உபயோகிப்பதில்லை என்ற தன்னுடைய முடிவை, சோவியத் யூனியன் 1982 ஜூன் மாதத்தில், படைக்குறைப்பு சம்பந்தமாய் நடைபெற்ற ஐ.நா பொதுச்சபையின் இரண்டாவது விசேஷக் கூட்டத் தொடரில் அறிவித்தது. பொதுச்சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட அந்தக் கணத்திலிருந்தே இந்த முடிவு அமலுக்கு வந்தது.

இவ்வாறு சூளுரைத்ததன் மூலம், சோவியத் யூனியன் மீண்டும் ஒருதடவை உலக நாடுகள் அனைத்துக்கும் தனது உறுதியான சமாதான நோக்கங்களையும், தன்னுடைய இராணுவக் கொள்கையின் நூற்றுக்கு நூறு பாதுகாப்புத் தன்மையையும் படம் பிடித்துக் காட்டியது.

அணு ஆயுதப் பேரழிவைத் தடுப்பதைக் காட்டிலும் அதிக முக்கியமான பணி இன்று உலகில் வேறெதுவும் இல்லை என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில்தான் சோவியத் யூனியன் இந்தக் கடமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஆனால், இந்த மறுக்க முடியாத உண்மையை வெறும் வாய்ச் சொற்களின் மூலம் கூறினால் மட்டும் போதாது. அணு ஆயுதப் பேரழிவை நோக்கி உலகம் சறுக்கிச்

செல்வதைத் தடுக்க வேண்டுமானால், இன்றைய அபாயகரமான போக்குகளை மாற்ற வேண்டுமானால், எல்லா நாடுகளும் நடைமுறையில் செயலாற்ற வேண்டியது அத்தியாவசியமாகும். மாஸ்கோ எடுத்த நடவடிக்கை, இத்தகைய காரியார்த்தமான செயல்களுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கிறது.

இதற்குப் பின்னுள்ள தர்க்கநியதி மிகவும் எளிமையானது. அணு ஆயுதங்களை முதலில் உபயோகப்படுத்துவது என்றால், அணு ஆயுதப் போரைக் கட்டவிழ்த்து விடுவது என்று பொருளாகும். மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்தும் புகைந்துபோவதற்கு இது வழி கோலுவது மட்டுமின்றி, நமது புவிக்கோளில் உயிரினங்கள் அனைத்தையும்கூட இது கருவறுத்துவிடும். எனவே, அணு ஆயுதங்கள் என்றுமே பயன் படுத்தப்படாமல் தடுக்கும் பொருட்டு, தம்மாலியன்றதனைத்தையும் செய்ய வேண்டியது அரசுத் தலைவர்கள் அனைவரின் தலையாய கடமையாகும். இதுதான் சோவியத் யூனியனுடைய நிலை.

முதலில் அணு ஆயுதங்களை உபயோகிப்பதில்லை என்று சங்கற்பம் செய்ததன் மூலம், நாடுகளுக்கிடையே மேலும் அதிக நம்பிக்கைச் சூழலை சிருஷ்டிக்க சோவியத் யூனியன் முயலுகிறது. இன்றைய சிக்கலான சர்வதேச நிலைமையில்,வடிகட்டிய பிற்போக்கு ஏகாதிபத்திய சக்திகளின், எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்கப் பிற்போக்கு சக்திகளின் நடவடிக்கைகள் காரணமாக, நாடுகளுக்கிடையேயிருக்கும் நம்பிக்கை மிகவும் மோசமாக சீர்குலைக்கப்பட்டிருக்கும் இச்சமயத்தில், சோவியத் யூனியனுடைய இந்நடவடிக்கை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இது, சோவியத் யூனியன் எடுத்த மிகவும் துணிகரமான நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. அமெரிக்காவும், அதன் நேட்டோ கூட்டாளிகளும் அணு ஆயுதத் தாக்குதலை முதலில் தொடுப்பது என்ற இராணுவக் கோட்பாட்டைப் பின்பற்றிவந்த சமயத்தில் சோவியத் யூனியன் இவ்வாறு அறிவித்தது. இந்தக் கொடுமையான இராணுவக் கொள்கையின் ஆதரவாளர்களை நோக்கித்தான், சோவியத் முன்முயற்சிப் பிரேரணை விடுக்கப்பட்டது. இந்த முன்முயற்சி வழி கோலியிருக்கும் சாத்தியக் கூறுகளை சுரூராகக் கணித்து மதிப்பிடும்படி நேட்டோ நாடுகளை மாஸ்கோ அழைத்தது. அந்நாடுகள் அதை மிகவும் கவனமுடன் பரிசீலிக்குமென்று சோவியத் யூனியன் எதிர்பார்த்தது. இதர அணு ஆயுத நாடுகளும் சோவியத் யூனியனுடைய உதாரணத்தைப் பின்பற்றி இருக்குமேயானால், எதார்த்த நடைமுறையில் அணு ஆயுதங்கள் பயனற்றுப் போயிருக்கும். ஏனெனில், முதல் தாககுதல் இல்லையென்றால், பின்னர் இரண்டாவது, மூன்றுவது தாக்குதல்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை—அணு ஆயுதப் போர் அறவே ஒழிந்துபோகும். சோவியத் யூனியனுடைய உதாரணத்தை மேலைய நாடுகள் பின்பற்றவில்லையென்பது வருந்தத்தக்கது.

அணு ஆயுதப் பரவல் தடை அமைப்பு இன்று கடைப்பிடிக்கப் படுகிறது என்று நினைக்கிறீர்களா?

அணு ஆயுதப் பரவல் தடை அமைப்பு என்பது, உலகில் அணு ஆயுதங்கள் பரவாமல் தடுப்பதையும், நாடுகளுக்கிடையே நம்பிக்கைச் சூழலை ஏற்படுத்துவதையும், அணு சக்தியை சமாதான பூர்வமான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கும், இந்தத் துறையில் சர்வதேச ஒத்துழைப்புக்கும் சாதகமான நிலைமைகளை சிருஷ்டிப்பதையும் நோக்கமாகக் கொண்ட அரசியல், சட்ட, ஸ்தாபன, தொழில்நுட்ப நடவடிக்கைகள் பலவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த நடவடிக்கைகளில் பிரதானமானது அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தமாகும். இதற்கான நகல் ஒன்றை, 1965-ல், ஐக்கிய நாடுகள் சபையில் சோவியத் யூனியன் சமர்ப்பித்தது. 1970-ல் அமலுக்குவந்த இந்த ஒப்பந்தத்தில், ஐந்து அணு ஆயுத நாடுகளில் மூன்று நாடுகள் அதாவது சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் உள்பட மொத்தம் சுமார் 120 நாடுகள் கையொப்பமிட்டிருக்கின்றன.

அணு ஆயுதங்களை அல்லது அணுவெடிப்புப் பொறிகளை வேறு எந்த நாட்டுக்குமே மாற்றிக் கொடுக்கவோ அல்லது வேறு நாடுகள் அவற்றைப் பயன்படுத்த அனுமதிப்பதோ கூடாதென்றும், அணு ஆயுதங்களை அபிவிருத்தி செய்ய வேறு எந்த நாட்டுக்குமே உதவி செய்யக்கூடாதென்றும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கும் அணு ஆயுத வல்லரசுகள் பணிக்கப்படுகின்றன; இப்போது அணு ஆயுதங்களைப் பெற்றிராத நாடுகள், அவற்றை உற்பத்தி செய்வதில்லையென்றும் அல்லது பிறரிடமிருந்து அவற்றைப் பெறுவதில்லையென்றும் சபதமேற்கின்றன. இந்த சட்ட ரீதியான கடமைப் பொறுப்புக்கள் அணு ஆயுதங்கள் பரவாமல் தடுக்கின்றன. சுருங்கக்கூறின், எல்லா நாடுகளின்—பெரிய, சிறிய, அணு ஆயுதம் பெற்றிருக்கும் மற்றும் அணு ஆயுதம் பெற்றிராத, வளர்ச்சியுற்ற மற்றும் வளர்முக நாடுகள் அனைத்தின்— நலன்களுக்கும் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் சிறந்த முறையில் தொண்டாற்றுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். வளர்முக நாடுகள் உட்பட எல்லா நாடுகளும் அணு சக்தியை சமாதான பூர்வமான காரியங்களுக்குப் பயன் படுத்துவதை இந்த ஒப்பந்தம் தடுக்கவில்லையென்பதையும் இங்கே வலியுறுத்த வேண்டும்.

எனினும், அணு ஆயுதங்கள் பரவும் அபாயம் தொடர்ந்து இருந்து வருகிறது. அணு ஆயுதங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார ஆற்றலை இன்று சுமார் 30 நாடுகள் பெற்றுள்ளன; அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் வரையறுத்திருக்கும் கோட்பாடுகள் மிகவும் கறாராகக்

கடைப்பிடிக்கப்படவேண்டிய அவசியத்தை இது மீண்டும் ஒருமுறை எடுத்துக் காட்டுகிறது; மேலும் அதிகமான நாடுகளை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி தூண்ட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

சுமார் ஐம்பது நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் இன்னும் கையெழுத்திடாதது வருந்தத்தக்கது; பிரான்ஸ், சீனு என்ற இரண்டு அணு ஆயுத நாடுகளும் கூட இதில் இன்னும் கையொப்பமிடவில்லை

இஸ்ரேல், தென் ஆப்பிரிக்கா போன்ற ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட தேசங்கள் உட்பட, அணுவியல் துறையில் மிகவும் முன்னேறி அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தருவாயிலிருக்கும் சுமார் பத்து நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுப்பது உண்மையிலேயே அச்சமூட்டும் விஷயம்தான். தனது அணு ஆயுத அபிலாஷைகளை பாகிஸ்தானும் மூடிமறைக்கவில்லை.

அணு ஆயுதங்கள் மேலும் பரவுவதற்கான முக்கிய அபாயம், இவற்றை உற்பத்தி செய்யும் தருவாயிலிருக்கும் தேசங்களிடமிருந்து வருகிறது எனலாம். இவற்றில் ஏதாவது ஒரு தேசம் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து விட்டால்கூட, அது தொடர் விளைவை ஏற்படுத்தி விடும்; இப்போது அணு ஆயுதங்களைப் பெற்றிராத பல நாடுகளும், அந்த சர்வநாச ஆயுதங்களை உற்பத்தி செய்து குவிக்கத் தொடங்கி விடும். அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் அபாயம் அதிகரிப்பதற்கு இது நிச்சயம் வழிகோலும்.

உலகில் அரசியல் சூழ்நிலையை ஒட்டுமொத்தமாக மேம்படுத்துதல், பதற்றக் கேந்திரங்களையும், மோதல் நிலைமைகளையும் அகற்றுதல், படைக்குறைப்புத் துறையில் தெட்டெனப் புலனுகும் விளைவுகளை சாதித்தல் ஆகியவற்றின் மூலம்தான், அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் குறைக்கவும், இறுதியில் முற்றுக அதைப் போக்கவும் முடியும்; இதுதான் சிறந்த வழியாகும்.

அணு ஆயுதங்கள் பரவாமல் தடுக்க வேண்டுமென்றால், அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஆற்றலை ஏறத்தாழ பெற்றிருக்கும் நாடுகளின் அணுவியல் பேராசைகளுக்கு ஊக்கமளிக்காமல் இருக்க வேண்டியதும் மிகமிக அத்தியாவசியமாகும். இஸ்ரேல், தென்னுப்பிரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு நிபந்தனையற்ற இராணுவ உதவியும் அரசியல் ஆதரவும் அளிப்பதன் மூலம், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் விஷயத்தில் இந்த நாடுகள் எடுத்திருக்கும் நிலையைக் கிஞ்சித்தும் கருதிப் பார்க்காமல் இவ்வாறு செய்வதன் மூலம், அமெரிக்காதான் இந்நாடுகளுக்கு மிகுந்த ஊக்கமளித்து வருகிறது.

''மூன்றும் உலக'' நாடுகளுக்கு அமெரிக்கா அளித்துவரும் ஆயுதத் தளவாடங்கள் சமாதானத்துக்கும் தேசங்களின் பந்தோபஸ்துக்கும் அச்சுறுத்தலாய் விளங்குகின்றன என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் சோவியத் யூனியனும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்கிறது. இதற்கு நீங்கள் தரும் விளக்கம் யாது?

வளர்முக நாடுகள் அமெரிக்காவிடமிருந்து மட்டும் ஆயுதங்களை வாங்கவில்லை என்பது உண்மையே. பல வளர்முக நாடுகளுக்கு சோவியத் யூனியனும் ஆயுதங்களை சப்ளை செய்கிறது. ஆனால் இதற்கான காரணம் மேற்கு நாடுகளுடைய காரணங்களிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டதாகும். ஏனெனில், சோவியத் யூனியன் ஆக்கிரமிப்புக்கு இரையாகியிருக்கும் நாடுகளுக்கு (உதாரணம்: வியத்நாம், எகிப்து, சிரியா, ஆப்கனிஸ்தானம், எத்தியோப்பியா) அல்லது தாக்கப்படும் அபாயத்திலிருக்கும் நாடுகளுக்கு ஆயுதங்களை அளிக்கிறது. எனவே, சோவியத் யூனியன் சப்ளை செய்யும் ஆயுதங்கள் பாதுகாப்புத் தன்மையைத்தான் கொண்டிருக்கின்றன; குறிப்பிட்ட வளர்முக நாடுகளின் பந்தோபஸ்துக்கு உறுதியளிக்க உதவி செய்வதே அவற்றின் நோக்கமாகும்.

சர்வதேச ஆயுதச் சந்தையில் தலையாய பாத்திரம் வகிக்கும் அமெரிக்காவின் நிலை யாது? அமெரிக்க ஜனாதிபதி ரீகன் 1981 ஜூலை 8 ஆம் தேதி விடுத்த விசேஷ ஆணையின்படி, உலகு தழுவிய ரீதியில் அமெரிக்காவின் இராணுவ ஆற்றலை பலப்படுத்தும் ஒரு மிக முக்கிய சாதனமாகத்தான் அமெரிக்க ஆயுத தளவாட சப்ளைகள் கருதப்படுகின்றன; அமெரிக்க அயல்துறைக் கொள்கையின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாகவும் அவை கருதப்படுகின்றன. இஸ்ரேல் தென் கொரியா, பாகிஸ்தான், எல் சால்வடோர், சிலி, தென்னாப்பிரிக்கா போன்ற ஆக்கிரமிப்பு நோக்கங் கொண்ட தேசங்களுக்கும் வடிகட்டிய பிற்போக்கு ஆட்சிகளைக் கொண்ட நாடுகளுக்கும்தான் அமெரிக்கா பெரும்பாலும் ஆயுதங்களை சப்ளை செய்கிறது. மேலும், குறிப்பிட்ட பிராந்தியங்களில் உள்ள நிலைமையை மோசப்படுத்தும் பொருட்டும், அந்த நாடுகளில் தனது இராணுவ முன்னிலையை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் வளர்முக நாடுகளில் ஆயுதப் போட்டியைத் தீவிரமாக முடுக்கிவிடும் ஒரு சாதனமாகத்தான் வாஷிங்டன் ஆயுத தளவாட விற்பனையைக் கருதுகிறது.

''மூன்றும் உலகத்தின்'' மீது மேலைய நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, ஆயுத தளவாடங்களைத் திணித்து வருகிறது என்று கூறினால் மிகையாகாது; ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த சில நாடுகளுக்கிடையே உள்ள உறவுகள் மோசமடைவதற்கான பிரதான காரணங்களில், ஸ்தல யுத்தங்களுக்கான பிரதான காரணங்களில், இதுவும் ஒன்றாகும். ஆயுத தளவாடங்களைச் சேர்த்துக்குவிப்பதும், அவற்றை மேன்மேலும் மேம்படுத்துவதும்

பயபீதிக்கும் சந்தேகத்துக்கும் இடமளிக்கின்றன; அவநம்பிக்கையை அதிகரிக்கின்றன; அரசியல் உறவுகளை மோசப்படுத்துகின்றன.

ஏராளமான வளர்முக நாடுகள் மேன் மேலும் அதிக அளவில் ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுள்ளன; உலக ஆயுத தளவாட இறக்குமதியில் இந்நாடுகளின் பங்கு இப்போது ஏறத்தாழ 75 சதவீதமாக உள்ளது; சமாதானத்துக்கு இது ஒரு நிரந்தர அச்சுறுத்தலாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

இறக்குமதி செய்யப்படும் ஆயுத தளவாடங்களின் தொழில் நுட்ப மட்டம், இறக்குமதிசெய்யும் நாடுகளில் இருப்பதைக் காட்டிலும் மிக உயர்ந்திருப்பதால், அவற்றை சப்ளை செய்யும் நாடுகளின் தொழில்நுட்ப உதவி இல்லாமல், இறக்குமதி செய்யும் நாடுகள் அவற்றை சரிவரப் பயன்படுத்தவோ அல்லது பழுது பார்க்கவோ முடிவதில்லை. இறக்குமதி செய்யும் நாடுகளின் இராணுவத் திட்டங்களில் அன்னிய நிபுணர்கள் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்வதால்,ஆயுதங்களை சப்ளை செய்யும் நாடுகள் ஸ்தல யுத்தங்களில் சிக்கிக்கொள்ளும் அபாயம் அதிகரிக்கிறது.

சுருங்கச் சொன்னால், ஆயுத தளவாடங்களில் நடைபெறும் தங்கு தடையற்ற சர்வதேச வர்த்தகம், நமது புவிக்கோளில் சமாதானத்துக்கு ஓர் உண்மையான அச்சுறுத்தலாய் விளங்குகிறது.

அணு ஆயுதப் போர் வெடிக்குமேயானால், வார்சா ஒப்பந்த நிறுவனம் மற்றும் நேட்டோ ஆகிய இரண்டு எதிரும் புதிருமான கூட்டணி நாடுகளின் பிரதேசங்கள்தான் சர்வநாசமடையும் என்று சில மேலைய நாடுகளில் வெளியான பிரசுரங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்தக் கணிப்பை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

நிச்சயமாக இல்லை. அணு ஆயுதப் போர் வெடிக்குமேயானால், அதன் விளைவுகளிலிருந்து எந்தக் கண்டமோ அல்லது உலகின் எந்தவொரு பகுதியுமோ தப்பித்துக் கொள்ள முடியாது என்று மேலைய நிபுணர்கள் உள்பட சகல விஞ்ஞானிகளும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

இரண்டு உலகப் போர்களும் முதலில் வல்லரசுகளுக்கிடையேதான் தொடங்கின; எனினும், பிரதான யுத்த அரங்கிலிருந்து நெடுந் தொலைவில் இருந்த நாடுகளும் கூட அந்தப் போர் சுழற்சியில் சிக்கிக் கொண்டன. மூன்றாவது உலகப் போர் தடுக்கப்படவில்லையென்றால், அது வரம்பற்றதாகிவிடும்; எந்த தேசிய எல்லைக் கோடுகளையும் அது பொருட்படுத்தப் போவதில்லை.

எதிர்காலத்தில் மனித இனமே அழிவை எதிர்நோக்க நேரிடலாம் என்று படைக்குறைப்பு மற்றும் பந்தோபஸ்து பற்றிய சுதந்திரக் கமிஷனின் தலைவரும் ஸ்வீடன் நாட்டுப் பிரதமருமான ஓலஃப் பாமி குறிப்பிட்டுள்ளார். ஏராளமான அணுகுண்டுகள் வெடிப்பதால் ஏற்படும் நீண்டகால விளைவுகள் படுமோசமாய் இருக்கும்; மனிதனுடைய உடல் உறுப்புக்களில் பல கோளாறுகளுக்கும், புற்றுநோய் பரவுவதற்கும் இவை வழிகோலும்; வளி மண்டலத்திலுள்ள ஓசோன் அடுக்கிலும் பல மாற்றங்கள் உண்டாகும்; இதன் விளைவாக புவிக்கோளில் புல் பூண்டுகள் உள்பட சகலவிதமான உயிரினங்களும் அழிந்து போகும்; உலகின் தட்பவெப்ப நிலையே மாறிவிடும். இவ்வாறு, மனிதகுலம் தனது சர்வ நாசத்தை எதிர்நோக்க நேரிடும்.

அணு ஆயுதப் போரில் மொத்தம் 28 மெகாடன் திறன் கொண்ட அணு குண்டுகள் பயன்படுத்தப்பட்டாலே, உலகம் பூராவிலும் சாவை விதைக்கக் கூடிய அளவுக்கு, கதிரியக்க மட்டம் பெருகிவிடும் என்று நிபுணர்கள் அறிவிக்கின்றனர். இந்த 28 மெகாடன் அளவு என்பது, அமெரிக்க டைட்டான்-2 ரகத்தைச் சேர்ந்த மூன்று ஏவுகணைகளின் அல்லது ஒரு கேந்திர குண்டுவீச்சு விமானத்தின் அணு ஆயுதத் திறனுக்குச் சமமாகும்.

''ஸ்தல'' அணு ஆயுத யுத்தத்தின் விளைவாக, உயிர்ராசி மண்டலத்துக்கு ஏற்படும் ''சிறிய'' அளவு சேதம்கூட, மாற்ற முடியாத பெரும் தீய விளைவுகளைக் கொண்டிருக்கும். இத்தகைய ''ஸ்தல'' போரின் விளைவாக ஏற்படும் பேய் மழையும் பெருவெள்ளமும், நிலநடுக்கங்களும் ஆறு மாதங்களுக்குள் எல்லா கண்டங்களையும் சதுப்புநிலக் காடுகளாக மாற்றிவிடும். பின்னர் பூமியின் மேற்பரப்பில் பிரம்மாண்டமான பிளவு வெடிப்புகளும், 8 முதல் 12 பருவங்கள் வரை நீடிக்கக்கூடிய கொடிய குளிர் காலங்களும் ஏற்படும். இவற்றின் விளைவாக உலகிலுள்ள மனித இனமே அழிந்து போகும்.

இப்போது உலகில் சேர்த்துக் குவிக்கப்பட்டிருக்கும் அணு ஆயுதங்களில் ஆயிரத்தில் ஒரு பங்கு அல்லது பத்தாயிரத்தில் ஒருபங்கு கூட, அணு ஆயுதப் போரில் ஈடுபடுத்தப்படுமேயானால், உலகமே அழிந்து போகும் என்பது மிகமிகத் தெளிவு.

அமெரிக்க அணு ஆயுத பலம், சோவியத் யூனியனுக்கும், ஐரோப்பாவிலுள்ள அதன் கூட்டாளிகளுக்கும் மட்டுமே உண்மையான அச்சுறுத்தலாய் விளங்குவது போல எனக்குத் தோன்றுகிறது. அப்படித்தானே?

இல்லை, அப்படியல்ல. ஏராளமான நாடுகளுக்கு எதிராக, குறிப்பாக வளர்முக நாடுகளுக்கு எதிராக, ஓர் அச்சுறுத்தும் கருவியாக

அமெரிக்க அணு ஆயுத பலம் பயன்படுத்தப்படுகிறது. பல ''மூன்றும் உலக'' நாடுகளிலுள்ள இலக்குகளை நோக்கி இப்போது அமெரிக்க அணு ஆயுதங்கள் திருப்பப்பட்டுள்ளன.

அமெரிக்க இராணுவத் தலைமை சம்பிரதாய ஆயுத தளவாடங்களைக் கொண்டே கிரெனடாவை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது; லெபனனில் மரணத்தையும் அழிவையும் வருஷித்தது. ஆனால் மத்திய அமெரிக்காவிலும், மத்தியக் கிழக்கிலும் ஓர் அச்சுறுத்தும் சாதனமாக, தனது தலையீட்டுக் கொள்கையை எதிர்க்கும் மக்களை அஞ்சி நடுங்கவைப்பதற்காக அமெரிக்கா தனது அணு ஆயுத முஷ்டியை உயர்த்திக் காட்டுகிறது. கிரெனடாவின் மீது அமெரிக்கத் தாக்குதல் உச்சகட்டத்திலிருந்த போது, அந்தத் தீவுக்கு அருகே அமெரிக்க அணுவியல் நீர்மூழ்கிக் கப்பலான ஸ்டோன்வால் ஜாக்சன், ஏராளமான அணு ஆயுதங்களுடன் ரோந்து சுற்றியது ஏதோ ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல. லெபனன் கடற்கரைக்கு அருகில் நிலை பெற்றிருக்கும் அமெரிக்க 6 ஆவது கடற்படையைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கின்றன. கரீபியனில் ரோந்து சுற்றிக் கொண்டிருக்கும் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களில், அணு ஆயுதங்களைக் கொண்ட பல விமானங்கள் இருக்கின்றன; நிகராகுவா மீது அணு ஆயுதத் தாக்குதல் தொடுக்க அவை சன்னத்தமாயுள்ளன.

ஆனால், வளர்முக நாடுகளின்பால் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கைகளில் அணு ஆயுதங்களின் பாத்திரம், வெறும் அச்சுறுத்தலுடன் மட்டும் நின்று விடவில்லை.

அமெரிக்க அணு ஆயுத ஏவுகணை தளங்கள் பெரும் சங்கிலித் தொடர்போல வளர்முக நாடுகளை சுற்றிவளைத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அணு ஆயுதப் போரில் அவையும் சிக்கிக் கொள்ளும் அபாயம் இதனால் அதிகரிக்கிறது. பெர்ஷிங்-2 மற்றும் குரூய்ஸ் ஏவுகணைகள் இப்போது மேற்கு ஐரோப்பாவில் நிலைப்படுத்தி வைக்கப் படுகின்றன; இதனால் அபாயம் அதிகரித்துள்ளது. சிசிலியிலுள்ள காமிசோ தளத்தில் 112 குரூய்ஸ் ஏவுகணைகளை நிலைப்படுத்தி வைக்க அமெரிக்காவும் நேட்டோவும் திட்டமிட்டுள்ளன. இந்த தளத்திலிருந்து சோவியத் பிரதேசத்தின் ஒரு பகுதியை மட்டுமின்றி, ஆப்பிரிக்காவிலும் சமீப மற்றும் மத்தியக் கிழக்கிலும் உள்ள பல நாடுகளின் பிரதேசங்களையும் சுலபமாகத் தாக்க முடியும்.

இந்த அபாயம் வெறும் ஊகம்தானா? இல்லை; முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்டு நிக்சன் அவ்வாறு நினைக்கவில்லை. ஸ்டெர்ன் என்ற மேற்கு ஜெர்மன் இதழின் நிருபர் ஒருவர் நிக்சனை சந்தித்துப் பேசுகையில், அமெரிக்க அணு ஆயுத ஏவுகணைகள் ஐரோப்பிய அரங்கிற்கு மிகவும் முக்கியமானது என்பதைக் குறிப்பிட்டார். ஐரோப்பாவிலுள்ள தளங்களில் நிலைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும்

பெர்ஷிங்-2 மற்றும் குரூய்ஸ் ஏவுகணைகளைக் கொண்டு, லிபியா உள்பட வட-ஆப்பிரிக்க நாடுகளையும், மத்தியக் கிழக்கிலுள்ள எண்ணெய் வளம் செறிந்த பிரதேசங்களையும் வாஷிங்டன் கட்டுப்படுத்த விரும்புகிறதா என அந்நிருபர் நிக்சனிடம் வினவினார். ஆமாம் என்று நிக்சன் அக்கேள்விக்கு திட்டவட்டமாக விடையளித்தார்.

ஆப்பிரிக்காவிலும் மத்தியக் கிழக்கிலும் நிலைமை கொந்தளிப்பாக உள்ளது. அங்குள்ள விடுதலை இயக்கங்கள் மீது நிர்ப்பந்தம் கொண்டு வர புதிய அமெரிக்க அணு ஆயுத ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன. அது மட்டுமல்ல.

அமெரிக்க பெர்ஷிங்-2 மற்றும் குரூய்ஸ் ஏவுகணைகளை தம்முடைய பிரதேசங்களில் நிலைப்படுத்தி வைக்க வேண்டுமென்று தென்னாப்பிரிக்க, இஸ்ரேலிய ஆளும் வட்டாரங்கள் விரும்புவதாக மேலைய பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த அணு ஆயுத ஏவுகணைகளை நிலைப்படுத்தி வைப்பதற்கான ஏற்பாடுகளை இஸ்ரேல் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிறது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்திகள் சரியா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது; எனினும், மேற்கு ஐரோப்பாவில் மட்டும் நிலைப்படுத்தி வைப்பதற்குத் தேவையான பெர்ஷிங்-2 மற்றும் குரூய்ஸ் ஏவுகணைகளைக் காட்டிலும் மிக அதிக எண்ணிக்கையிலான ஏவுகணைகளுக்கு வாஷிங்டன் ஆர்டர் செய்துள்ளது என்ற உண்மையை உலகறியும்.

ஐரோப்பாக் கண்டத்தில் புதிய அமெரிக்க அணு ஆயுத ஏவுகணைகள் நிலைப்படுத்தி வைக்கப்பட்ட பின்னர், சுதந்திரமான வளர்முக நாடுகளுக்கெதிரான அடாவடி மிரட்டல் கொள்கை மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, இந்துமாகடலை எடுத்துக் கொள்வோம். அணு ஆயுதங்கள் ஏராளமாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க முன்னணித் தளங்கள் இந்தப் பிரதேசம் பூராவிலும் பரவிக் கிடக்கின்றன. இங்கே மொத்தம 30 இராணுவ தளங்கள் உள்ளன; இவற்றில் முதன்மையானது தியகோ கார்சியாவிலுள்ள அணு ஆயுத தளமாகும். இந்தப் பிராந்தியத்தில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் 40 கப்பல்கள் சர்வசதா ரோந்து சுற்றிக் கொண்டிருக்கின்றன. அண்மையில் மத்தியத் தலைமை (சென்ட்கம்) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்துமாகடலிலுள்ள அமெரிக்க அணு ஆயுதப் படைகளுக்கும், நேட்டோவின் தென் பாரிசத்தில் நிலைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் அணு ஆயுதத் தளங்களுக்குமிடையே நேரடிப் பிணைப்பை இந்த மத்தியத் தலைமை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆசிய-பசிபிக் பிரதேசமும் அணு ஆயுதப் பாசறையாக மாற்றப்பட்டிருக்கிறது. ஜப்பான், மைக்ரோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் ஏராளமான அமெரிக்க அணு ஆயுத ஏவுகணை தளங்கள், தொலைகிழக்கு, தென்கிழக்காசியா, தெற்கு ஆசியாவிலுள்ள சகல நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கு

கின்றன. பெர்ஷிங்-2 ஏவுகணைகளை தென் கொரியாவிலும் நிலைப்படுத்தி வைக்க அமெரிக்க இராணுவத் தலைமை திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு, அமெரிக்கா வளர்முக நாடுகள் அனைத்தையும் சங்கிலித் தொடர் போன்ற அணு ஆயுத தளங்களால் சுற்றிவளைத்துக் கொண்டிருக்கிறது. அந்நாடுகளை நேரடியாக, அணு ஆயுதங்களைக் காட்டி மிரட்டிப் பணிய வைப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

அணு ஆயுத சூன்ய மண்டலங்களை, குறிப்பாக, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்படுத்துவதைப்பற்றி மாஸ்கோவின் கருத்து யாது?

சோவியத் யூனியன் இக்கருத்தை முற்ற முழுக்க வரவேற்கிறது. அணு ஆயுத சூன்ய மண்டலங்களை ஏற்படுத்துவதானது, பந்தோபஸ்தை பலப்படுத்துவதற்கான போராட்டத்தின் ஒரு முக்கிய திசைவழி என்று கருதுகிறோம். அணு ஆயுத சூன்ய மண்டலங்களை நிறுவ வேண்டியதன் முக்கியத்துவத்தை சோவியத் யூனியன் நன்கு உணர்ந்துள்ளது; உலகின் பல்வேறு பிராந்தியங்களில் இந்த நிகழ்வுப் போக்கைப் பேணி வளர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

அணு ஆயுதங்களைப் பெற்றிராத நாடுகளுக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது அல்லது அவ்வாறு பயன்படுத்தப் போவதாய் அச்சுறுத்தக் கூடாது என்பதற்கு நம்பகமான உத்தரவாதங்களை அளிக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் கருதுகிறது; அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய மறுக்கும் அல்லது அத்தகைய ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளாமலிருக்கும் அல்லது அத்தகைய ஆயுதங்களைத் தனது பிரதேசத்தில் நிலைப்படுத்தி வைத்துக் கொள்ளாதிருக்கும் நாடுகளுக்கு எதிராக, ஒரு போதும் அணு ஆயுதங்களைத் தான் உபயோகிக்கப் போவதில்லை என்று 1978-லேயே சோவியத் யூனியன் பிரகடனம் செய்தது. இப்போது அணு ஆயுதங்கள் இல்லாதிருக்கும் நாடுகளின் பிரதேசங்களில் புதிதாக அவற்றை நிலைப்படுத்தி வைக்காமல் இருப்பது சம்பந்தமாய் ஒரு சர்வதேச உடன்பாட்டை செய்து கொள்ளலாம் என்றும் சோவியத் யூனியன் பிரரேபித்தது.

உலகில் ஜனநெருக்கம் அதிகமாக உள்ள பிரதேசங்களில், லத்தீன் அமெரிக்காவில் மட்டும்தான் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அணு ஆயுத சூன்ய மண்டலம் இப்போது இருந்து வருகிறது. லத்தீன் அமெரிக்காவில் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் (திலாதெலல்கோ ஒப்பந்தம்) 1967 பிப்ரவரியில் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களைப் பரிவுணர்ச்சியுடன் புரிந்து கொண்ட

சோவியத் யூனியன், லத்தீன் அமெரிக்காவின் அணு ஆயுத சூன்ய மண்டலத்தை எல்லா அணு ஆயுத நாடுகளும் மதித்து நடக்க வேண்டுமென்று கோரும் ஒப்பந்தத்தின் இரண்டாவது துணை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கிறது. இதர அணு ஆயுத நாடுகளும் கூட இந்தத் துணை ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டிருக்கின்றன.

உலகின் இதர பிராந்தியங்களிலும் அணு ஆயுத சூன்ய மண்டலங்களை ஏற்படுத்தவேண்டும் என்ற பிரேரணைகளை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது. உதாரணமாக, மத்தியக் கிழக்கில் அணு ஆயுத சூன்ய மண்டலத்தை ஏற்படுத்துதல் என்ற பிரச்சினையை ஐ. நா. பொதுச் சபை 29 ஆவது கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கவேண்டுமென்று ஈரானும் எகிப்தும் கொண்டுவந்த பிரேரணையை 1974-ல் சோவியத் யூனியன் ஆதரித்தது; இந்நாடுகள் சமர்ப்பித்த நகல் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது.

ஆப்பிரிக்காவை அணு ஆயுத சூன்ய மண்டலமாய்ப் பிரகடனம் செய்யவேண்டுமென்று ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் ஆப்பிரிக்க நாடுகள் முன்வைத்த பிரேரணைகளையும் சோவியத் யூனியன் ஆதரித்தது. (ஆப்பிரிக்க ஒற்றுமை நிறுவனத்தின் உறுப்பினர் நாட்டுத் தலைவர்கள் முதன் முதலில் இத்தகைய பிரேரணையை 1964-ல் வெளியிட்டார்கள்.) வட ஐரோப்பா, பால்க்கன்ஸ், தெற்கு ஆசியா, தொலைகிழக்கு, தெற்கு பசிபிக் முதலிய இடங்களிலும் அணு ஆயுத சூன்ய மண்டலங்களை நிறுவுவதற்கான பிரேரணைகளையும் அது ஆதரிக்கிறது.

தம்முடைய பிரதேசங்களில் அணு ஆயுதங்களை நிலைப்படுத்தி வைக்க மறுக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஏற்ப, இந்த ஆயுதங்களின் உபயோகத்திற்கு சட்ட ரீதியான தடைகள் மேன் மேலும் அதிகம் ஏற்படுவதற்கு ஏற்ப, அணு ஆயுதப் போரின் அபாயமும் குறையும் என்று சோவியத் யூனியன் எப்போதுமே கருதிவந்துள்ளது.

முதல் அணு ஆயுதத் தாக்குதல் தொடுக்க அமெரிக்கா தயாரிப்பு செய்து கொண்டிருக்கிறது என்று நீங்கள் கூறிகிறீர்கள். ஆனால், தாக்குதலுக்கு எதிரான தற்காப்புக்குத் தவிர, தமது சம்பிரதாய ஆயுதங்களையோ அல்லது அணு ஆயுதங்களையோ தாங்கள் என்றும் உபயோகிக்கப் போவதில்லை என்று நேட்டோ நாடுகளின் தலைவர்கள் பன்முறை அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் யாரை நம்புவது? முதல் அணு ஆயுதத் தாக்குதல் கோட்பாடு பற்றி தங்கள் கருதது யாது?

நேட்டோ நாடுகளின் தலைவர்கள், குறிப்பாக அமெரிக்கத் தலைவர்கள், தம்முடைய ''சமாதான நோக்கங்களை''ப் பற்றி அண்மைக் காலத்தில் அதிகமாய்த்தான் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லை. தங்களுடைய எதார்த்த நோக்கங்களையும் உண்மையான செயல்களையும் உலக மக்களிடமிருந்து மூடிமறைப்பதற்காகத்தான் வாஷிங்டனும் அதன் கூட்டாளிகளும் பகிரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன. இந்நாடுகளின் சொற்களும் செயல்களும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளன. இங்கே ஒரு சில உண்மைகளைப் பார்ப்போம்.

அணு ஆயுதங்களை முதல் தாக்குதலுக்குப் பயன்படுத்துவது முற்றிலும் இயல்பானது என்றும், உயர்ந்த ஒழுக்கப்பண்பானது என்றும் விவரிக்கும் தேசிய பந்தோபஸ்து ஆணை எண் 32-ல் ஜனாதிபதி ரீகன் கையொப்பமிட்டுள்ளார். (இது 1984 மே மாதத்தில்தான் அம்பலமாயிற்று.) சம்பிரதாய ஆயுதங்களைப் பயன்படுத்தி நடைபெறும் யுத்தம், திருப்திகரமான முறையில் நடந்து முடியாமல் இருக்குமேயானால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளை அமெரிக்கா வகுக்கும் என்று அந்த ஆணை அறிவிககிறது. போர்முனையில் அணு ஆயுதப் படைகளை முதலில் உபயோகிப்பதற்கான திட்டங்களும் தீட்டப்பட வேண்டும் என்றும் அந்த ஆணை கூறுகிறது.

ஏர்லாண்ட் போர் என்று அழைக்கப்படும் அமெரிக்க ஆயுதப் படைகளின் புதிய தாக்குதல் கோட்பாட்டைப் பற்றியும் இப்போது நாம் பரிசீலிப்போம். ஹார்வார்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இராணுவ நிபுணரான ஜான் மீர்ஷிமரின் கருத்துப்படி, இது உண்மையிலேயே தடுப்புத் தாக்குதலுக்கான ஓர் அறைகூவலாகும். அமெரிக்க இராணுவ சஞ்சிகையான மிலிட்டரி ரிவ்யூ குறிப்பிட்டுள்ளது போல, முதல் அணு ஆயுதத்தாக்குதல் தொடுப்பதற்கான சாத்தியக் கூறை புதிய கோட்பாடு அமெரிக்காவுக்கு அளிக்கிறது.

எனவே, முதல் அணு ஆயுதத் தாக்குதல் தொடுக்க பென்டகன் உண்மையிலேயே தயாரிப்பு செய்து கொண்டிருக்கிறது. அதனால் தான், படைபலத்தைப் பிரயோகியாமல் இருப்பது பற்றி வார்சா ஒப்பந்த நாடுகளுடன் உடன்பாடு செய்து கொள்ள நேட்டோ நாடுகள் பல்வேறு நொண்டிச் சாக்குப் போக்குகளைக் கூறி மறுத்து வருகின்றன; அதனால்தான், அணு ஆயுதங்களை முதலில் உபயோகிப்பதில்லை என்று சபதமேற்றிருக்கும் சோவியத் யூனியனின் உதாரணத்தைப் பின்பற்ற அமெரிக்காவும் ஏனைய நேட்டோ நாடுகளும் மறுத்து வருகின்றன.

''முதல் அணு ஆயுதத்தாக்குதல்'' என்ற கோட்பாடு, பென்டகன் போர்த் தந்திரிகளின் வெறும் தத்துவார்த்தக் கண்ணோட்டமாக

மட்டும் இருக்கவில்லை. அவர்கள் செயல் முறையிலும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஒஹியோ ரகத்தைச் சேர்ந்த சுமார் 20 மிகப்பெரிய ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல்களை நிர்மாணித்தல் (ஏற்கெனவே இவற்றில் சில கட்டி முடிக்கப்பட்டு விட்டன); இந்த நீர்மூழ்கிக் கப்பலகளில் 1989-லிருந்து புதிய டிரிடென்ட் 2 ரக ஏவுகணைகளைப் பொருத்துதல்; பி—1பி என்ற புதிய கனரக குண்டுவீச்சு விமானங்களை 1985-லிருந்து நிலைப்படுத்தி வைத்தல்; 1986-லிருந்து கண்டம் விட்டுக் கண்டம் பாயும் எம்எக்ஸ் பாலிஸ்டிக் ஏவுகணைகளை நிலைப்படுத்திவைத்தல் ஆகிய நடவடிக்கை களில் அமெரிக்க இராணுவத் தலைமை ஈடுபட்டிருக்கிறது. இவை யெல்லாம் "முதல் தாக்குதலுக்கான" திட்டங்களாகும். கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கும் டிரிடென்ட்—1 பாலிஸ்டிக் ஏவுகணைகள், விமானங்களில் பயன்படுத்தப்படும் குரூய்ஸ் ஏவுகணைகள், நடுத்தர வீச்சுடைய பெர்ஷிங்-2 பாலிஸ்டிக் ஏவுகணைகள், தரையிலிருந்து கிளம்பிச் செல்லும் குரூய்ஸ் ஏவுகணைகள் ஆகியவற்றை மேற்கு ஐரோப்பாவில் நிலைப்படுத்தி வைக்கும் பணி தொடர்ந்து கொண்டிருக் கிறது; மேலும், சோவியத் பிரதேசத்திற்கு அருகில் ரோந்து சுற்றிக் கொண்டிருக்கும் போர்க்கப்பல்களிலும் நீர்மூழ்கிக் கப்பல்களிலும் கூட குரூய்ஸ் ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. தாக்குதலுக்கான அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வரும் அதே சமயத்தில், துணைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்கள் உள்பட, இராணுவ நோக்கங் களுக்கான பல அண்ட வெளி அமைப்புக்களையும் அபிவிருத்தி செய்து பயன்படுத்துவது பற்றிய புதிய வேலைத் திட்டங்களும் அமெரிக்காவில் அமல் நடத்தப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா கடைப்பிடித்து வரும் "முதல் அணு ஆயுதத் தாக்குதல்" கோட்பாடு மிக மிக அபாயகரமானது, வெறித்தனமானது என்று நாங்கள் கருதுகிறோம்.

மறு தரப்பின் கேந்திரப் படை வரிசைகள், அதன் தலைமைக் கேந்திரங்கள், தகவல் போக்குவரத்து மையங்கள், துருப்புக் கட்டுப்பாடு அமைப்புகள் ஆகியவற்றை அழித்து நாசமாக்கும் பொருட்டும், அதன் மூலம் மறு தரப்பை பலவீனப்படுத்தி, திருப்பித் தாக்கும் சக்தியை அதனிடமிருந்து பறிக்கும் பொருட்டும், சற்றும் எதிர்பாரா விதத்தில் அதன் மீது அணு ஆயுதப் பேரடி கொடுக்கும் வல்லமையை அமெரிக்கா பெற்றிருக்க வேண்டுமென்று இந்தக் கோட்பாடு கூறுகிறது.

இவை அபாயகரமான, அதே சமயம் குறுகிய நோக்குடைய திட்டங்களாகும். சோஷலிச நாடுகளை முடமாக்கும் விதத்தில் பேரடி கொடுப்பதில் அமெரிக்கா வெற்றியடைய முடியாது என்று சோவியத் இராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள். சர்வநாசமான எதிர்த் தாக்குத லிலிருந்து ஆக்கிரமிப்பாளன் தப்பித்துக் கொள்ள முடியாது. அணு

ஆயுதப் போரில் வெற்றிக்கு வழி வகுக்க முனைவதும், ஒரே அடியில் எதிரியை சிரச்சேதம் செய்து விடலாம் என்று நம்புவதும் வெறும் தற்கொலைக் கொப்பானது.

அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்ட பின்னர், அதில் வெற்றியடைந்து விடலாம் என்று நம்புவது வீண் வியர்த்தம். இத்தகைய யுத்தத்தில் வெற்றியடைபவர் எவருமில்லை. அணு ஆயுதப் போர் வெடித்துவிட்டால், சகல தேசங்களும் அழிந்து போகும்; கற்பனைக்கும் எட்டாத பிரம்மாண்ட அளவில் பெரும் சேதங்கள் ஏற்படும்; மனித இன நாகரிகம் அழியும்; புவிக்கோளில் சகல உயிரினங்களும் மறைந்து போகும்.

''கட்டுப்படுத்தப்பட்ட'' மற்றும் ''நீடித்த'' அணு ஆயுதப் போர் சம்பந்தமாய் அமெரிக்கா கொண்டிருக்கும் கருத்துக் களைப் பற்றி சோவியத் யூனியனுடைய கண்ணோட்டம் யாது?

முதலில் ''கட்டுப்படுத்தப்பட்ட அணு ஆயுதப் போர்'' என்ற கருத்தை எடுத்துக் கொள்வோம். இந்தக் கருத்தின்படி, ஐரோப்பா போன்ற ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்துக்குள் மட்டும் இந்த அணு ஆயுதப் போர் நடக்குமென்றும், அட்லாண்டிக் மாகடலின் மறு கரையில் தாங்கள் பந்தோபஸ்துடன் இருக்க முடியுமென்றும் பென்டகன் போர்த் தந்திரிகள் மனப்பால் குடிக்கின்றனர். இது வெறும் தன்னகங்காரக் கருத்து என்பது தெக்கத் தெளிவு.

''கட்டுப்படுத்தப்பட்ட அணு ஆயுதப் போர்'' என்றெல்லாம் பேசுவது, மிக மிக அபாயகரமானது, எதார்த்த உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்று சோவியத் யூனியன் பன்முறை சுட்டிக் காட்டியுள்ளது. கட்டுப்படுத்தப்பட்ட அணு ஆயுதப் போர் பற்றி உண்மையிலேயே எவராவது புத்தி சுவாதீனத்துடன் பேசமுடியுமா தாக்குதலுக்கு உள்ளான தரப்பு, வல்லமையெல்லாம் சேர்த்துத்திரட்டி உடனடியாக பிரம்மாண்டமான எதிர்த்தாக்குதலை நடத்தும் என்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முன் கூட்டியே வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப அணு ஆயுதப் போர் நடைபெறுமென்றும், ''கனவான்களின் உடன்பாட்டின்படி'' அணு ஆயுத ஏவுகணைகள் பொது மக்கள் வசிக்கும் இடங்களை அப்படியே விட்டு விட்டு, குறிப்பிட்ட இலக்குகளை மட்டுமே தாக்கி அழிக்குமென்றும் எவராவது நினைப்பார்களேயானால், அவர்களைவிட அப்பட்டமான பித்துக்குளிகள் வேறு எவரும் இருக்க முடியாது. ''கட்டுப்படுத்தப்பட்ட'' அணு ஆயுதப் போர் என்பதே கிடையாது. இத்தகைய யுத்தம் தொடங்கிவிட்டால், உலகம் பூராவும் தழுவிய

அணு ஆயுதப் போராக அது வளர்ச்சியடையாது என்பதற்கு எத்தகைய உத்தரவாதங்களும் கிடையாது.

"நீடித்த" அணு ஆயுதப் போர் என்ற கருத்தையும், அதில் வெற்றியடையும் வாய்ப்பு உள்ளது என்ற எண்ணத்தையும் சோவியத் யூனியன் முற்ற முழுக்க நிராகரிக்கிறது. ஏனெனில், உலகில் இன்று சேர்த்துக் குவிக்கப்பட்டிருக்கும் அழிவாற்றலை, செயலில் ஈடுபடுத்தினுல், மனித இனமே புவிக்கோளிலிருந்து பூண்டோடு மறைந்து போகும்.

ஆயுதப் போட்டிக்கு முடிவுகட்ட வேண்டுமென்று சோவியத் யூனியன் அறைகூவுகிறது: அதேசமயம் அதில் முனைப்பாகவும் ஈடுபடுகிறது. இதற்கு உங்கள் விளக்கம் யாது?

ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டவேண்டுமென்று சோவியத் யூனியன் முன்னுக்குப் பின் முரணின்றி எப்போதுமே அறைகூவி வந்துள்ளது. அதேசமயம், தனது பாதுகாப்பு வல்லமையை ஒரு போதுமான அளவு மட்டத்தில் நிரந்தரமாக வைத்திருக்கும்படியும் அது நிர்ப்பந்திக்கப்படுகிறது.

சோவியத் யூனியன் படைக்குறைப்புக்காக உறுதியுடன் பாடு பட்டுக் கொண்டிருக்கிறது; ஆனுல் அதேசமயம், இராணுவ மேலாண்மை நிலைமை அடைய ஒருவருக்குள்ள உரிமையை அது அங்கீகரிப்பதில்லை. இராணுவ மேலாண்மை நிலையை, குறிப்பாக அணு ஆயுதத் துறையில் அத்தகைய நிலையை, எய்தும் கொள்கையை அமெரிக்கா கடைப்பிடித்தால், அல்லது சோஷலிசத்தை அழித் தொழிக்கும் நோக்குடன் அதற்கு எதிரான "புனிதப் போரைப்" பிரகடனம் செய்தால், தனது பாதுகாப்பு வல்லமையைப் பலப்படுத்து வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை, இராணுவத் துறையில் சமபல நிலையை, உலகில் சமாதானத்துக்கு உத்தரவாதமளிக்க மிகவும் இன்றியமையாத இத்தகைய சமபல நிலையை, பேணிக் காப்பதற்கு உறுதியளிக்கக் கூடிய நடவடிக்கைளை எடுப்பதற்கு சோவியத் யூனியன் நிர்ப்பந்திக்கப் படுகிறது என்பதை அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயுதப் போட்டியைத் தொடங்கியது சோவியத் யூனியன் அல்ல. மேன்மேலும் புத்தம் புதிய ஆயுத அமைப்புகளை அபிவிருத்தி செய்வதில் அது என்றுமே முன்னேடியாக இருந்ததில்லை, இருக்க முயன்றதும் இல்லை. யுத்த பிற்கால ஆண்டுகளைப் பார்த்தால், யார் முதலில் நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்தது, யார் அதைப்பின் தொடர்ந்தது என்பது தெளிவாகும்.

அணு ஆயுதங்களை முதலில் அமெரிக்கா 1945-ல் உற்பத்தி செய்தது; சோவியத் யூனியன் 1949-ல் அதைப் பின்தொடர்ந்தது.

நெடுந்தொலைவு செல்லவல்ல சேந்திர குண்டுவீச்சு விமானங்கள் 1950 ஆம் ஆண்டுகளின் மத்தியில் அமெரிக்காவில் முதலில் தோன்றின; பல 'ஆண்டுகளுக்குப் பிறகுதான் சோவியத் யூனியன் இவற்றை உற்பத்தி செய்தது.

அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை 1950ஆம் ஆண்டுகளின் மத்தியில் அமெரிக்கா நிர்மாணிக்கத் தொடங்கியது; 1950 ஆம் ஆண்டுகளின் இறுதியில்தான் சோவியத் யூனியன் அவற்றை நிர்மாணித்தது.

அணு விசையால் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பல்களை அமெரிக்கா 1960 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் நிர்மாணித்தது; சோவியத் யூனியனிடம் இத்தகைய கப்பல்கள் இப்போதும் இல்லை.

வெவ்வேறு இலக்குகளை ஏககாலத்தில் சென்று தாக்கவல்ல அனேக வெடி முகப்புக்களைக் கொண்ட அணு ஆயுத ஏவுகணைகளை 1960 ஆம் ஆண்டுகளின் இறுதியில் அமெரிக்கா உற்பத்தி செய்யத் தொடங்கியது; 1970 ஆம் ஆண்டுகளின் மத்தியில்தான் சோவியத் யூனியன் இவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டது.

1970 ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் நியூட்ரான் மற்றும் பைனரி ஆயுதங்களை அமெரிக்கா உற்பத்தி செய்யத் தொடங்கியது; சோவியத் யூனியன் இத்தகைய ஆயுதங்களைப் பெற்றிருக்கவில்லை.

1970 ஆம் ஆண்டுகளின் மத்தியிலேயே அமெரிக்காவில் தொலை வீச்சுடைய குரூய்ஸ் ஏவுகணைகள் தோன்றிவிட்டன; ஆனால் இவற்றை சோவியத் யூனியன் 1980 ஆம் ஆண்டுகளின் மத்தியில்தான் உற்பத்தி செய்ய முற்பட்டது.

யுத்த பிற்கால ஆண்டுகளில் இராணுவ சமபல நிலையை, தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளும் நோக்குடன் அமெரிக்கா 95 தடவைகள் புதுவகையான ஆயுதங்களை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காதான் எப்போதுமே முதலில் புதுவகையான ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் ஆயுதப் போட்டியை முடுக்கி விடுவதிலும் முனைந்து செயலாற்றியது என்பதையும், அமெரிக்கா சிருஷ்டித்த அபாயங்களிலிருந்து தனது பந்தோபஸ்து நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, பின்னர்தான் சோவியத் யூனியன் எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதையும் மேலே கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

ஆயுதப் போட்டிக்கு சோவியத் யூனியனும் அமெரிக்காவும்—இரண்டுமே—சம பொறுப்பாளிகள் என்று மேலே நாடுகளில் பேசப்படுகிறது. இதைப் பற்றி மாஸ்கோவின் கருத்து என்ன?

இத்தகைய கணிப்பு தவறு என்று கருதுகிறோம். முந்திய விடையில் சுட்டிக் காட்டியிருப்பதுபோல, புதுவகையான ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும், அவற்றை நிலைப்படுத்தி வைப்பதிலும் அமெரிக்காதான் எப்போதுமே முன்கையெடுத்துப் பணியாற்றி வந்துள்ளது; அமெரிக்காவின் சவாலுக்கு பதிலளிக்கும் வகையில்தான் சோவியத் யூனியன் மாற்று நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. அது மட்டுமல்ல.

போர் அபாயத்தை அகற்றுவதையும், ஆயுதப் போட்டியைக் கட்டுப்படுத்தி, அதற்கு உண்மையிலேயே முடிவு காண்பதையும் நோக்கமாய்க் கொண்டு சோவியத் யூனியன் ஒன்றன்பின் ஒன்றாய் பல முன்முயற்சிகளை எடுக்கவில்லையா? சகலவிதமான ஆயுதங்களையும் கட்டுப்படுத்தவும், குறைக்கவும், தடை செய்யவும் தான் தயார் என்று சோவியத் யூனியன் பிரகடனம் செய்யவில்லையா?

ஆயுதப் போட்டியை நிறுத்துதல், படைக்கலங்களைக் குறைத்தல் என்ற இன்றைய அதிமுக்கியமான பிரச்சினைகளிலும், சோவியத் யூனியன் சமாதானம் விரும்பும் மக்களை தெளிந்த தூய்மையான மனச் சாட்சியுடன் சந்திக்க முடியும். ஆயுதப் போட்டியை நிறுத்கவும், படைக் கலங்களைக் குறைக்கவும் கடந்த பல ஆண்டுகளாய் சோவியத் யூனியன் முன்வைத்த பிரேரணைகள் அனைத்தையும் மேலே நாடுகள் நிராகரித்து விட்டன. அவற்றில் சிலவற்றை இங்கே காண்போம்:

—வார்சா ஒப்பந்த நிறுவனத்தையும் நேட்டோவையும் ஏககாலத்தில் கலைத்து விடுதல்; அல்லது குறைந்தபட்சம் அவற்றின் இராணுவ நடவடிக்கைகளையாவது பரஸ்பரம் குறைத்தல்;

—அணு ஆயுதங்களையோ அல்லது சம்பிரதாய ஆயுதங்களையோ ஒருவர் மற்றவருக்கு எதிராக முதலில் உபயோகிப்பதில்லை என்று ஐரோப்பிய பந்தோபஸ்து மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட எல்லா அரசுகளும் சபதமேற்றுக் கொள்ளுதல்;

—புதுவகையான சர்வநாச ஆயுதங்களையும், ஆயுத அமைப்புக் களையும் அபிவிருத்தி செய்வதையும் உற்பத்தி செய்வதையும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அமல்படுத்துதல்;

—சகலவிதமான அணு ஆயுதங்களின் உற்பத்திக்கும் முற்றுப்புள்ளி வைத்தல்; அவற்றின் கையிருப்புக்களைச் சன்னஞ் சன்னமாகக் குறைத்து இறுதியில் அவற்றைப் பூரணமாக அழித்து விடுதல்;

—பந்தோபஸ்து சபையின் நிரந்தர உறுப்பினர் நாடுகள் மற்றும் அவற்றின் முக்கிய இராணுவக் கூட்டாளி நாடுகளின் இராணுவ

பட்டுெட்டுகளை ஒட்டுமொத்த அளவிலும் பரஸ்பரச் சார்பு அளவிலும் குறைத்தல்.

மேற்காணும் பேச்சுவார்த்தைகளை முறித்து விட்டதற்கோ அல்லது அவற்றுக்கு முட்டுக்கட்டை போட்டதற்கோ வாஷிங்டன், வாஷிங்டன் மட்டுமே பொறுப்பாகும்:

—அணு ஆயுத சோதனைகளைப் பொதுவாகவும் பூரணமாகவும் தடை செய்வது பற்றி;

—இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வது பற்றி;

—ஆயுத தளவாட வர்த்தகத்தைக் குறைப்பது பற்றி;

—செயற்கைக் கோள் எதிர்ப்பு ஆயுத அமைப்புக்களைப் பற்றி;

—இந்து மாகடல் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளைக் குறைப்பது பற்றி.

எனவே, ஆயுதப் போட்டி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு பொறுப்பு யார்?

அமெரிக்கா மீது சோவியத் யூனியன் இராணுவ மேலாண்மை நிலையை, குறிப்பாக கேந்திர ஆயுதத் தளவாடங்கள் துறையில், அடைந்திருப்பதாக வாஷிங்டன் கூறுகிறது. அது உண்மையா?

இல்லை, அது உண்மையல்ல. இத்தகைய கூற்றுக்களுக்கும் எதார்த்த நிலைமைக்கும் கிஞ்சித்தும் சம்பந்தமில்லை.

முதலில் ஒரு விஷயத்தை, ஒரு மறுக்க முடியாத உண்மையை இங்கே வலியுறுத்த வேண்டும். உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த இரண்டு கூட்டணிகளைச் சேர்ந்த இராணுவப் படைகள் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாய் அணிவகுத்து நிற்கும் ஐரோப்பாக் கண்டத்திலும், பொதுவாக உலகம் முழுவதிலும், ஏறத்தாழ இராணுவ சமபல நிலை பல பத்தாண்டுகளாகவே உருவாகி வந்துள்ளது. இந்த சமபல நிலை இப்போதும் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே, வார்சா ஒப்பந்த நாடுகளுக்கும் நேட்டோவுக்குமிடையே அப்படியே பேணிக் காக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு முக்கியமான அம்சத்தையும் நாம் இங்கே வலியுறுத்த வேண்டும். அதாவது, இன்றுள்ள சமபல நிலையைக் குலைக்கவோ அல்லது அடுத்த தரப்பின் மீது இராணுவ மேலாண்மை நிலையை அடையவோ சோவியத் யூனியன் விரும்பவில்லை. மேலும், இராணுவ-கேந்திர சமபல நிலையை அப்படியே பேணுவதும் ஒன்றுக்கொன்று எதிராய் அணிவகுத்து நிற்கும் படைவரிசைகளின் அளவை, பின்னர் கொஞ்சம்

கொஞ்சமாய்க் குறைப்பதும் சமாதானத்தைப் பராமரித்துக் காப்பதற்கு உதவும் என்று நாங்கள் கருதுகிறோம்.

"ஒருதலைச்சார்பான அனுகூலங்களை அடையவோ, அமெரிக்காவின் மீது, நேட்டோ நாடுகளின் மீது இராணுவ மேலாண்மை நிலையை அடையவோ நாங்கள் முயலவில்லை; ஆயுதப் போட்டியைத் தொடர்வதற்குப் பதிலாக, அதற்கு முடிவுகட்டவே நாங்கள் விரும்புகிறோம்," என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையீல் கொர்பச்சேவ், 1985 மார்ச் 11-ல் நடைபெற்ற மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக் காட்டினார்.

ரீகன் நிர்வாகம் ஆட்சிப் பொறுப்பேற்றபின், சமபல நிலையைக் குலைக்கவும், இராணுவ மேலாண்மை நிலையை அடையவும் முயன்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் காஸ்பர் வீன்பெர்கர் இதை பகிரங்கமாக பன்முறை அறிவித்துள்ளார். இராணுவத் துறையில் அமெரிக்காவுக்கு ஒத்த வலுவை எவராவது பெற்றுவிடும் ஒவ்வொரு சமயத்திலும் சமாதானம் அச்சுறுத்தப் படுவதாய் ஜனாதிபதி ரீகனும், அவரது சகாக்களும் நினைப்பது போலத் தோன்றுகிறது. 1981 மே மாதத்தில் காஸ்பர் வீன்பெர்கர் இவ்வாறு கூறினார்: 1950 ஆம் ஆண்டுகளிலும் 1960 ஆம் ஆண்டுகளிலும் இருந்ததைப் போல, இராணுவ மேலாண்மை நிலையை அமெரிக்கா அடையும் பொழுதுதான் சமாதானத்தைப் பேணமுடியும். 1990-ஆம் ஆண்டுக்குள் இராணுவ மேலாண்மை நிலையை அடைந்துவிட வேண்டும் என்று அமெரிக்கா இப்போது திட்டமிட்டிருக்கிறது. 1981 அக்டோபரில் ரீகன் பிரகடனம் செய்த 1980 ஆம் ஆண்டுகளுக்கான அமெரிக்க கேந்திர வேலைத் திட்டத்தின் பிரதான குறிக்கோள் இதுவே ஆகும். புதிய கேந்திரத் தாக்குதல் ஆயுத அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கும், அவற்றை நிலைப்படுத்தி வைப்பதற்கும் இந்த வேலைத் திட்டம் வழி வகுக்கிறது. இதே நோக்கத்துடன்தான், நடுத்தர வீச்சுடைய புதிய அமெரிக்க அணு ஆயுத ஏவுகணைகள் மேற்கு ஐரோப்பாவில் நிலைப்படுத்தி வைக்கப்படுகின்றன. அண்டவெளியை இராணுவ மயப்படுத்துவதிலும் பென்டகன் ஈடுபட்டிருக்கிறது.

கேந்திர ஆயுத தளவாடங்களில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையேயுள்ள சமபல நிலையைப் பொறுத்தமட்டில், சால்ட்-2 ஒப்பந்தத்துக்காக ஏழாண்டு காலம் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது, அது மிகவும் துல்லியமாக சோதித்துப் பார்க்கப்பட்டது; அந்த ஒப்பந்தம் 1979-ல் கையெழுத்தான போது, இரு நாடுகளின் அரசுத் தலைவர்களும் இந்த சமபலத்தை ஊர்ஜிதம் செய்தார்கள்.

1982 நவம்பர் 22 ஆம் தேதி ஜனாதிபதி ரீகன் பேசுகையில், கேந்திர ஆயுத தளவாடங்களில் சோவியத் யூனியன் மேலாண்மை

நிலையை அடைந்து விட்டதாகக் குறிப்பிட்டார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் சோவியத் யூனியனால் அத்தகைய நிலையை எய்தி யிருக்க முடியுமா? கேந்திர ஆயுத தளவாடங்களை அபிவிருத்தி செய்து அவற்றை நிலைப்படுத்தி வைக்கப் பல்லாண்டு காலம் பிடிக்காதா? அல்லது அமெரிக்கா, சோவியத் யூனியனுடைய வலுநிலையைப் பற்றி இதற்கிடையில், புதிதாக எதையாவது கண்டுபிடித்து விட்டதா? அப்படி எதுவுமேயில்லை. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கேந்திர ஆயுதத் தளவாடங்களில் ஏறத்தாழ சமபல நிலை இருக்கிறது என்று 1979-1980-ல் அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டரும் அவருடைய அமைச்சரவை சகாக்களும் ஒப்புக் கொண்டிருந்தபோது, இன்றைய அமெரிக்க ஜனாதிபதியான ரீகனும், பாதுகாப்புச் செயலர் வீன்பெர்கரும் அத்தகைய சமபலநிலை இல்லையென்று 1981 ஆம் ஆண்டிலேயே அடித்துக் கூறுவதற்கான காரணமென்ன? உலகிலுள்ள எதார்த்த நிலைமை மாறிவிட்டதோ அல்லது ஆயுதத் தளவாடத் துறையில் சோவியத் யூனியன் முன்னேறிச் சென்றுவிட்டதோ அல்ல இதற்குக் காரணம். அப்படியானால் உண்மை என்ன? தன்னுடைய இராணுவ வெறிக் கொள்கையை மூடிமறைக்கும் ஒரு பிரசார சாதனமாகத்தான் சோவியத் இராணுவ மேலாண்மை நிலையைப் பற்றி அமெரிக்கா தம்பட்டமடிக்கிறது.

அமெரிக்கா "பின்தங்கியிருக்கிறது" என்று கூறுவது அப்பட்டமான புளுகு. இதை 1981 ஜூன் 5 ஆம் தேதியன்று, அப்போது அமெரிக்க ராஜாங்கச் செயலராக இருந்த அலெக்சாந்தர் ஹேக்கும், 1982 ஏப்ரல் 30 ஆம் தேதியன்று, அப்போது அமெரிக்கப் பாதுகாப்புச் செயலராக இருந்த ஜேம்ஸ் ஷ்லீசிங்கரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கேந்திர ஆயுதத் தளவாடங்களில் சமபலம் நிலவுவதாக அவர்கள் ஊர்ஜிதம் செய்தார்கள்.

இதை அமெரிக்க இராணுவத் துறையேகூட ஒப்புக்கொண்டி ருக்கிறது: அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே அணு ஆயுதங்களில் ஏறத்தாழ சமபலம் நிலவுவதாக 1984 பிப்ரவரியில், அமெரிக்க இராணுவப் படைத் தலைமை, அமெரிக்கக் காங்கிரசுக்காகத் தயாரித்த அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

அண்டவெளியை இராணுவ மயப்படுத்தும் அபாயம் எந்த அளவுக்கு இருக்கிறது?

அண்டவெளியில் ஆயுதத் தளவாடங்களை சோதிப்பதோ அல்லது நிலைப்படுத்தி வைப்பதோ, மூன்றும் உலகப் போர் வெடிப்பதற்கான சாத்தியக்கூறை அதிகமாக்கிவிடும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, அண்டவெளி இராணுவ மயமாகாமல் தடுப்பதுதான், மனித குலத்தை எதிர்நோக்கியிருக்கும் மிக அதி அவசரமான பிரச்சினைகளில் ஒன்று எனவும், இதற்குக் காணப்படும் தீர்வின் மீதுதான் நமது புவிக்கோளின் எதிர்காலமே சார்ந்திருக்கிறது எனவும் நாங்கள் கருதுகிறோம்.

அண்டவெளியானது மரணத்தையும் அழிவையும் வருவிக்காமல் இருக்க வேண்டுமானால், உலக மக்களின் நன்மைக்கும், சமாதானம் மற்றும் முன்னேற்றத்தின் இலட்சியங்களுக்கும் தொண்டாற்ற வேண்டுமானால், அங்கே அமைதி தவழ வேண்டும். அண்டவெளி யுகம் தொடங்கிய ஆரம்ப நாட்களிலேயே, சோவியத் அரசாங்கம் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. அண்டவெளி இராணுவ மயமாகாமல் தடுக்க சோவியத் யூனியன் தன்னாலியன்றதனைத்தையும் செய்து வருகிறது.

சமாதான நோக்கங்களுக்கு மட்டுமே அண்டவெளியைப் பயன் படுத்துவதற்கு உறுதியளிக்கக் கூடிய, இன்று நடைமுறையிலிருக்கும் எல்லா சர்வதேச உடன்பாடுகளையும் பிரரேபித்தது சோவியத் யூனியனேயாகும். அணு ஆயுதங்கள் உள்பட, எல்லா சர்வநாச ஆயுதங்களையும் அண்டவெளியில் நிலைப்படுத்தி வைப்பதைத் தடை செய்யும் 1967 ஆம் வருட ஒப்பந்தம் சோவியத் யூனியனுடைய முன் முயற்சியின் பேரில்தான் செய்து கொள்ளப்பட்டது. அண்டவெளியில் எந்த வகையான ஆயுதங்களையும் நிலைப்படுத்தி வைப்பதைத் தடை செய்யும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டுமென்றும் சோவியத் யூனியன் அறைகூவல் விடுத்துள்ளது; இதற்கான நகலை 1981 ஆகஸ்டில் ஐ நா. சபையில் அது சமர்ப்பித்தது.

ஆனால், ஜெனிவா படைக்குறைப்பு மாநாட்டில் இந்த ஒப்பந்த நகல், சரியான பரிசீலனைக்கு இன்னும் எடுத்துக் கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கது; அமெரிக்காவும், ஏனைய சில நேட்டோ நாடுகளும் எடுத்திருக்கும் நிலைதான் இதற்குக் காரணம். இதே போன்ற முட்டுக் கட்டை நிலையை 1983-லும் அமெரிக்கா மேற்கொண்டது: அண்ட வெளியில் ஆயுதப் போட்டியைத் தடுக்கும் பிரச்சினையை ஜெனிவா படைக்குறைப்பு மாநாடு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக அப்போது 147 ஐ. நா. உறுப்பினர் நாடுகள் வாக்களித்தன; அமெரிக்கா மட்டும்தான் அந்தத் தீர்மானத்தை எதிர்த்தது.

சோவியத் முன்முயற்சிகளைப் பற்றி மேலும் சில வார்த்தைகள். அண்டவெளியில் ஆயுதங்கள் புகுத்தப்படாமலிருக்கும் பொருட்டும், இந்த விஷயத்தில் உடன்பாடு செய்து கொள்வதற்கு சாதகமான நிலைமைகளை சிருஷ்டிக்கும் பொருட்டும், 1983 ஆகஸ்டில் சோவியத் யூனியன் ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. அமெரிக்காவும் இதர நாடுகளும் அண்டவெளியில் செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்களைப்

புகுத்தாமல் இருக்கும் வரையிலும், தானும் அச்செயலில் ஈடுபடப் போவதில்லையென்று அது ஒருதலைச்சார்பாகவே அறிவித்தது. செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்களை அபிவிருத்தி செய்வதைப் பரஸ்பரம் முற்ற முழுக்கக் கைவிடுவதைப் பற்றி, அதாவது இத்தகைய அமைப்புக்களை உற்பத்தி செய்யாமலிருப்பது பற்றியும், ஏற்கெனவே இருப்பவற்றை அழித்து விடுவது பற்றியும், உடன்பாடு செய்து கொள்ள வேண்டுமெனவும் மாஸ்கோ அப்போது பிரரேபித்தது.

அயுதப் போட்டியில் புதிய மிகவும் அபாயகரமான சுற்று ஏற்பட விடாமல் தடுப்பதை நோக்கமாய்க் கொண்டு, தொடர்ந்து பெரு முயற்சி செய்துவர சோவியத் யூனியன் உறுதி பூண்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு சோவியத் யூனியன் ஐ. நா. பொதுச்சபையின் 39 ஆவது கூட்டத் தொடரில் மிக முக்கியமான ஒரு பிரேரணையை முன்வைத்தது. அண்டவெளியை சமாதான நோக்கங்களுக்காக, மனித குலத்தின் நன்மைக்காக மட்டுமே, பயன்படுத்த வேண்டுமென்று அந்தப் பிரேரணை வலியுறுத்தியது. அமெரிக்காவைத் தவிர, ஏனைய ஐ. நா உறுப்பினர் நாடுகள் அனைத்தும் சோவியத் பிரேரணையின் பிரதான கருத்தை உள்ளடக்கியிருக்கும் ஒரு தீர்மானத்துக்கு சாதகமாக வாக்களித்தன.

புவிக்கோளில் ஆயுதத் தளவாடங்களைக் குவித்து வைப்பதுடன் மட்டும் அமெரிக்கா திருப்தியடையவில்லை; அண்டவெளிக்கும் ஆயுதப் போட்டியை அது விஸ்தரிக்க முயலுகிறது. இது ஏன்? அண்டவெளியைத் தமதுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருபவர்கள், உலகம் பூராவையும் கட்டுப்பாடு செய்ய முடியும்—இதுதான் அமெரிக்க போர்த் தந்திரிகளின் கருத்து; அதற்காகத்தான் அண்டவெளியை இராணுவ மயமாக்க அமெரிக்கா முயன்று பாடுபட்டுக் கொண்டிருக் கிறது. மிகவும் நவீனமான செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்களை அபிவிருத்தி செய்வதில் அமெரிக்க ஆயுத அராய்ச்சிக் கூடங்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன; அண்டவெளியை ஆதாரமாகக் கொண்டிருக்கும் பாலிஸ்டிக் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பையும் உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கின்றன. விண்வெளி ஓடம் ரகத்தைச் சேர்ந்த விண்கலங்களை இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தவும் பரந்த வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அண்டவெளி இராணுவ வேலைத் திட்டங்களுக்கான செலவுகள் அசுர வேகத்தில் பெருகிக் கொண்டிருக்கின்றன. பாலிஸ்டிக் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புக்களின் ஆராய்ச்சிக்காக மட்டும் அடுத்த சில ஆண்டுகளில் 2,600 கோடி டாலர் கள் செலவழிக்கப்படும். இந்த வேலைத் திட்டத்துக்காக மொத்தம் 50,000 கோடி டாலர்கள் செலவழிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்த எல்லா வேலைத் திட்டங்களும் அமல் நடத்தப்பட்டால் ஏற்படும் உண்மையான அபாயத்தையும் பரிசீலிப்போம். முதலாவதாக அண்டவெளி இராணுவமயமாவதை உடனடியாகத் தடுக்காவிட்டால்,

பிரம்மாண்டமான செல்வ வளங்களை அது விழுங்கி ஏப்பமிட்டுவிடும். இரண்டாவதாக, அண்டவெளியில் ஆயுதத் தளவாடங்கள் வைக்கப் பட்டால், ஆயுதப் போட்டி எல்லாத் துறைகளிலும் மிகவும் தீவிர மடைவதைத் தவிர்க்க முடியாது. அறு ஆயுதப் போர் வெடிக்கும் அபாயம் அதிகரிக்கும். மூன்றாவதாக, செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்களை நிலைப்படுத்தி வைப்பதானது, தற்செயல் நிகழ்ச்சியாகவே யுத்தம் வெடிக்கும் சாத்தியக்கூறை பெரிதும் அதிகரித்து விடும். எப்படி?

விண்கற்களின் தாக்குதல்களுக்கு செயற்கைக்கோள்கள் உள்ளாவ தால், அவற்றில் இயற்கையாகவே பழுதுகள் ஏற்படலாம். எனவே, செயற்கைக்கோள் எதிர்ப்பு அமைப்புகள் அண்டவெளியில் நிலைப் படுத்தி வைக்கப்பட்ட பின்னர், தகவல் தொடர்பு செயற்கைக்கோள் களில் இயற்கையாகவே ஏதாவது பழுது ஏற்பட்டாலும்கூட, அவை வேண்டுமென்றே செய்யப்பட்ட பகைச் செயலாகக் கருதப்படக் கூடும். இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி விளக்கத் தேவையில்லை.

ஆப்கனிஸ்தானிலும் தென்கிழக்காசியாவிலும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதில் சோவியத் யூனியனுக்கும் பங்குண்டு என்று பேசப்படுகிறது: இது உண்மையா?

இல்லை, அது உண்மையல்ல. ரீகன் நிர்வாகம் இத்தகைய அபாண்டமான, அவதூறான குற்றச்சாட்டுகளைப் பரப்புவதில் ஈடுபட் டிருக்கிறது. சிஐஏ யும், பென்டகனும், அமெரிக்க அரசாங்க இலாகாவும் தயாரித்த பல்வேறு ''அறிக்கை''களிலும் இத்தகைய அவதூறுகளைக் காணலாம். சில மேலைய பத்திரிகைகளும் இதையே கிளிப்பிள்ளைபோல திருப்பித் திருப்பிக் கூறுகின்றன. இதைப் பற்றிய உண்மை யாது?

1982 ஏப்ரல் 6 ஆம் தேதி அமெரிக்க அரசாங்கத்துக்கு சோவியத் அரசாங்கம் அனுப்பிய குறிப்பை முதலில் பார்ப்போம்:

''சோவியத் யூனியன் தனது சர்வதேசக் கடமைப் பொறுப்புக்களை நேர்மையுடன் நிறைவேற்றுகிறது. 1925 ஆம் வருட ஜெனீவா ஒப்பந்தத்தை செவ்வனே கடைப்பிடித்துவரும் சோவியத் யூனியன், எந்த இடத்திலும் என்றுமே இரசாயன ஆயுதங்களைப் பயன் படுத்தியதில்லை; அத்தகைய ஆயுதங்களை இதர நாடுகளுக்கு வழங்கியதும் கிடையாது. நச்சு ஆயுதங்களை அபிவிருத்தி செய்வது பற்றியும், சிறந்த கட்டுப்பாட்டின் கீழ் அவற்றின் கையிருப்புக்களை அழித்துவிடுவது பற்றியும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென அமெரிக்காவுக்கும் இதர நாடுகளுக்கும் சோவியத் யூனியன் இடையறாது அறைகூவல் விடுத்து வந்துள்ளது.''

நச்சு ஆயுதங்களை சோவியத் யூனியன் பயன்படுத்தியது என்று அமெரிக்கா செய்துவரும் பிரசாரம் எவ்வளவு அபத்தமானது, ஆதாரமற்றது என்பதை, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் குறிப்பிட்ட ஸ்தலங்களுக்கே சென்று நடத்திய ஆராய்ச்சிகள் திட்ட வட்டமாக ருசுப்பித்திருக்கின்றன. உதாரணமாக, 1982 பிப்ரவரியில், ஐ. நா. நிபுணர்களின் விசேஷக்குழுவொன்று, இந்தக் குற்றச்சாட்டு களைப்பற்றி ஆய்வு செய்ய பாகிஸ்தானுக்குச் சென்றது. "இராசாயன" ஆயுதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதாகக் கூறப்பட்ட பாகிஸ்தானிய மருத்துவமனைகளுக்கு ஐ. நா. நிபுணர்கள் விஜயம் செய்தார்கள்; அங்கிருந்த நோயாளிகள் இரசாயன ஆயுதங் களால் பாதிக்கப்பட்டவர்களல்ல என்று அவர்கள் கண்டுபிடித் தார்கள்.

சில அமெரிக்கப் பத்திரிகைகளில் குறிப்பாக கவர்ட் ஆக்ஷன் என்ற சஞ்சிகையில் வெளியான கட்டுரைகளில், ஆப்கனிஸ்தானிலும் தென் கிழக்காசியாவிலும் சோவியத் யூனியனில் உற்பத்தியான இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான "சான்றுகள்" உள்ளன என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அண்டப்புளுகுக் கட்டுரைகள் சிஐஏ தயாரித்தவை என்பது பின்னர் அம்பலமாயிற்று.

பலவிதமான அரசியல் நோக்கங்களுடன்தான் அமெரிக்கா இத்தகைய அவதூறுகளைப் பரப்பி வருகிறது.

முதலாவது: புதுவகையான கொடிய நச்சு ஆயுதங்களைப் பரந்த அளவில் உற்பத்தி செய்வதுபற்றி அமெரிக்க நிர்வாகம் அறிவித்திருக்கும் திட்டங்களிலிருந்து அமெரிக்க மக்களின், உலக மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்புவதற்கான முயற்சி. தற்சமயம் அமெரிக்கா நூறு வெவ்வேறு வகையான கொடிய இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ளது. மொத்தம் 1, 50, 000 முதல் 3, 00, 000 டன் எடையுள்ள முப்பது லட்சத்துக்கும் அதிகமான இவ்வகை நச்சு ஆயுதங்களை அமெரிக்கா குவித்து வைத்துள்ளது. அடுத்த சில ஆண்டு களுக்குள் இராசாயன ஆயுதங்களின் எண்ணிக்கையை 50 லட்சங் களாக அதிகரிக்கவும் அது திட்டமிட்டிருக்கிறது. இந்தத் தயாரிப்பு களுக்காகும் மொத்தச் செலவு 1,000 கோடி டாலர்களையும் விஞ்சி விடும். 1985 ஆம் வருட நிதியாண்டில் இந்த நோக்கங்களுக்காக 112. 6 கோடி டாலர்கள் ஒதுக்கப்பட்டன; 1983 ஆம் ஆண்டில் இரசாயன ஆயுதங்களின் அபிவிருத்தி மற்றும் உற்பத்திக்காக 70. 5 கோடி டாலர்கள்தான் ஒதுக்கப்பட்டிருந்தன.

அமெரிக்க இரசாயன ஆயுதங்களில் பைனரி ஆயுதங்கள் எனப் படுபவை மிக முக்கிய இடம் வகிக்கின்றன. இவை முற்றிலும் புது ரகமானவை; இவை மிகக்கொடிய, உடனே மரணத்தை விளைவிக்கக் கூடிய நச்சு ஆயுதங்களாகும்.

வெவ்வேறு தரங்களைக் கொண்ட பைனரி பீரங்கிக் குண்டுகளை அமெரிக்கா ஏற்கெனவே உபயோகத்துக்குக் கொண்டுவந்து விட்டது. புதிய பைனரி குண்டுகளை அபிவிருத்தி செய்யும் பணிகளும் அனேகமாய் முடிவுறும் தருவாயில் உள்ளன. முக்கிய பீரங்கி அமைப்புகளிலும், விமானத்திலிருந்து வீசும் குண்டுகளிலும், லான்ஸ் மற்றும் குரூயிஸ் ஏவுகணைகளிலும் விரைவில் புதிய இரசாயன நச்சுப் பொருட்களை அமெரிக்க இராணுவம் பயன்படுத்தத் தொடங்கும்.

பாரந்த அளவில் இரசாயவப் போர் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கா செய்து வருகிறது என்பதை இந்த மறுக்க முடியாத உண்மைகள் தெக்கத் தெளிவாய் ருசுப்பிக்கின்றன.

இரண்டாவது: இந்தோ சீனாவில் இராணுவ ரீதியில் தலையிட்ட போது, அப்பிராந்திய மக்களுக்கெதிராக மேற்கொண்ட வர்ணிக்கவும் இயலாத வன்கொடுமைகளை மூடிமறைக்கும் நோக்குடன், லாவோசிலும் கம்பூச்சியாவிலும் சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட இரசாயன ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன என்ற அப்பட்டமான புளுகுப் பிரசாரத்தில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. வியத்நாமிலும், லாவோசிலும் கம்பூச்சியாவிலும் அமெரிக்க இராணுவம் மிகப் பாரந்த அளவில் இரசாயன ஆயுதங்களையும் நச்சுப் பொருட்களையும் பயன்படுத்தியது என்பது உலகறிந்த உண்மை. இக் கொடிய விஷத்தினால் அங்கே வசிக்கும் லட்சோப லட்சக்கணக்கான மக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள்; அந்நாடுகளின் பொருளாதாரங் களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஈடுசெய்ய முடியாத கொடுஞ் சேதம் விளைவிக்கப் பட்டது. இவையெல்லாம் மறுக்கவே முடியாத கண்கண்ட உண்மைகள்.

வியத்நாம் யுத்தத்தில் அமெரிக்கா, இராணுவ நோக்கங்களுக்காக ஒரு லட்சம் டன் தாவர ஒழிப்பு நச்சுப் பொருட்களையும் 10,000 கிளஸ் விஷப் பொருளையும் பயன்படுத்தியது என்று சோவியத் நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்த இரசாயன யுத்தத்தில் 16 லட்சம் மக்கள் பலியானார்கள்; 45 சதவீத அடர்ந்த காடுகளும், வனங்களும், ஏறத்தாழ பாதி சாகுபடி நிலமும் நச்சுப் பொருட்களால் பாதிக்கப்பட்டுப் பாழாயின. இந்த அமெரிக்கக் காட்டுமிராண்டிச் செயல்களின் பாதிப்பை இப்போதும் காணலாம். நச்சுப் பொருட் களின் பின்விளைவுகள் இப்போதும் மக்களைப் பீடித்துள்ளன; சுற்றுச் சூழல் இன்னும் செம்மையடையவில்லை.

அமெரிக்காவில் தயாரான இரசாயன ஆயுதங்களை ஆப்கன் எதிர்ப் புரட்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பது உலகறிந்த உண்மை. ஆப்கன் ஜனநாயகக் குடியரசு அரசாங்கம் இதற்கான சான்றுகளைப் பலதடவை சுட்டிக் காட்டியுள்ளது.

மூன்றாவது: இரசாயன ஆயுதங்களின் அபிவிருத்தி மற்றும் உற்பத்தியைத் தடைசெய்வதுபற்றி ஒப்பந்தம் செய்து கொள்ள,

பேச்சுவார்த்தை நடத்தவே அமெரிக்க அரசாங்கம் மறுத்து வருவதை மூடிமறைக்கும் முயற்சி. அத்தகைய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென சோவியத் யூனியனும் உலக நாடுகளும் உறுதியாகக் கோரி வருகின்றன.

இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வது பற்றி சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகளை, 1980 ஜூலையில், அமெரிக்கா ஒருதலைச்சார்பாகவே முறித்துக் கொண்டது. படைக்குறைப்பு பற்றிய ஜெனீவா மாநாட்டில் இந்தப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான உடன்பாடு ஏற்படாமல் முட்டுக்கட்டை போடுவதிலும் இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற விடாமல் தடுப்பதிலும் அமெரிக்கா ஈடுபட்டிருக்கிறது. இரசாயன ஆயுதங்களின் அபிவிருத்தி, அவற்றின் உற்பத்தி, அவற்றைக் கையிருப்பில் வைத்தல் ஆகியவற்றைத் தடை செய்வது பற்றியும், அவற்றை அழித்து விடுவது பற்றியும், படைக்குறைப்பு சம்பந்தமாகக் கூட்டப்பட்ட ஐ.நா பொதுச் சபையின் இரண்டாவது விசேஷக் கூட்டத் தொடரில் 1982-ல் சோவியத் யூனியன் சமர்ப்பித்த நகல் ஒப்பந்தத்தை, ஜெனீவா படைக் குறைப்பு மாநாட்டில் ஆக்கபூர்வமாய் விவாதிக்க விடாமலும் அமெரிக்கா முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

இறுதியாக, இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யத் தாங்களும் விரும்புவதாய்க் காட்டிக்கொள்ள, அமெரிக்க பிரதிநிதிகள் இவ்விஷயம் பற்றி கிஞ்சித்தும் ஏற்றுக்கொள்ள முடியாத பிரேரணைகளை வெளியிட்டிருக்கிறார்கள். உதாரணமாக, அமெரிக்க உதவி ஜனாதிபதி ஜியார்ஜ் புஷ் 1984 ஏப்ரலில் ஜெனீவா பேச்சுவார்த்தைகளின் போது முன்வைத்த மிகவும் பருமனான தஸ்தாவேஜுவை எடுத்துக் கொள்வோம். இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வது பற்றிய நகல் ஒப்பந்தம் என்று அது அழைக்கப்பட்டது. ஒத்திட்டு சரிபார்க்கும் அமைப்பு என்ற போர்வையின் கீழ், அமெரிக்கா தவிர வேறு பல நாடுகளின் இரசாயனத் தொழிற்துறை பூராவின் மீதும் கட்டுப்பாடு வகிக்கும் சூழ்ச்சி அந்த நகல் ஒப்பந்த ஷரத்துக்களில் மறைந்திருந்தது. ஏனெனில் இந்தப் ''புதிய'' ஒத்திட்டு சரிபார்க்கும் அமைப்பு சர்க்காருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளும்; அப்படியென்றால், அமெரிக்காவில் தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமான இரசாயனத் தொழிற்சாலைகள் தொடர்ந்து எத்தகைய தங்குதடையுமின்றி இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதே பொருள். இரசாயன ஆயுதங்களை ஏராளமாக உற்பத்தி செய்து குவிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் அமெரிக்கா, தன்னுடைய இந்தப் பணிக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய எல்லா சர்வதேச உடன்பாட்டு நகல்களையும் நிராகரித்து வருகிறது என்பதை மறுக்க முடியாத உண்மைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. உலகப் பொதுஜன அபிப்பிராயத்தை

ஏமாற்றி திசை திருப்பும் நோக்குடன், அமெரிக்கா சோவியத் யூனியன் மீது, இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்துகிறது.

சமாதானத்தைப் பேணிக்காத்து பலப்படுத்த சாதாரண மக்கள் என்ன உதவி செய்ய முடியுமென்று கருதுகிறீர்கள்? வளர்முக நாடுகளிலுள்ள சமாதான ஆதரவாளர்களின் பாத்திரத்தை நீங்கள் எப்படி கணித்து மதிப்பிடுகிறீர்கள்?

வரலாற்றில் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்திருக்கும் மக்களால், உறுதியான காரிய நோக்குடைய செயல்களின் மூலம், அணு ஆயுதப் போர் அச்சுறுத்தலைத் தவிர்க்க முடியுமென்றும், சமாதானத்தையும் நமது புவிக்கோளில் உயிர் வாழ்க்கையையும் பேணிக் காக்கமுடியுமென்றும் நாங்கள் நம்புகிறோம்.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் முடுக்கிவிட்டிருக்கும் ஆயுதப் போட்டிக்கு உடனே முடிவுகாண வேண்டுமெனக் கோரி ஏராளமான நாடுகளில் கோடிக்கணக்கான சமாதான வீரர்கள் சிம்மக்குரல் எழுப்பியுள்ளனர்; புதிய அமெரிக்க அணு ஆயுத ஏவுகணைகள் நிலைப்படுத்தி வைப்பதை எதிர்த்தும் இயக்கம் நடத்தி வருகிறார்கள்.

உலக சமாதானத்தைப் பாதுகாக்க ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் மேன்மேலும் வீராவேசத்துடன் ஆர்த்தெழுகின்றனர். சர்வதேச நிலைமையை மேம்படுத்தவும், ஆக்கிரமிப்பு மற்றும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவும் பல்வேறு நாட்டு மக்கள் செய்துவரும் முயற்சிகளுக்கு அவர்கள் மேன்மேலும் கூடுதலாய் பங்குப் பணியாற்றி வருகின்றனர். சமாதானத்துக்கான போராட்டம் வல்லரசுகள் மட்டும் அக்கறை கொள்ளவேண்டிய விஷயமல்ல, உலக நாடுகள் அனைத்தும் பங்கேற்க வேண்டிய முக்கிய கடமை என்பதை வளர்முக நாடுகளின் மக்கள் ஆண்டுகள் செல்லச் செல்ல மேன்மேலும் கூடுதலாய் உணர்ந்து வருகிறார்கள்.

வெகுஜன சமாதான யாத்திரைகள், ''சமாதான வாரங்களை''க் கொண்டாடுதல், சமாதான வீரர்களின் தேசிய மாநாடுகள், பட்டி மன்றங்கள், கருத்தரங்குகளை நடத்துதல், போர் எதிர்ப்புப் பிரசுரங்களை வெளியிடுதல் போன்ற பல்வேறு வடிவங்களில், புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளில் யுத்த எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சில நாடுகளில், சமாதான இயக்கம், செல்வாக்குள்ள பொதுஜன சக்தியாகவும் திகழ்கின்றது. உதாரணமாக, அனைத்திந்திய சமாதானம் மற்றும் ஒருமைப்பாட்டுக் கழகம் இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிலிப்பைன்ஸ் சமாதானம் மற்றும் ஒருமைப்பாட்டுக் கவுன்சிலும்கூட, வெகுஜன ஆதரவைப் பெற்று மிகுந்த செல்வாக்குடன் விளங்குகிறது.

இன்னொரு முக்கிய அம்சத்தையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். வளர்முக நாடுகளிலுள்ள யுத்த எதிர்ப்பு இயக்கம், அந்த நாடுகளின் தேசிய எல்லைகளுக்கு அப்பாலும் விஸ்தரித்து, சர்வதேச வாழ்க்கையின் பிரதான அம்சமாகவும் திகழ்ந்து வருகிறது.

பிராந்திய மட்டத்தில் நடத்தப்பட்ட யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் இதைக் காணமுடிகிறது. உதாரணமாக, 1983 ஆகஸ்டில் டில்லியில் நடைபெற்ற ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளின் பிராந்திய மாநாட்டில் 16 தேசங்களின் பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

வளர்முக நாடுகளில் நடைபெறும் சமாதானப் போராட்டத்துக்கும் உலகளாவிய சமாதான இயக்கத்துக்குமிடையே ஒத்துழைப்பும் ஒருங்கிணைவும் மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. 1983 ஜூனில், பிராகில் நடைபெற்ற சமாதானம் மற்றும் உயிர் வாழ்க்கைக்கான, அணு ஆயுதப் போரை எதிர்ப்பதற்கான உலகப் பேரவையில், வளர்முக நாடுகளிலிருக்கும் யுத்த எதிர்ப்பு இயக்கம் மிகவும் முக்கியமான பாத்திரம் வகித்தது; இந்தப் பேரவையில் பங்கெடுத்துக் கொண்ட பிரதிநிதிகளில் 40 சதவீதத்தினர் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து வந்திருந்தார்கள். உலகப் பேரவையின் வெற்றிக்கு அவர்கள் சிறந்த பங்காற்றினர்; அதனுடைய யுத்த எதிர்ப்பு உணர்ச்சியை மேலும் கூர்மையாக்கினர்; புதிய கருத்துக்களையும், ஸ்தூலமான ஆலோசனைகளையும் வெளியிட்டு பேரவையின் நடவடிக்கைகளை மேலும் செழுமைப்படுத்தினர்.

உலக சமாதான இயக்கத்தை, ''மாஸ்கோவின் கைவேலை'' என்று அழைப்பதன் மூலம், அதை சிறுமைப்படுத்த அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியுற்றன. ''படைக் குறைப்பு' என்ற சொல்லை ஒருவர் உச்சரிக்கும் முன்பே, அவர் நாட்டைக் காட்டிக்கொடுப்பவர், இரவு நேரத்தில் கோட்டைக் கதவை எதிரிக்குத் திறந்துவிடும் கயவர் என்று பட்டம் சூட்டப்பட்டு விடுகிறார்'' என்று மேற்கு ஜெர்மன் கிண்டல் எழுத்தாளர் டீய்ட்டர் ஹில்ட்பிராண்ட் குத்தலாக எழுதியிருக்கிறார். மேலை நாடுகளில் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் ''ரகசியக் கம்யூனிஸ்டுகள்'' என்றுதான் அண்மைக் காலம் வரையிலும் அழைக்கப்பட்டார்கள். இப்போது இத்தகைய கூற்றுக்களின் வண்டவாளம் அம்பலமாகி விட்டது; உண்மையை யாரும் மூடி மறைக்க முடியவில்லை. அதேசமயம், அணு ஆயுதப் பேரழிவுக்கு எதிரான போராட்டத்தில் மிகவும் முனைப்பாகவும் உறுதியாகவும் செயல்படும் வீரர்களுக்கிடையே கம்யூனிஸ்டுகள் இருப்பதில் வியப்பேதுமில்லை. யுத்த எதிர்ப்பு இயக்கத்தில் அவர்கள் கலந்து

கொள்வது, அந்த இயக்கத்தின் பரந்த மற்றும் பிரதிநிதித்துவம் வாய்ந்த தன்மையை எவ்வகையிலும் பாதிக்கவில்லை; மாறாக, அந்த இயக்கம் மேலும் காரியநோக்குடன் செயல்படுவதற்குத்தான் உதவி செய்கிறது.

யுத்த எதிர்ப்பு இயக்கம் இன்று மிக முக்கிய அம்சமாகத் திகழ்கிறது; பல்வேறு அரசாங்கங்களும் இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும், இந்த இயக்கம் தனது வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் அனைத்தையும் ஏற்கெனவே பயன்படுத்திவிட்டது என்று கூறுவதற்கில்லை. உலகம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறது, மனிதகுலத்தை மாபெரும் அபாயம் எதிர்நோக்கியுள்ளது, அதை அகற்றிட அனைவரும் அருமுயற்சி ஆற்றிட வேண்டும் என்று உலக மக்கள் மேன்மேலும் கூடுதலாய் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

4. இன்றைய உலகப் பிரச்சினைகள்

மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் பந்தோபஸ்துக்கு உறுதியளிக்க என்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறீர்கள்?

தன்னுடைய ''ஜீவாதார நலன்களின் மண்டலமாய்'' மத்திய தரைக்கடலைக் கருதிவரும் அமெரிக்கா, அதை ஓர் ''அமெரிக்க ஏரி''யாக மாற்றிவிட முயன்றுவரும் அந்நாடு, அப்பிரதேசத்தில் நெருக்கடிக்கு தூபமிட்டு வருகிறது. தேவை ஏற்படும்போது, சமீப மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு தன்னுடைய ஆக்கிரமிப்புப் படைகளை விமானம் மூலம் அனுப்ப, மத்திய தரைக்கடல் பிராந்தியத்திலுள்ள **நேட்டோ** நாடுகளின் விமான தளங்களையும் வான வீதியையும் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் அமெரிக்கா பெற்றுள்ளது.

அமெரிக்க ஆறுவது கடற்படை பல ஆண்டுகளாகவே மத்திய தரைக்கடலில் தங்கியுள்ளது இந்தப் பிரதேசத்தில் தன்னுடைய இராணுவ முன்னிலையை அமெரிக்கா சன்னஞ்சன்னமாக அதிகரித்து வந்துள்ளது. தளங்கள், தகவல் தொடர்பு கேந்திரங்கள், ஆயுத சோதனை வசதிகள், ஆயுதக் கிடங்குகள், எரிபொருள் சேமிப்பு நிலையங்கள் உள்பட சுமார் 200 இராணுவ அமைப்புக்களை 1977 ஆம் ஆண்டிலேயே அது பெற்றிருந்தது. இந்த நடவடிக்கைகள் பூராவையும் ஆக்கிரமிப்புத் தன்மை படைத்தவை என்றுதான் கருத முடியும்; ஏனெனில், மத்திய தரைக்கடல் அமெரிக்காவிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளது; அந்தப் பிராந்தியத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், அமெரிக்காவின் பந்தோபஸ்துக்கு எத்தகைய அச்சுறுத்தலையும் ஏற்படுத்த முடியாது.

தன்னுடைய தெற்கு எல்லைகளுக்கு மிக அருகில் இருக்கும் மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் இராணுவ-அரசியல் நிலைமையைப்பற்றி சோவியத் யூனியன் அசிரத்தையாக இருக்க முடியாது. சோவியத் யூனியன் கருங்கடல் வழியாக மத்திய தரைக்கடலுடனும், அதற்கும் அப்பால் அட்லாண்டிக் மாகடலுடனும்

இணைக்கப்பட்டிருக்கிறது. சோவியத் நாட்டின் மிகமுக்கியமான கடல் வழி வர்த்தகப் பாதையாகவும் இது திகழ்கிறது. அதனால்தான் தக்க பதில் நடவடிக்கைகளை எடுக்கும்படி சோவியத் யூனியன் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறது.

ஆனால், மத்திய தரைக்கடல் பிரதேசத்தில், எத்தகைய இராணுவ மோதல் நிலையையும் போட்டியையும் சோவியத் யூனியன் விரும்ப வில்லை. நிலையான சமாதானம் மற்றும் ஒத்துழைப்பு மண்டலமாக மத்திய தரைக்கடல் பிராந்தியம் விளங்க வேண்டுமென்று அது கருதுகிறது.

மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் நெருக்கடி நிலையைத் தணிப்பதற்கு ஸ்தூலமான பிரேரணைகளை சோவியத் யூனியன் 1970 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலேயே வெளியிட்டது. மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் பதற்றத் தணிவுக்கான ஒரு விரிவான வேலை திட்டத்தை வார்சா ஒப்பந்த நாடுகள் 1980-ல் வெளியிட்டன. அந்த வேலைத் திட்டத்தில் கண்டுள்ள அம்சங்கள் வருமாறு:

— இராணுவத் துறையில் நம்பிக்கைச் சூழலை ஏற்படுத்தும் பயனுறுதியான நடவடிக்கைகளை அந்தப் பிரதேசத்துக்குப் விஸ்தரித்தல்;

— மத்திய தரைக்கடல் பிரதேசத்திலுள்ள ஆயுதப் படைகளை ஒருங்கிணைந்த முறையில் குறைத்தல்;

— அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருக்கும் போர்க் கப்பல்களை மத்திய தரைக்கடலிலிருந்து வாபஸ் பெறுதல்;

— அணு ஆயுதம் பெற்றிராத மத்திய தரைக்கடல் நாடுகளின் பிரதேசங்களில் அணு ஆயுதங்களை நிலைப்படுத்தி வைக்காமலிருத்தல்;

— அணு ஆயுதங்களைத் தனது பிரதேசத்தில் நிலைப்படுத்தி வைக்க அனுமதி அளிக்காத எந்தவொரு மத்திய தரைக்கடல் நாட்டுக்கு எதிராகவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லையென்று எல்லா அணு ஆயுத நாடுகளும் ஒப்புக் கொள்ளுதல்.

மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் நெருக்கடியைத் தணிப்பதற்கு உதவும் வகையில் வேறு நாடுகள் வெளியிடும் முன்முயற்சிகளையும் தெரிவிக்கும் கருத்துக்களையும் ஆராய்வதற்குத் தாங்கள் தயார் என்றும் சோஷலிச நாடுகள் அதேசமயம் உறுதியாகத் தெரிவித்தன.

எனினும், சோஷலிச நாடுகளின் இந்தப் பிரேரணைகளுக்கு அமெரிக்காவும் ஏனைய நேட்டோ நாடுகளும் எத்தகைய பதிலும் அளிக்கவில்லை.

சோவியத் யூனியன் தன்னுடைய சுயநல நோக்கங்களுக்காக இந்துமா கடலில் இராணுவ அரசியல் நிலைமையை மோசமடையச் செய்கிறது என்று அடிக்கடி கூறப்படுகிறது. அப்படித்தானா?

இல்லை, அப்படியல்ல. இந்து மாகடல் பிராந்தியத்தில் எங்களுக்கு சுயநல நோக்கங்கள் என்றுமே இருந்ததில்லை. எங்களுக்கு அங்கே எங்கேயும் இராணுவ தளங்கள் இல்லை; தளங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணமும் கிடையாது. அந்தப் பிராந்தியத்திலுள்ள எண்ணெயில் எங்களுக்கு நாட்டமில்லை. உலகின் இந்தப் பகுதியின் மீதும், அதன் கடல் மார்க்கங்கள் மீதும் கட்டுப்பாடு வகிக்க நாங்கள் என்றும் முயன்றதில்லை, இப்போதும் முயலவில்லை. உலகின் வேறு எந்தப் பகுதியையும் போலவே, இந்தப் பிராந்தியமும், அதை ஒட்டியுள்ள நாடுகளது ஜீவாதார நலன்களின் மண்டலமாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய, வேறு எந்தவொரு நாட்டின் ஜீவாதார மண்டலமாகவும் அல்ல என்று சோவியத் யூனியன் கருதுகிறது.

இந்து மாகடலிலுள்ள இராணுவ- அரசியல் நிலைமை, சோவியத் யூனியனுக்கும் ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள ஏனைய சோஷலிச நாடுகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியை சோவியத் நாட்டின் தொலைகிழக்குப் பகுதியுடன் இணைக்கும் கடல் மார்க்கங்கள் இந்துமாகடல் வழியாகத்தான் செல்கின்றன என்பதையும் ஒருவர் மறந்துவிடக்கூடாது. இந்தக் கடல்மார்க்கம் எங்களுடைய பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமானது. இன்னொரு விஷயமும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பிரதேச ரீதியில் பார்த்தால் சோவியத் யூனியன் பாரசீக வளைகுடாவுக்கு, அதன் மூலம் இந்து மாகடலுக்கு மிக அருகில், அதாவது 500-600 கிலோ மீட்டர் தூரத்தில், உள்ளது. எனவே, அந்தப் பிராந்தியத்தில் ஸ்திரமான சமாதான நிலைமை நீடிக்க வேண்டுமென்பதிலும், அங்கே இராணுவ ரீதியாக பதட்டநிலை அதிகரிக்கக் கூடாது என்பதிலும் நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். இந்தப் பிராந்தியத்தில் மாஸ்கோவுக்குள்ள ஒரேயொரு ''சுயநல நோக்கம்'' இதுவேயாகும். இந்தியா, ஸ்ரீலங்கா, மடகாஸ்கர் மற்றும் ஏனைய கரையோர நாடுகள் 1971 ஆம் ஆண்டிலேயே, இந்து மாகடலை சமாதான மண்டலமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமெனக் கோரி ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைத்த கருத்தை நாங்கள் முனைப்பாகவும் உறுதியாகவும் ஆதரித்து வருவதற்கு இதுவே காரணம்.

1980 டிசம்பரில் சோவியத் யூனியன் பல பிரேரணைகளை வெளியிட்டது; ''பாரசீக வளைகுடாவுக்கான சமாதான திட்டம்'' என்று இது பொதுவாக அழைக்கப்படுகிறது. இந்த வளைகுடா இந்து மாகடலை ஒட்டியுள்ளது. இந்த வளைகுடாவில் பதற்றத் தணிவு ஏற்பட்டால், அந்தப் பிராந்தியம் முழுவதிலும் நிலைமையை மேம்படுத்த அது

உதவும். அந்தத் திட்டத்தில் ஐந்து அம்சங்கள் இடம் பெற்றிருந்தன:

— பாரசீக வளைகுடாப் பகுதியிலும், அதை ஒட்டியுள்ள நிலைகளிலும் அன்னிய இராணுவ தளங்களை அமைக்காதிருத்தல்; அணு ஆயுதங்களையோ அல்லது வேறுவகையான சர்வநாச ஆயுதங்களையோ அங்கே நிலைப்படுத்தி வைக்காமலிருத்தல்;

— பாரசீக வளைகுடா நாடுகளுக்கெதிராக படை பலத்தை உபயோகிப்பதோ அல்லது உபயோகிக்கப் போவதாய் அச்சுறுத்துவதோ கூடாது; அந்நாடுகளின் உள் விஷயங்களிலும் தலையிடக் கூடாது;

—பாரசீக வளைகுடா நாடுகள் தேர்ந்தெடுத்திருக்கும் கூட்டுச் சேராமை அந்தஸ்தை மதித்து நடத்தல்; அணு ஆயுத நாடுகள் உறுப்பினர்களாய் இருக்கும் எந்தவொரு இராணுவக் கூட்டணிக் குள்ளும் அவற்றை ஈர்க்காமலிருத்தல்;

— இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு அவற்றின் செல்வ வளங்கள் மீதுள்ள உரிமையை மதித்து நடத்தல்;

— சகஜமான வர்த்தகத்துக்கும், இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகளை உலகின் இதர நாடுகளுடன் இணைக்கும் கடல்மார்க்கங்களைப் பயன்படுத்துவதற்கும் எத்தகைய இடையூறுகளையோ அல்லது அச்சுறுத்தல்களையோ ஏற்படுத்தாதிருத்தல்.

இந்தப் பிரேரணைகளை—சோவியத் யூனியன் இப்போதும் ஆதரித்து வரும் இப்பிரேரணைகளை— அமெரிக்கா கடுமையாக எதிர்த்தது. இதில் வியப்பேதுமில்லை. ஏனெனில் இந்தப் பிரேரணைகள் அமல் நடத்தப்பட்டால், இப்பகுதியில் அமெரிக்காவின் ஆசைக் கனவுகள் புகைந்து போகும். பாரசீக வளைகுடா மீது கட்டுப்பாடு வகிக்கவும், "தேவை ஏற்பட்டால்" அங்குள்ள எண்ணெய் வயல்களைக் கைப்பற்றவும், அந்தப் பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமெரிக்கா தீட்டியிருக்கும் திட்டம் சிதைந்து போகும். இங்கே சுயநல நோக்கம் யார் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது அல்லவா!

ஐ.நா. பொதுச் சபையின் தீர்மானத்துக்கேற்ப, இந்துமாகடல் பற்றி ஒரு சர்வதேச மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. கரையோர நாடுகளின் விருப்பத்தைப் புறக் கணிக்கும் வகையில், அத்தகைய மாநாட்டை நடத்த விடாமல் தடுக்க, அமெரிக்கா சகல வழிகளிலும் முயன்று கொண்டிருக்கிறது. அதற்கு மாறாக, சோவியத் யூனியன் மாநாடு வெற்றிகரமாக நடப்பதற்கு சாதகமான சூழ்நிலையை சிருஷ்டிக்க முற்பட்டது; மாநாடு தொடங்கு வதற்கு முன்னர், இந்தப் பிராந்தியத்திலுள்ள நிலைமையை மேலும் சிக்கலாக்கக்கூடிய நடவடிக்கைகள் எதையும் எடுக்க வேண்டாமென்று இந்து மாகடல் மார்க்கங்களைப் பயன்படுத்திவரும் எல்லா நாடுகளையும் 1982 செப்டம்பரில் கேட்டுக் கொண்டது.

இந்தப் பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துவது மற்றும் குறைப்பதுபற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை, 1978-ல் அமெரிக்கத் தரப்பு முறித்துக் கொண்ட அந்தப் பேச்சு வார்த்தைகளை,எந்த சமயத்திலும் மீண்டும் தொடங்க தான் தயாராக இருப்பதாய் சோவியத் யூனியன் அறிவித்தது.

ஒப்பந்த ஷரத்துக்களைத் தீட்டும் பணி ஏற்கனவே தொடங்கி விட்ட சமயத்தில்தான், வாஷிங்டன் அந்தப் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு விட்டது என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். ஏன் அவ்வாறு செய்தது? ஏனெனில், இந்துமாகடலை பிரம்மாண்ட அளவில் இராணுவ மயப்படுத்த அது நோக்கம் கொண்டிருந்ததும், எனவே தனது கரங்களைக் கட்டிப் போட்டுக் கொள்ள அது விரும்பாததுமே இதற்குக் காரணம்.

இந்தப் பிராந்தியத்திலுள்ள இன்றைய நிலைமை, எவருக்கும் கவலை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது. புதிய உலகப் போர் வெடிக்குமேயானால், அது பெரும்பாலும் மத்தியக் கிழக்கு—பாரசீக வளைகுடா—இந்துமாகடல் பிராந்தியத்தில்தான் முதலில் ஆரம்பமாகக் கூடும் என்று ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க பிரதம சேனாதிபதி ஜெனரல் பெர்னார்டு ரோஜர்ஸ் கூறினார். தான் என்ன பேசுகிறோம் என்பதை ரோஜர்ஸ் நன்கு அறிந்திருக்க வேண்டும். பாரசீக வளைகுடா மற்றும் இந்துமாகடல் பிராந்தியத்தை எப்படி அமெரிக்கா மிகக் குறுகிய காலத்திற்குள், நமது உலகத்திலேயே மிகவும் போர் அபாயம் உள்ள பிரதேசங்களில் ஒன்றாக மாற்றி விட்டது என்பதை மீதிப் பேரை விட அவர் மிகவும் நன்றாகவே ஒருவேளை அறிந்திருக்கக் கூடும்.

இந்துமாகடலின் வடமேற்குப் பகுதியில் பிரசன்னமாயிருக்கும் அமெரிக்கக் கடற்படையின் வலிமை, அந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் ஒட்டுமொத்த இராணுவ வலிமையைக் காட்டிலும் கூடுதலானது என்று அமெரிக்க இராணுவ நிபுணர்கள் மதிப்பிட் டுள்ளனர். இந்தப் பிராந்தியத்தின் கடற்கரை நெடுகிலும், ஓமான், சோமாலியா, கீன்யா, மற்றும் தியகோ கார்சியா முதலிய இடங்களில் அமெரிக்கா இராணுவ தளங்களை அமைத்துள்ளது; அல்லது அமைத்துக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் முயற்சியில், பென்டகன் பிரசாரகர்கள், "இந்துமாகடலில் உள்ள பிரம்மாண்டமான சோவியத் இராணுவ முன்னிலையை"ப் பற்றி அல்லும்பகலும் அயர்வுசோர்வின்றி வதந்திகளைப் பரப்பிவருகின்றனர். இது அப்பட்டமான பொய். இந்தப் பிராந்தியத்தில் சோவியத் போர்க் கப்பல்கள் இருப்பது உண்மைதான். கடந்த 7 அல்லது 8 ஆண்டுகளில், ஒரு சோவியத் குரூய்சர், ஒன்று அல்லது இரண்டு நாசகாரிக் கப்பல்கள், மூன்று அல்லது நான்கு வழிகாப்புக் கப்பல்கள்,

பல பிறிய போர்க் கப்பல்கள் முதலியன இந்துமாகடலில் சஞ்சரித்துள்ளன. ஒட்டுமொத்தம் 10-12 சோவியத் கப்பல்களைவிட அதிகமாக அங்கே இருந்ததில்லை. இந்தப் பிராந்தியத்திலுள்ள அமெரிக்கக் கடற்படையைப் போலன்றி, சோவியத் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையும் இயைபும் இந்தக் கால கட்டத்தில் அனேகமாய் மாறவே இல்லையெனலாம். இந்துமாகடலில் ஏராளமான அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்கள் பவனி வருகின்றன. இங்குள்ள சோவியத் கப்பல்கள் அனைத்தின் மொத்த எடை, ஒரேயொரு அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலின் எடையில் பாதியைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். இந்தப் பிராந்தியத்திலுள்ள அமெரிக்கக் கடற்படையின் பலம், அமெரிக்க 6ஆவது அல்லது 7ஆவது கடற்படைகளுக்குச் சமமானது. இந்துமாகடலிலுள்ள அமெரிக்கக் கடற்படையில் விமானந் தாங்கிக் கப்பல்கள், ஏவுகணைக் குருய்சர்கள், கடற்படை வீரர்கள் தரையிறங்குவதற்குப் பயன்படும் கப்பல்கள் முதலியன அடங்கியுள்ளன. ஆனல் இங்குள்ள சோவியத் போர்க் கப்பல்கள் இத்தகையவை அல்ல; கடற்கரை மீது தாக்குதல் தொடுக்கவும், வீரர்களை இறக்கி விடவும் அவை லாயக்கற்றவை.

மேலே கூறிய விவரங்களையெல்லாம் படித்த பின்னர், சுயநல நோக்கங்களைக் கடைப்பிடிப்பது யார், இந்துமாகடலிலும் பாரசீக வளைகுடாப் பகுதியிலும் மோதல்களைத் தூண்டி விடுவது யார் என்பதைப் பற்றி யாருக்கேனும் எத்தகைய ஐயமாவது இருக்க முடியுமா?

மத்தியக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை நோக்கமாய்க் கொண்டிருக்கும் அமெரிக்காவின் மத்தியக் கிழக்குக் கொள்கையை நீங்கள் ஏன் கண்டித்து விமர்சிக்கிறீர்கள்?

மத்தியக் கிழக்கில் அமெரிக்கா கடைப்பிடித்துவரும் கொள்கை, அப்பிராந்தியத்திலுள்ள மோதலுக்கு சமாதான பூர்வமான, விரிவான, நியாயமான தீர்வு காண்பதை நோக்கமாய்க் கொண்டிருக்கவில்லை என்பதுதான் எதார்த்தம். அந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அரசியல் இராணுவ நிலைகளை பலப்படுத்துவதே அதன் உண்மையான குறிக்கோள். கேம்ப் டேவிட் ஒப்பந்தமும், ரீகன் திட்டமும் இந்தக் குறிக்கோளையே கொண்டுள்ளன.

முதலில் கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தை எடுத்துக் கொள்வோம். வாஷிங்டன் தலைமையின் கீழ், இஸ்ரேலும் எகிப்தும் தனியாகச் செய்து கொண்ட இவ்வொப்பந்தம், அதன் மூலகர்த்தாக்கள் திருவாய் மலர்ந்தது போல, சமாதானத்தைக் கொண்டுவரவில்லை. அதனல்

கொண்டுவந்திருக்கவும் முடியாது. ஏனெனில், ''சமாதான ஒப்பந்தம்'' என்று அழைக்கப்பட்ட இந்த போலி ஏற்பாடு, நீண்டகால மோத லுக்கான பிரதான காரணங்களை—பாலஸ்தீனப் பிரச்சினை, அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு போன்றவற்றை—அகற்றிட வில்லை. அதுமட்டுமல்ல, இந்த மோதலில் ஈடுபட்டிருக்கும் மிகப் பெரும்பான்மையான மக்களின் முதுகுக்குப் பின்னால் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது; அவர்களுடைய நலன்களுக்கு இது முற்றிலும் முரணானதாகும்.

பொதுவாகப் பேசுமிடத்து, ஒரு மோதலில் ஈடுபட்டிருக்கும் எல்லாத் தரப்புக்களின் நியாயமான நலன்களையும் உரிமைகளையும் புறக்கணித்துவிட்டு, தனியாக செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள், அடிப்படையிலேயே அநியாயமானவை; சட்ட விரோதமானவை. ஆக்கிரமிப்பாளனுக்கும் ஆக்கிரமிப்புக்கு பலியானவர்களுக்கு மிடையேயுள்ள முரண்பாடுகளைத் தீர்க்காமல் விட்டு விட்டால், அவை புதிய போருக்கான விதைகளைத் தம்முள் கொண்டிருக்கும்.

கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் பின்விளைவுகள் இதை ருசுப்பிக் கின்றன; லெபனானில் இஸ்ரேல் ரத்தக் களரியில் ஈடுபடவும் இதுதான் வழிவகுத்தது; லெபனான் மற்றும் பாலஸ்தீனிய மக்களுக்கெதிரான இன அழிவுப் போரை இஸ்ரேல் நடத்துவதற்கும் இதுதான் வழி கோலியது.

கேம்ப் டேவிட் உடன்பாட்டிலிருந்து எத்தகைய படிப்பினைகளையும் கற்றுக் கொள்ளாத வாஷிங்டன், ரீகன் திட்டம் என்ற ஓர் ஏற்பாட்டை 1982 செப்டம்பரில் அறிவித்தது. கேம்ப் டேவிட் உடன்பாட்டை முன் மாதிரியாகக் கொண்டு, இஸ்ரேலுடன் ''தனித்தனியான ஒப்பந் தங்களைச்'' செய்து கொள்வதற்காகப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் படி அண்டையிலுள்ள அரபு நாடுகளை நிர்ப்பந்தப்படுத்துவதைத்தான் ரீகன் திட்டம் நோக்கமாய்க் கொண்டிருந்தது; நாற்பது லட்சம் பாலஸ்தீனிய மக்கள் தமது சொந்த சுதந்திர அரசை ஸ்தாபித்துக் கொள்ளும் ஆசையை ஒரேயடியாக ஒழித்துக்கட்ட இவ்வாறு ரீகன் திட்டம் முயன்றது.

வாஷிங்டனின் திட்டப்படி பாலஸ்தீனிய மக்களுக்கு பல ஆண்டுக் காலத்திற்கு உள்நாட்டு சுயாட்சி வழங்கப்படும்; அதே சமயம் மேற்குக் கரையிலும் காஜா பகுதியிலும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புத் தொடரும். ''ரீகன் திட்டம்'' பாலஸ்தீனிய மக்களுக்கு அரசியல் சுயாட்சி உரிமையை வழங்கவில்லை. இவ்வாறு, ஆட்சி மாற்றக் காலத்தின் இறுதியில்கூட, இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பகுதிகளில் அது புதிதாகக் குடியிருப்புக்களை அமைக்காது என்ற தெளிவற்ற அமெரிக்க வாக்குறுதிதான் பாலஸ்தீனிய மக்களுக்கு அளிக்கப்படும். இது வெறும் சாரமற்ற வாக்குறுதியேயாகும்.

ஏமெனில், தனது "கேந்திரக் கூட்டாளியான" வாஷிங்டனின் ஆசியுடன் மேற்குக்கரையில் ஏராளமான குடியிருப்புக்களைத் தொடர்ந்து அமைத்துக் கொண்டிருக்கும் இஸ்ரேல், சுதந்திர பாலஸ்தீனிய அரசு அமைக்கப்படவிருக்கும் பிரதேசத்தைக் கபளீகரம் செய்வதற்கே தந்திர சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

இப்போது லெபனானிலுள்ள நிலைமையைக் கவனிப்போம். தன்னுடன் சரணாகதி ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி லெபனானைப் பணிய வைப்பதற்காக இஸ்ரேலிய இராணுவம் அந்நாட்டில் மேற் கொண்ட காட்டுமிராண்டிச் செயல்களையும், அமெரிக்கக் கடற்படை அந்நாட்டின் மீது பயங்கரமான குண்டு மழை பொழிந்ததையும், பன்னெடுங்காலமாய் துன்பதுயரத்தில் அமிழ்ந்து கிடக்கும் இந்நாட்டில் அமெரிக்கா இராணுவத் தலையீடு நடத்தியதையும் எவரும் மறக்கவே முடியாது. தென் லெபனானிலிருந்து ஆக்கிரமிப்புப் படைகளை வாபஸ் வாங்குவது பற்றி பேச்சு நடைபெற்று வந்தபோதிலும், மேலும் அதிக எண்ணிக்கையில் இஸ்ரேலிய டாங்குகள் அந்நாட்டுக்குள் அனுப்பப் படுகின்றன. படையெடுப்பாளர்கள் லெபனான் மக்கள் மீது பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

அமெரிக்க ஆயுதங்களுடனும், அமெரிக்கா தாராளமாக அளித்தி ருக்கும் நிதிகளைக் கொண்டும்தான் இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது பகிரங்க ரகசியம். தன்னுடைய மத்தியக் கிழக்குக் கொள்கையை நிறைவேற்று வதற்கு, இஸ்ரேலைத்தான் அமெரிக்கா மேன்மேலும் அதிகமாய் நம்பிக் கொண்டிருக்கிறது என்பதை 1984 அக்டோபரில் இஸ்ரேலியப் பிரதமர் ஷிமான் பெரேசுக்கும் ஜனாதிபதி ரீகனுக்குமிடையே நடை பெற்ற பேச்சுவார்த்தைகள் நன்கு தெளிவாக்குகின்றன. 1985—ல் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஏற்கனவே 260 கோடி டாலர் உதவி அளித்துள்ளது; மேலும் 100 கோடி டாலர் அளிக்கவும் வாக்குறுதி தந்துள்ளது. உதவித் தொகையை மொத்தம் 400 கோடி டாலராக உயர்த்த வேண்டுமென்று இஸ்ரேலியத் தலைமை கேட்டுக் கொண்டி ருப்பதாய் நியூயார்க்டைம்ஸ் பத்திரிகைதெரிவிக்கிறது. சாப்ரா, ஷட்டிலா என்ற முகாம்களில் படுகொலைகள் புரிந்த பாதகன் அரியேல் ஷரோன் புதிய இஸ்ரேலிய அரசாங்கத்தில் இப்போது அமைச்சராக உள்ளான். அமெரிக்காவின் இராணுவத் திட்டங்களை அமல் நடத்துவதில் செய்த சேவைகளுக்காக அமெரிக்கா இஸ்ரேலுக்கு 7,000 கோடி டாலர் கடன் பட்டிருக்கிறது என்று அவன் அறிவித்தான்.

அமெரிக்க நிர்வாகம் இஸ்ரேலுக்கு ஏன் இவ்வளவு தாராளமாகப் பொருளாதார உதவியும் இராணுவ உதவியும் அளித்து வருகிறது? அதற்குப் பல காரணங்கள் உள்ளன. மத்தியக் கிழக்கைத் தன்னுடைய "ஜீவாதார நலன்களின்" மண்டலம் என்று ஒருதலைச் சார்பாகவே, தானடித்தமூப்பாய், பிரகடனம் செய்து விட்ட அமெரிக்கா அந்தப்

பிராந்தியத்தில் தன்னுடைய மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதென்ற ஒரே குறிக்கோளைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால், சற்று மெருகுபூசிய காலனியாதிக்கத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பது என்று பொருளாகும்.

மத்தியக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண நீங்கள் முன் வைக்கும் பிரேரணைகள் யாவை?

மத்தியக் கிழக்குப் பிரச்சினைக்கு மிகவும் விரிவான அடிப்படையில் தீர்வுகாண சோவியத் யூனியன் இடையறாது பாடுபட்டு வந்துள்ளது. 1971—ல் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட சமாதான வேலைத் திட்டம், 26ஆவது கட்சிக் காங்கிரசின் (1981) தஸ்தாவேஜுகள், மத்தியக் கிழக்கில் நியாயமான, நிலையான தீர்வுகாணும் நோக்குடன் 1982-ல் சோவியத் யூனியன் வெளியிட்ட திட்டம் ஆகியவற்றில் நாங்கள் கூறும் பிரேரணைகளைக் காணலாம். மத்தியக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சோவியத் யூனியன் 1984 ஜூலையில் கீழ்க்காணும் பிரேரணைகளை வெளியிட்டது. மிகப்பரந்த சர்வதேச ஆதரவைப் பெற்ற அப்பிரேரணைகள் வருமாறு:

முதலாவது: ஆக்கிரமிப்பின் மூலம் இதர மக்களின் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்வதை அனுமதிக்க முடியாது என்ற கோட்பாடு மிகவும் கறாராகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அப்படியென்றால், 1967-க்குப் பின்னர் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்ட கோலான் குன்றுகள், மேற்குக் கரை, காஜாபகுதி, லெபனான் பிரதேசம் முதலிய எல்லாப் பிராந்தியங்களும் அரபு மக்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும். 1967-க்குப் பின்னர், அரபுப் பிரதேசங்களில் அமைக்கப் பட்டிருக்கும் இஸ்ரேலியக் குடியிருப்புக்களை அகற்றிட வேண்டும். இஸ்ரேலுக்கும் அண்டையிலுள்ள அரபு நாடுகளுக்குமிடையேயிருக்கும் எல்லைகள் மீறப்படவொண்ணாதவை என்று பிரகடனம் செய்ய வேண்டும்.

இரண்டாவது: பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம்தான் பாலஸ்தீன மக்களின் ஒரேயொரு சட்டரீதியான பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகும். பாலஸ்தீன மக்களின் பராதீனப்படுத்த முடியாத உரிமைக்கு—சுயநிர்ணய உரிமை, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்படும் மேற்குக் கரை, காஜா பகுதி ஆகிய பாலஸ்தீனப் பிரதேசங்களில் சொந்த சுதந்திர அரசைநிலைநாட்டிக்கொள்ளும் உரிமைஆகியவற்றுக்கு-உத்தரவாதமளிக்க செயல்முறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெஸ் நகரில் கூடிய அரபு உச்சி மாநாட்டின் தீர்மானத்துக்கு ஏற்ப, பாலஸ்தீன மக்களின் சம்மதத்தின் பேரில், மேற்குக் கரையையும்

காஜாப் பகுதியையும் ஒரு சில மாதங்களே நீடிக்கக் கூடிய ஒரு குறுகிய காலகட்டத்துக்கு இஸ்ரேல், ஐ. நா. கட்டுப்பாட்டுக்கு ஒப்படைத்து விடவேண்டும்.

சுதந்திரமான பாலஸ்தீன அரசு ஏற்படுத்தப்பட்ட பின்னர், முழு அரசுரிமையையும் பெற்றிருக்கும் அந்த தேசம், ஒரு சமஷ்டியை அமைத்துக் கொள்ளும் சாத்தியப்பாடு உள்பட, அண்டை நாடுகளுடன் தனக்குள்ள உறவுகளின் தன்மையை அதுவே நிர்ணயித்துக் கொள்ளும்.

ஐ. நா. நிர்மானங்களில் கண்டுள்ளபடி, பாலஸ்தீன அகதிகள் தங்களுடைய தாயகத்துக்குத்திரும்பும் சாத்தியக்கூறு இருக்க வேண்டும்; தாங்கள் இழந்துவிட்ட உடைமைகளுக்குத் தகுந்த நஷ்டஈடு பெறவும் அவர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும்.

மூன்றாவது: ஜெருசலேமின் கிழக்குப் பகுதியை இஸ்ரேல் 1967-ல் கைப்பற்றிக் கொண்டது. மிக முக்கிய இஸ்லாமிய திருக்கோயில்களில் ஒன்று அங்கே அமைந்துள்ளது. இந்தப் பகுதி மீண்டும் அரபுகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டு, அது பாலஸ்தீன அரசின் பராதீனப்படுத்த முடியாத பகுதியாகத் திகழ வேண்டும். மூன்று மதங்களைச் சேர்ந்த பக்தர்களும் சுதந்திரமாக வழிபாடுகளை நடத்துவதற்கு ஜெருசலேம் பூராவிலும் வகை செய்யப்பட வேண்டும்.

நான்காவது: பந்தோபஸ்துடன், சுதந்திரமாய் வாழவும் வளரவும் இப்பிராந்தியத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் இருக்கும் உரிமைக்கு, பரிபூரண பரஸ்பரத் தன்மையின் அடிப்படையில் உத்தரவாதம் அளிக்க வேண்டும். ஏனெனில், சில நாடுகளின் பந்தோபஸ்தைக் காலுக்கடியில் போட்டு மிதித்துத் துவைத்த வண்ணம், வேறு சில நாடுகளின் உண்மை யான பந்தோபஸ்துக்கு உறுதியளிப்பது சாத்தியமல்ல.

ஐந்தாவது: அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலுள்ள போர் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சமாதானத்தைப் பிரகடனம் செய்ய வேண்டும். அப்படியென்றால், இஸ்ரேலும் எதிர் காலப் பாலஸ்தீன அரசும் உள்பட, சச்சரவில் ஈடுபட்டிருக்கும் எல்லா நாடுகளும், ஒருவர் மற்றவரின் அரசுரிமையையும், சுதந்திரத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் மதித்து நடப்பதாகவும், சமாதான பூர்வமான பேச்சுவார்த்தைகளின் மூலம் எல்லாத் தகராறுகளுக்கும் தீர்வு காண்பதாகவும் சபதமேற்றுக் கொள்ள வேண்டுமென்று அர்த்த மாகும்.

ஆறாவது: இந்தத் தீர்வுக்கு சர்வதேச உத்தரவாதங்கள் அளிக்கப்பட வேண்டும். ஐ. நா. பந்தோபஸ்து சபையின் நிரந்தர உறுப்பினர்களோ அல்லது பந்தோபஸ்து சபை முழுவதுமோ இந்த உத்தரவாதத்தை மேற் பார்வையிட்டு நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியும். இத்தகைய உத்தரவாதங்களில் பங்கெடுத்துக் கொள்ள சோவியத் யூனியன் தயாராக உள்ளது.

மத்தியக் கிழக்கு சம்பந்தமாக, பிரதிநிதித்துவமுடைய ஒரு சர்வ தேச மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்றும், பாலஸ்தீனிய விடுதலை ஸ்தாபனம் உள்பட சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், இத்தகைய மாநாட்டின் மூலம்தான் மத்தியக் கிழக்கு நெருக்கடிக்கான தீர்வைக் காண முடியுமென்றும் சோவியத் யூனியன் நம்புகிறது.

அரபு உலகம் பூராவிலும் சோவியத் பிரேரணைகள் பரவலாக வரவேற்கப்பட்டன என்பதும், மத்தியக் கிழக்கு நெருக்கடியின் ஆணிவேர்களாக விளங்கும் அமெரிக்காவும் இஸ்ரேலும் மட்டும்தான் அவற்றை நிராகரித்து விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. மத்தியக் கிழக்குப் பிரச்சினையின் சமாதான பூர்வமான தீர்வுக்குத் தாங்கள் பரம வைரிகள் என இந்தக் "கேந்திரக் கூட்டாளிகள்" மீண்டும் ஒரு தடவை தம்மைத்தாமே அம்பலப்படுத்திக் கொண்டன.

ஈரான்– ஈராக் போர் தொடர்ந்து நடைபெறுவதையே சோவியத் யூனியன் விரும்புவதாய்க் கூறப்படுகிறது. அப்படியா?

இல்லை.

இந்த இராணுவ மோதல் பற்றி சோவியத் யூனியன் எடுத்திருக்கும் நிலை தெக்கத் தெளிதானது: இந்த சகோதரச் சண்டையை நாங்கள் எதிர்க்கிறோம்; பேச்சுவார்த்தைகளின் மூலம் இந்த சண்டைக்கு உடனடியாக முடிவு காண வேண்டுமென்றுதான் நாங்கள் விரும்பு கிறோம். ஈரானுக்கும் ஈராக்குக்குமிடையே தொடர்ந்து நடைபெறும் யுத்தம் ஏகாதிபத்தியம் மற்றும் ஜியோனிசத்தின் கரங்களையே பலப் படுத்துகிறது என்றும், சமீபக் கிழக்கிலும் மத்தியக் கிழக்கிலும் தம் முடைய நிலைகளை பலப்படுத்திக் கொள்ளவே அவை இந்தச் சண்டை யைப் பயன்படுத்திக் கொள்கின்றன என்றும் நாங்கள் கருதுகிறோம். எப்படி?

முதலாவதாக, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப் பிடித்துவரும் ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளையுமே இந்த சண்டை பலவீனப்படுத்துகிறது.

இரண்டாவதாக, ஈரான்-ஈராக் யுத்தம் இந்தப் பிரதேசத்திலுள்ள நிலைமையை மோசப்படுத்துவதன் மூலம், மேற்கு நாடுகளின் எண்ணெய் நலன்களைப் "பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு" தம்முடைய இராணுவ முன்னிலையை இப்பிராந்தியத்தில் மேன் மேலும் பெருக்கி அதிகரித்துக்கொள்ள வாஷிங்டனுக்கும் அதன் கூட்டாளி களுக்கும் ஒரு நொண்டிச் சாக்கை அளித்திருக்கிறது.

மூன்றாவதாக, அரபு உலகில் கடும் மோதல்களைத் தூண்டிவிடுவதில் ஏகாதிபத்திய மற்றும் ஜியோனிச ஒற்றர்களும் கைக்கூலிகளும் முனைந்து ஈடுபட்டுள்ளனர்; இதன் மூலம், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சக்திகளை எதார்த்த நடைமுறையில் பலவீனப் படுத்துகின்றனர்.

நான்காவதாக, மத்தியக் கிழக்கில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு தொடர்ந்து நீடித்து வருவதிலிருந்து, உலக மக்களின் கவனம் வேறு திசையில் திருப்பப்படுகிறது.

ஈரானுக்கும் ஈராக்குக்குமிடையே நடந்து கொண்டிருக்கும் யுத்தம் விவேகமற்றது, சோவியத் யூனியனுடைய நலனுக்கு அது ஏற்றதல்ல, தன்னுடைய எல்லைகளுக்கு மிக அருகில் உருவாகியுள்ள மற்றோர் அபாயகரமான நெருக்கடிதளமாகத்தான் இந்தச்சண்டையை சோவியத் யூனியன் கருதுகிறது என்பதை மேற்கூறிய விஷயங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

ஆசியாவில், குறிப்பாக இந்தோ சீனாவில், பந்தோபஸ்துப் பிரச்சினையைப்பற்றி சோவியத் யூனியன் எடுத்துள்ள நிலை யாது?

ஆசியாக் கண்டம் பூராவிலும் பந்தோபஸ்தைப் பலப்படுத்து வதற்குத்தான் சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் எப்போதும் முயன்று கொண்டிருக்கின்றன. ஆசியாவில் பந்தோபஸ்தை உறுதிப்படுத்துவதற்குக் கூட்டு நடவடிக்கைகளை வகுக்க வேண்டுமென்று 1960 ஆம் ஆண்டுகளிலேயே சோவியத் யூனியன் பிரரேபித்தது.

1981 ஆம் ஆண்டில் மங்கோலிய மக்கள் குடியரசும் இதே நோக்கம் கொண்ட ஒரு பிரேரணையை அறிவித்தது; ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய நாடுகள், தம்மிடையே அனுக்கிரமிப்பு மற்றும் படை பலத்தைப் பிரயோகியாமை பற்றி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று அந்தப் பிரேரணை கூறியது. சோவியத் யூனியன் இந்த முன் முயற்சியை ஆதரித்தது. தென் கொரியாவிலிருந்து அன்னியப் படைகளை வாபஸ் வாங்குவதன் மூலமும், சமாதான பூர்வமாக இரண்டு கொரியாக்களையும் மீண்டும் ஒன்றிணைப்பதன் மூலமும் கொரியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு வெளியிட்ட ஆக்கபூர்வமான பிரேரணை களையும் நாங்கள் ஆதரிக்கிறோம் தொலைகிழக்கிலுள்ள எல்லா நாடு களுடனும் சேர்ந்து அந்தப் பிராந்தியத்தில் பந்தோபஸ்தைப் பலப் படுத்துவதற்கான வழிவகைகளைக் காண சோவியத் யூனியன் தயாராக உள்ளது. ஐரோப்பாவில் மிகவும் பயனுள்ளவை என்று ஏற்கெனவே ருசுப்பிக்கப்பட்டிருக்கும், நம்பிக்கைச் சூழலை ஏற்படுத்துவதற்கான

சில நடவடிக்கைகளை தொலைதூரக்கிலும் அமல்படுத்துவது பற்றி ஆராய வேண்டும் என்று கருதுகிறோம். போர்க்கப்பல்கள் ரோந்து சுற்றுவதைக் கட்டுப்படுத்துவது பற்றியும், கடல்களிலும் மாகடல் களிலும் குறிப்பாக மிகவும் சுறுசுறுப்பான கடல் மார்க்கங்களைக் கொண்ட பிராந்தியங்களில் அல்லது மோதல் நிலைமைகள் தோன்றலாம் என்று கருதப்படும் இடங்களில், நம்பிக்கைச் சூழலை உண்டாக்கும் நடவடிக்கைகளை எடுப்பது பற்றியும் சர்வதேசப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்றும்,அதில் தான் பங்கெடுத்துக் கொள்ளத்தயார் என்றும் சோவியத் யூனியன் அறிவித்துள்ளது. மிகவும் முக்கியமான கடல் மார்க்கங்கள் ஆசியப் பிராந்தியத்தில் அமைந்துள்ளது அனைவரும் அறிந்ததே.

சமாதானம்,ஸ்திரத்தன்மை, நல்ல அண்டை நாட்டு உறவு மற்றும் ஒத்துழைப்பு நிலவும் மண்டலமாகத் தென்கிழக்கு ஆசியப் பிரதேசம் திகழ வேண்டுமென்று சோவியத் யூனியன் விரும்புகிறது. வியத்நாம், லாவோஸ், கம்பூச்சியா ஆகிய இந்தோ சீன நாடுகளுக்கும் ஏசியன் நாடுகளுக்குமிடையே உரசலான நிலை இருப்பதற்கு எத்தகைய புறவயமான அடிப்படைக் காரணங்களும் இல்லையென்று கருது கிறோம். இந்தப் பிராந்தியத்தில் மோதலுக்கு வழிகோலக் கூடிய அவநம்பிக்கையையும், குரோத உணர்வுகளையும் வெளியிலுள்ள ஏகாதி பத்திய சக்திகள்தான் தூண்டிவிடுகின்றன; ஏசியன் நாடுகளுக்கும் இந்தோ சீன நாடுகளுக்குமிடையே சண்டையை மூட்டிவிட அவை பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கின்றன.

வியத்நாம், லாவோஸ், கம்பூச்சியா ஆகிய நாடுகளின் ஆக்க பூர்வமான நிலையை சோவியத் யூனியன் முழுமையாக ஆதரிக்கிறது. தென்கிழக்காசியாவில் நிலைமையை சகஜப்படுத்தும் நோக்குடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டுமென்று அந்நாடுகள் ஆக்கபூர்வமான பிரேரணைகளை வெளியிட்டுள்ளன. தென்கிழக்கு ஆசியா பற்றி ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்றும், பரஸ்பர இணக்கம், ஒருவர் மற்றவரின் நலன்களை மதித்து நடத்தல் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில், வெளியார் தலையீடு எதுவும் இல்லாமல், இந்தப் பிராந்தியத்தின் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து அவற்றுக்குத் தீர்வுகாண அத்தகைய மாநாடு மிகச்சிறந்த மன்றமாக விளங்குமென்றும் அவை அறிவித்துள்ளன.

பிராந்தியப் பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்கு பரந்த அளவிலான மாநாட்டை நடத்த வேண்டுமென்ற ஆசியன் நாடுகளின் கண்ணோட்டத்தையும் இந்தப் பிரேரணை கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. கம்பூச்சியா-தாய்லாந்து எல்லையின் இருபக்கங் களிலும் பந்தோபஸ்து மண்டலத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கம்பூச்சியா வெளியிட்டிருக்கும் பிரேரணை, தாய்லாந்துக்கும் ஏனைய

இந்தோசீன நாடுகளுக்குமிடையே நம்பிக்கையை பலப்படுத்த உதவும் என்று சோவியத் யூனியன் கருதுகிறது.

பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள் தென் கிழக்காசியாவில் இல்லை என்றே நாங்கள் கருதுகிறோம். இத்தகைய பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளின் இன்றியமையாத கடமையாகும். சர்வதேச பந்தோபஸ்தை பலப்படுத்து வதிலும், இந்தப் பிராந்தியத்திலுள்ள நிலைமையை சகஜப்படுத்து வதிலும் உண்மையிலேயே அக்கறை கொண்டிருப்பவர்கள், இந்தோ சீன நாடுகளுக்கும் ஏசியன் நாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடை பெறுவதை எவ்வகையிலும் குந்தகப்படுத்தக் கூடாது. சமாதானமும், ஸ்திரத்தன்மையும், ஒத்துழைப்பும் நிலவும் மண்டலமாக தென்கிழக் காசியா விளங்கும்படி செய்ய சோவியத் யூனியன் தன்னாலியன்ற உதவி அனைத்தையும் தொடர்ந்து செய்து வரும்.

சோவியத் யூனியனுக்கும் மக்கள் சீனக் குடியரசுக்குமிடையே உறவுகளை சகஜப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு உள்ளன ?

சோவியத்-சீன உறவுகளை மேம்படுத்துவதில், சோவியத் யூனியன் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரண்டு நாடுகளுக்குமிடையேயுள்ள மனஸ்தாபம் சகஜமானது என்று நாங்கள் கருதவில்லை மக்கள் சீனவுடன் உள்ள உறவுகளை சகஜப்படுத்துவது பற்றி மிக்க சிரத்தையுடனும் நேர்மை யாகவும் பேச்சுவார்த்தைகளை நடத்த தான் எப்போதுமே தயார் என்று சோவியத் யூனியன் சொல்லிலும் செயலிலும் நிருபித்துக் காட்டியுள்ளது. சோவியத் யூனியனுக்கும் மக்கள் சீனவுக்குமிடை யிலுள்ள உறவுகளில் ஏற்படும் மேம்பாடு, இரண்டு நாடுகளுக்கும் இரு நாட்டு மக்களுக்கும் நன்மை பயப்பது மட்டுமின்றி, சர்வதேச பந்தோ பஸ்தை பலப்படுத்துவதிலும் ஒரு மிகப்பெரிய அம்சமாகத் திகழ முடியுமென்றும், ஆசியாவிலும் உலகம் பூராவிலும் சமாதானத்தை பலப்படுத்துவதற்கு மிகவும் குறிப்பிடத்தக்க பங்குப்பணி ஆற்ற முடியு மென்றும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் அரசாங்கத் தலைவர்கள் திரும்பத் திரும்ப அறிவித்திருக்கிறார்கள்.

''மக்கள் சீனக் குடியரசுடன் உள்ள உறவுகளைக் கணிசமான அளவுக்கு மேம்படுத்த நாங்கள் விரும்புகிறோம்; மறு தரப்பும் இதே போல செயல்பட்டால், இது முற்றிலும் சாத்தியமே என்று நம்பு கிறோம்'' என்று 1985 மார்ச் 11 ஆம் தேதி நடைபெற்ற சோவியத்

கம்யூனிஸ்டுக்கட்சி பிளீனம் கூட்டத்தில் பொதுச் செயலாளர் மிகையீல் கொர்பச்சேவ் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பொருளாதாரம், கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் இதர துறைகளில் பரஸ்பரம் அநுகூலமுள்ள பிணைப்புக்கள் சன்னஞ் சன்னமாக மீண்டும் ஏற்படுத்தப்படுகின்றன.

சோவியத் அமைச்சரவையின் முதல் துணைத் தலைவர் இவான் அர்க்கிப்போவ், 1984 டிசம்பரில் மக்கள் சீனக் குடியரசுக்கு விஜயம் செய்தபோது, கீழ்க்காணும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன: பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றி சோவியத் மற்றும் மக்கள் சீனக் குடியரசு அரசாங்கங்களுக்கிடையே ஒப்பந்தம்; விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய ஒப்பந்தம்; பொருளாதார வர்த்தக, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய சோவியத்-சீனக் கமிஷன் ஒன்றை அமைப்பது சம்பந்தமான ஒப்பந்தம். இந்தப் பேச்சுவார்த்தைகளின் ஆக்கபூர்வமான அனுபவம், சோவியத் யூனியனுக்கும் சீனுவுக்குமிடையே பரஸ்பர நல்லுணர்ச்சியைப் பேணி வளர்ப்பதில் மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கும்; இருநாடுகளுக்குமிடையே உறவுகளை சகஜப்படுத்தவும் வகை செய்யும்.

சீன நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று, 1985 மார்ச்சில், சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தது. பல ஆண்டுகளாகவே முறிந்துகிடந்த சீன-சோவியத் நாடாளுமன்றத் தொடர்புகளை இந்த விஜயம் மீண்டும் தொடங்கி வைத்தது எனலாம்.

சோவியத் மக்கள் எப்போதுமே சீன மக்கள்பால் சகோதர உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள். சோவியத், சீன மக்களின் ஜீவாதாரமான, நீண்டகால நலன்கள் ஒத்திசைவானவை என்றே சோவியத் மக்கள் கருதுகின்றனர். எனவே, இருநாடுகளுக்குமிடையே நல்ல அண்டை நாட்டு உறவுகளையும் ஒத்துழைப்பையும் மீண்டும் நிலை நாட்ட வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும்.

- ''கம்பூச்சியப் பிரச்சினை''யை மாஸ்கோ எவ்வாறு அணுகுகிறது?

அத்தகைய பிரச்சினையே இல்லை என்று சோவியத் யூனியன் கருதுகிறது. கம்பூச்சியப் புரட்சியின் எதிரிகள், கம்பூச்சிய மக்கள் குடியரசிலுள்ள நிலைமையைப்பற்றி வேண்டுமென்றே அவதூறான கட்டுக் கதைகளைப் பரப்பி வருகின்றனர். இரத்த வெறிபிடித்த போல் பாட், இயங்சாரிக் கும்பலின் ஆட்சியின் போதுதான் கம்பூச்சியப் பிரச்சினை இருந்தது. இந்தக் கொலைகாரர்கள் பதவியில் இருந்த மூன்று வருடம் எட்டு மாதங்களில் முப்பது லட்சத்துக்கும் அதிகமான

கம்பூச்சிய மக்கள், அதாவது நாட்டுஜனத் தொகையில் ஏறத்தாழ பாதிப் பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

உலக சமுதாயத்தின் மீது, கம்பூச்சியப் பிரச்சினை என்று அழைக்கப் படும் ஒரு போலி விவகாரத்தைத் திணிக்க, அமெரிக்காவின் தலைமையிலுள்ள சர்வதேசப் பிற்போக்குச் சுதிசடைகள் செய்து வரும் முயற்சிகளை சோவியத் யூனியன் நிராகரிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையில், ''ஜனநாயகக் கம்பூச்சியா''வின் தூதுக்குழு அங்கீகரிக்கப் பட்டிருப்பதை சோவியத் யூனியன் உறுதியாக எதிர்க்கிறது. ஐ நா. சபையில் போல் பாட் கொலைகாரர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பது அசிங்கமானது என்று கருதிய பிற்போக்காளர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள்; ''ஜனநாயகக் கம்பூச்சிய கூட்டணி அரசு'' என்ற ஒரு போலியை உருவாக்கினார்கள்; போல்பாட் கொலைக் கும்பல் தான் இந்தக் கூட்டணியின் முதுகெலும்பு; ஏனைய பிற்போக்குக் கம்பூச்சிய அகதிகளின் பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த போலி ''கூட்டணி அரசு''க்கு ஐ. நா. சபையில் பிரதிநிதித் துவம் வழங்கப்பட்டிருக்கிறது. எனினும், ஐக்கிய நாடுகள் சபையில் கம்பூச்சியாவுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், இந்தக் கூட்டணியின் தோற்றம் எத்தகைய மாறுதலையும் செய்து விடவில்லை. உலக ஸ்தாபனத்தில் போல் பாட் கும்பல் பிரதிநிதித்துவம் வகிப்பது சட்ட விரோதமானது என்பதிலும் எத்தகைய மாறுதலும் இல்லை ''ஜனநாயகக் கம்பூச்சிய கூட்டணி அரசு'' என்பதற்கு சொந்தமான பிரதேசமோ அல்லது குடிமக்களோ இல்லை. எனவே, அது ஐக்கிய நாடுகள் சபையிலோ அல்லது வேறு எந்த சர்வதேச ஸ்தாபனத்திலுமோ கம்பூச்சிய மக்களைப் பிரதிநிதித் துவப்படுத்த முடியாது.

கம்பூச்சிய மக்களின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் பேசுவதற்கு கம்பூச்சிய மக்கள் குடியரசின் பிரதிநிதிகளுக்குத்தான் உரிமை உண்டு. அவர்களுடைய பங்கேற்பு இல்லாமல் நடைபெறும் ''கம்பூச்சியா பற்றிய எத்தகைய சர்வதேச மாநாட்டுக்கும்'' அர்த்தமே இல்லை. கம்பூச்சிய மக்கள் குடியரசு அரசாங்கம் மட்டுமே கம்பூச்சிய மக்களின் சட்டபூர்வமான ஏகப் பிரதிநிதியாகும். நாட்டின் பிரதேசம் பூராவிலும் அது பயனுறுதியான கட்டுப்பாடு வகிக்கிறது; மக்களின் முழு ஆதரவையும் பெற்றிருக்கிறது. கம்பூச்சிய மக்கள் குடியரசு தனித்து, தனது சொந்தக் கால்களிலேயே நின்று இயங்க வல்லது என்பதும் ருசுப்பிக்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் கீழ், போல் பாட் கும்பலின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சமூக மற்றும் பொருளாதாரக் கேடுகளின் மிகவும் மோசமான பின்விளைவுகளை வெற்றிகரமாக சமாளிக்கவும் அவற்றைப் போக்கவும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாட்டின் விவசாயம் செம்மை

செய்யப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான தொழில் நிலையங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கி விட்டன. சுகாதார சேவைகள், பொதுக் கல்வி, கலை, கலாசாரத் துறைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கம்பூச்சிய மக்களில் ஒவ்வொரு நான்கு பேரிலும் ஒருவர் இப்போது கல்வி பயின்று கொண்டிருக்கிறார்.

மக்கள் ஆட்சிக்கு எதிரான மிகவும் மூர்க்கமான பிரசார இயக்கம் அமெரிக்காவிலும், பல மேலைய நாடுகளிலும் இப்போது நடைபெற்று வருகிறது. வியத்நாமிய-கம்பூச்சிய ஒத்துழைப்பு பற்றி கூறப்படும் அவதூறுகளுக்குக் கணக்கு வழக்கேயில்லை. சட்டபூர்வமான கம்பூச்சிய அரசாங்கத்துக்கும் வியத்நாமுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட சமாதான, நட்புறவு, ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான், சிறிய அளவிலான வியத்நாமியப் படைகள் கம்பூச்சியாவுக்கு அனுப்பப்பட்டன. கம்பூச்சியாவில் இவ்வாறு அந்த அரசாங்கத்தின் சம்மதத்தின் பேரில் இருந்துவரும் வியத்நாமியப் படைகளைப் பற்றி, கம்பூச்சியப் புரட்சியின் பகைவர்கள், படு கேவலமான அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர். மக்கள் கம்பூச்சியாவின் சுதந்திரத்துக்கும் அரசுரிமைக்கும் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலைப் போக்க உதவி செய்வதுதான் வியத்நாமியப் படைப் பிரிவின் கடமையாகும். அந்த நாட்டிலுள்ள நிலைமை ஸ்திரமடையும் பொழுது வியத்நாமியப் படைகளை வாபஸ் வாங்குவதற்கான நிலைமைகள் சிருஷ்டிக்கப்படும். வியத்நாமியப் படைகளில் ஒரு பகுதி ஏற்கெனவே வாபஸ் பெறப்பட்ட விஷயம் அனைவரும் அறிந்ததே. எனினும், உலகப் பிற்போக்கு சக்திகளின் உதவியுடன் போல் பாட் கொலைகாரர்கள் சுதந்திர அரசுரிமைபெற்ற கம்பூச்சிய விவகாரங்களில் ஆயுதமேந்திய தலையீடு நடத்தி வருவதற்கு முற்ற முழுக்க முற்றுப்புள்ளி வைக்கப் பட்ட பின்னர்தான், தாய்லாந்து பிரதேசத்திலிருந்து அப்போதைக் கப்போது தொடுக்கப்பட்டுவரும் தாக்குதல்கள் நின்றுவிட்ட பின்னர் தான், கம்பூச்சிய மக்கள் குடியரசு அரசாங்கமும், வியத்நாம் சோஷலிசக் குடியரசு அரசாங்கமும்,கம்பூச்சியாவிலிருந்து வியத்நாமியப் படைப் பிரிவுகளை முழுமையாகவும் இறுதியாகவும் வாபஸ் வாங்கும் பிரச்சினையைப் பற்றிப் பரிசீலிக்க முடியும் என்று கருதுகின்றன.

கம்பூச்சிய மக்கள் குடியரசை ஏறத்தாழ நாற்பது ஐ. நா. உறுப்பினர் நாடுகள் ஏற்கெனவே அங்கீகரித்துள்ளன. மாபெரும் ஆசிய நாடான இந்தியாவுடன் கம்பூச்சியா நல்ல உறவுகளைக் கொண்டிருக்கிறது. நம்பிக்கைக்குரிய, உறுதியான நண்பர்களைக் கம்பூச்சியா பெற்றுள்ளது. கம்பூச்சிய மக்களுடைய தேச விடுதலைப் போராட்டம் வெற்றியடைவதை எவராலும் தடுக்க முடியாது என்பதற்கு இவையெல்லாம் உறுதியளிக்கின்றன.

ஆப்கனிஸ்தானில் ஒரு குறிப்பிட்ட அளவு சோவியத் படைகள் இருப்பதை ''ஆக்கிரமிப்பு'' என்று மேலைய நாடுகள் கூறுகின்றன. அந்த நாட்டில் சோவியத் படைகள் இருப்பதை நீங்களே கூட மறுக்கவில்லை. அப்படியென்றால் வித்தியாசம் எங்கே உள்ளது?

மேலைய நாடுகள் ''ஆக்கிரமிப்பு'' என்று அழைப்பது, எதார்த்த நடைமுறையில் முற்றிலும் வேறானது ஆகும். சட்டபூர்வமான ஆப்கன் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், 1978 டிசம்பர் 5 ஆம் தேதிய சோவியத்-ஆப்கன் ஒப்பந்தத்திற்கு முற்றிலும் இசைவாக, தனியாகவோ அல்லது கூட்டாகவோ நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை அளிக்கும் ஐ.நா. சாசனத்தின் 51 ஆவது ஷரத்தின் படி, வெளியிலிருந்து வந்த ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கு சோவியத் யூனியன் செய்த உதவியைத்தான் மேலைய நாடுகள் ''ஆக்கிரமிப்பு'' என்று அழைக்கின்றன. 1978 ஆம் வருட ஏப்ரல் புரட்சி நடைபெற்ற உடனேயே, பாகிஸ்தான் மற்றும் சில நாடுகளின் ஒத்துழைப்புடன் ஆப்கனிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது என்பது அனைவரும் அறிந்ததே. இந்த அன்னியத் தலையீடு, பிரகடனம் செய்யப்படாத யுத்தம் போல பரந்த வீச்சைப் பெறத் தொடங்கியவுடன், இராணுவ உதவி அளிக்கும்படி சோவியத் யூனியனை ஆப்கன் அரசாங்கம் வேண்டிக் கொண்டது. உண்மை இவ்வாறிருக்க, சோவியத் யூனியனுடைய சட்ட பூர்வமான நடவடிக்கைகளை சட்ட விரோதமானவையென்றும், வெளியாரின் ஆக்கிரமிப்பை எதிர்த்து முறியடிப்பதற்கு ஆப்கன் அரசுக்கு சோவியத் யூனியன் செய்த உதவியை ''ஆக்கிரமிப்பு'' என்றும் அமெரிக்கா விதண்டாவாதம் செய்கிறது. உலக மக்களின் கண்களில் மண்வாரி இறைப்பதற்காக, வேண்டுமென்றே அமெரிக்கா இத்தகைய விஷமப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறது.

சில மேலை நாடுகளின் அரசாங்கங்கள் ஆப்கனிஸ்தானுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றன; சோவியத் விஸ்தரிப்பு வாதத்துக்கு அது பலியாகிவிட்டதென்று ஒப்பாரி வைக்கின்றன. இந்த அரசாங்கங்கள் ஆப்கன் எதிர்ப் புரட்சியாளருக்கு இராணுவ, நிதி மற்றுமிதர உதவிகளையும் அளித்து வருகின்றன; சுதந்திர நாடான ஆப்கனிஸ் தானின் உள்விவகாரங்களில் மேன் மேலும் அதிகமாகத் தலையிட்டு வருகின்றன.

ஆப்கன் ஜனநாயகக் குடியரசின் சட்ட பூர்வமான அரசாங்கத்தைத் தூக்கியெறிவதற்கு ''அவசியமான நிலைமைகளை'' சிருஷ்டிப்பதுதான் தன்னுடைய உண்மையான நோக்கம் என்பதை இப்போதெல்லாம் வாஷிங்டன் மூடிமறைப்பதே இல்லை. இந்தக் கைங்கர்யத்தை நிறை வேற்றுவதற்காக, ரீகன் நிர்வாகம் ஆப்கன் எதிர்ப்புரட்சிக் கும்பல் களுக்கு மேலும் கணிசமான அளவுக்கு இராணுவ உதவியை அளிக்க

முற்பட்டிருக்கிறது. பஜூக்கா பீரங்கிகள், மார்ட்டர் பீரங்கிகள், கைக்குண்டு எறியும் பொறிகள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், ராக்கெட்டுகள் முதலிய நவீன ஆயுதங்களையும் இப்போது அக்கும்பல்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து வருகிறது பிரகடனம் இல்லாத போர் நடத்திவரும் இந்த காலகட்டத்தில் சுமார் 100 கோடி டாலர் பெறுமானமுள்ள ஆயுத உதவியை ஆப்கன் எதிர்ப்புரட்சிக் கும்பல்களுக்கு ரீகன் நிர்வாகம் அளித்திருக்கிறது என்று அமெரிக்கப் பத்திரிகைகளே எழுதியுள்ளன.

ஆப்கனிஸ்தானைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண விரும்புவதாகவும், அந்நாட்டிலிருந்து சோவியத் படைகள் வாபஸாகிச் செல்வதைப் பார்க்க மனப்பூர்வமாய் ஆசைப்படுவதாகவும் ரீகன் வாய்கிழியப் பேசுவதெல்லாம் வெறும் பித்தலாட்டம் என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஆப்கன் எதிர்ப்புரட்சியாளருக்குப் பொருளாயத, தார்மிக உதவி அளிப்பதன் மூலம், ஆப்கனிஸ்தானுக்கு வெளியார் அச்சுறுத்தல் தொடர்ந்து உறுதியாக நீடித்து வரும்படி வாஷிங்டன் பார்த்துக் கொள்கிறது; இந்த அச்சுறுத்தலை எதிர்த்து முறியடிப்பதைக் கடமையாகக் கொண்டிருக்கும் சோவியத் படைகள் இதனால் ஆப்கனிஸ்தானில் தொடர்ந்து இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாக்கப்படுகிறது. இதுதான் உண்மையான நிலைமை.

ஆயுதப் போட்டியை முடுக்கிவிடவும், மத்திய மற்றும் சமீபக் கிழக்குப் பிரதேசங்களில் தன்னுடைய இராணுவ முன்னிலையைப் பெருக்கிக் கொள்ளவும், வளர்முக நாடுகளின் விவகாரங்களில் தலையிடவும் ஒருநொண்டிச் சாக்காக ஆப்கன் நிகழ்ச்சிகளை வாஷிங்டன் பயன்படுத்திக் கொள்கிறது.

ஆப்கனிஸ்தானின் உள் விவகாரங்களில் மேன்மேலும் அதிக அளவில் ஆயுதமேந்திய தலையீடு நடத்துவதற்கு பதிலாக, சமாதான பூர்வமாயும் ஆக்கபூர்வமாயும் பேச்சுவார்த்தை நடத்துவதுதான் இப்பிராந்தியத்தில் நெருக்கடியைத் தணிப்பதற்குள்ள ஒரேயொரு வழியாகும். 1980 மே 14-லிலும், 1981 ஆகஸ்டு 24-லிலும் ஆப்கன் அரசாங்கம் வெளியிட்ட பிரேரணைகள் இந்த அணுகுமுறையைத்தான் கொண்டிருந்தன. சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கிடையே நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே, ஆப்கன் பிரச்சினை என்று அழைக்கப்படும் விஷயத்திற்குத் தீர்வுகாண முடியும் என்று ஆப்கனிஸ்தான் நம்புகிறது; சோவியத் யூனியனும் இந்தக் கருத்தைப் பகிர்ந்து கொள்கிறது. வெளியார் தலையீட்டுக்குப் பூரண முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதற்கும், ஆப்கனிஸ்தானின் உள்விவகாரங்களில் எல்லாவிதமான தலையீடுகளும் நிறுத்தப்படும் என்பதற்கும் உறுதியான, நம்பகமான உத்தரவாதங்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதுதான்

இதற்கான பிரதான முன்தேவையாகும். பிறகுதான், சோவியத் இராணுவப் படை வாபஸ் பெறப்படும்.

அமெரிக்காவுடனும் நேட்டோவுடனும் தன்னுடைய இராணுவ ஒத்துழைப்பை ஜப்பான் அதிகரித்துக் கொண்டிருப்பதால், சோவியத் யூனியனுடைய நலன்கள் பாதிக்கப்படுகின்றனவா?

ஆமாம்; ஏனெனில் சோவியத் யூனியன் ஐரோப்பிய நாடாக மட்டுமின்றி, ஓர் ஆசிய நாடாகவும் திகழ்கிறது. தொலைகிழக்கில், சோவியத் யூனியனுடைய கடல் எல்லையின் நீண்ட பகுதி ஜப்பானுக்கு நெருக்கமாக உள்ளது.

எனவே, சோவியத் எதிர்ப்பு இராணுவ நுகத்தடியில் ஜப்பானையும் மாட்டி இழுக்க அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் கொண்டிருக்கும் நோக்கம் பற்றி சோவியத் தலைமை கவலை கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஜப்பானில் சுமார் 119 அமெரிக்கத் தளங்களும், இதர இராணுவ நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன; சுமார் 50,000 அமெரிக்கப் போர் வீரர்கள் இந்த தளங்களில் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக் கிறார்கள். ஹோன்ஷு தீவிலுள்ள மிசாவா தளத்தில், அணு குண்டுகளை ஏற்றிச் செல்லவல்ல ஐம்பது எஃப்-16 போர் விமானங்களை நிலைப்படுத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிசாவாவிலிருந்து 800-1000 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சோவியத் தொலை கிழக்குப் பிராந்தியங்கள் மீது இந்த எஃப்-16 விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்த முடியும் என்ற விஷயம் ஜப்பானிலோ அல்லது அமெரிக்காவிலோ மூடிமறைக்கப்படவில்லை.

அணு ஆயுத வெடிமுகப்புக் கொண்ட டொமாஹாக் குருய்ஸ் ஏவுகணைகள், ஏற்கெனவே தொலைகிழக்கிலுள்ள அமெரிக்கக் கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கின்றன. அமெரிக்க ஏழாவது கடற்படையைச் சேர்ந்த இக்கப்பல்கள் அடிக்கடி ஜப்பானிய துறைமுகங்களுக்கும் விஜயம் செய்கின்றன.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை, பெறுவதில்லை, நாட்டுக்குள் கொண்டு வருவதில்லை என்று ஜப்பான் பிரகடனம் செய்திருக்கும் மூன்று அணு ஆயுத எதிர்ப்புக் கோட்பாடுகளுக்கும் இது நேர்முரணாக உள்ளது. ஜப்பானில் அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் ஏற்கெனவே மீறப்பட்டு விட்டன; எப்படியெனில், அணுஆயுதங்களைக் கொண்டிருக்கும் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்களும், நீர்மூழ்கி களும் அடிக்கடி ஜப்பானியத் துறைமுகங்களுக்கு வந்த வண்ணம் உள்ளன.

ஆயுதங்களை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று ஜப்பானிய சட்டங்கள் தடை விதித்துள்ளன. அப்படியிருந்தும், தன்னிடமுள்ள எல்லா வகையான இராணுவத் தொழில்நுட்ப சூட்சுமங்களையும் அமெரிக்காவுக்கு அளிக்க ஜப்பான் அதிகாரபூர்வமாய் ஒப்புக் கொண்டிருக்கும்விஷயம் 1983ஜனவரியில் அம்பலமாயிற்று. ஆனால் நேட்டோவைப் பின்பற்றி வரும் ஜப்பானியத் தலைமைக்கு சட்டம் ஒரு பொருட்டா? அமெரிக்காவின் நேட்டோ கூட்டாளிகள் செய்து வருவதைப் போலவே தானும் அமெரிக்காவுடன் சேர்ந்து கூட்டாக ஆயுத தளவாடங்களை அபிவிருத்தி செய்யவும் உற்பத்தி செய்யவும் ஜப்பான் தயாராக உள்ளது.

இதற்கு முன் என்றுமே கண்டிராத அளவு வேகத்தில் ஜப்பான் தன்னை ஆயுதபாணியாக்கிக் கொண்டிருப்பதைக்கண்டு நாங்கள் கவலைப் படாமலிருக்க முடியாது. உதாரணமாக, 1983-1987 ஆம் ஆண்டுகளில், 150 எஃப்-15 போர் விமானங்கள், 75 பி-3சி நீர்மூழ்கி எதிர்ப்பு விமானங்கள், 15 நீர்மூழ்கிகள், 60 போர்க் கப்பல்கள் ஏனைய தளவாடங்கள் உள்பட ஏராளமான ஆயுதப் படைக்கலன்களை வாங்குவதற்காக 44,00,000 கோடி யென்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

''அவசியம் ஏற்படும் பட்சத்தில்'' குவாமிலிருந்து பிலிப்பைன்ஸ் வரையுள்ள பரந்த பசிபிக் பிராந்தியத்தில் ஜப்பானியக் கடற்படை ரோந்துப் பணிகளில் ஈடுபடவும் அமெரிக்க நிர்ப்பந்தத்தின் கீழ் ஜப்பான் ஒப்புக் கொண்டிருக்கும் விஷயம் எங்களுக்கு அதிகக் கவலையளிப்பதாக உள்ளது ஜப்பானியப் பிரதேசத்துக்கு வெளியே வெகு தொலைவு வரையிலும் ஜப்பானிய இராணுவப் படைகள் இத்தகைய ரோந்துப் பணியில் ஈடுபடுவதானது, ஜப்பானுடைய அரசியல் சட்டத்துக்கு முரணாக இருப்பது மட்டுமின்றி, தவிர்க்க இயலாத வகையில் ஒரு புதிய நெருக்கடி அம்சத்தையும் சிருஷ்டிக்கிறது.

அமெரிக்கா மற்றும் நேட்டோவின் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்குள் ஜப்பான் நேரடியாக இழுக்கப்படுகிறது என்பது தெளிவு. நேட்டோவின் ''கீழைய உறுப்பினர்'' என்று மேற்கு நாடுகளில் ஜப்பான் அழைக்கப் படுகிறது. இவையனைத்தையும் சோவியத் யூனியன் புறக்கணிக்க முடியாதது இயல்பே.

மத்திய அமெரிக்காவிலும் கரீபியனிலும் இன்றுள்ள நிலைமையை மாஸ்கோ எவ்வாறு கணித்து மதிப்பிடுகிறது?

இந்தப் பிரதேசத்தில் நிலைமை மிகவும் அபாயகரமாய் உள்ளது. கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்கும் அதிகமாகவே, அமெரிக்கா இப்பிரதேசத்தைத் தனது புழக்கடையாகவே கருதி வந்துள்ளது.

தன்னுடைய விருப்பத்துக்கு அடிபணிய மறுத்த நாடுகளுக்கு எதிராக போர்க்கப்பல்களை அனுப்பி அச்சுறுத்தியது; அதுவும் பலிக்கவில்லையென்றால், அந்நாடுகளுக்குத் தனது துருப்புக்களை அனுப்பியது. அமெரிக்காவின் இஷ்டம்போல அந்நாடுகளில் அரசாங்கங்கள் தூக்கி யெறியப்பட்டன, மாற்றப்பட்டன. வாஷிங்டனால் அந்நாடுகளில் பதவியில் அமர்த்தப்பட்ட கைக்கூலி சர்வாதிகாரிகள், நாட்டின் தேசிய அரசுரிமைக்காகவும், கௌரவத்துக்காகவும் போராடிய எண்ணற்ற தேசபக்தர்களை வெஞ்சிறையில் அடைத்து வைத்தனர்; சித்திரவதை செய்தனர்.

கியூபா புரட்சியின் விடுதலை மணியோசை அக்கண்டம் பூராவிலும் ஒலித்து எதிரொலித்தது. நவீன காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கெதிராகவும், ஜனநாயகத்துக்காகவும் நிகராகுவா தேசபக்தர்கள் போர்க் கொடி உயர்த்தினார்கள். சர்வாதிகாரி சமோசா தூக்கி யெறியப்பட்டான். இப்போது உண்மையான சுதந்திரத்துக்காகவும், சமூக முன்னேற்றத்துக்குமான போராட்டம் எல் சால்வடோர், குவாதமாலா, ஹோண்டுரஸ் ஆகிய நாடுகளில் மேன் மேலும் பரந்த அளவில் புயல்போல வீசிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்கா இப்போது வரலாற்றின் வெற்றிநடையைத் தடுத்து நிறுத்த முயலுகிறது; "போர்க் கப்பல்களை அனுப்பி அச்சுறுத்தமுடிந்த காலகட்டத்துக்கு" காலச் சக்கரத்தைப் பின்னோக்கித் திருப்ப படாத பாடுபடுகிறது. மிருகபலத்தைப் பயன்படுத்துவதன் மூலம், நிகராகுவா புரட்சியின் குரல்வளையை நெரித்துக் கொன்று விடலாமென்றும், எல் சால்வடோரிலும் இதர மத்திய அமெரிக்க நாடுகளிலும் நடைபெறும் தேச விடுதலைப் போராட்டங்களை நசுக்கி அழித்து விடலா மென்றும் மனப்பால் குடிக்கிறது.

நிகராகுவாவுக்கு எதிராக இப்போது போர்ப் பிரகடனம் இல்லாமலேயே அமெரிக்கா யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறது. சமோசாவின் கைக்கூலிகளான எதிர்ப்புரட்சிக் கும்பலுக்கு சிஐஏ பயிற்சி அளிக்கிறது; அவற்றுக்கு நவநவீன ஆயுதங்களை அளித்து, ஹோண்டுரஸ் பிரதேசத்திலிருந்து நிகராகுவா மீது படையெடுக்கும் படி உசுப்பிவிடுகிறது. நிகராகுவா துறைமுகங்களைச் சுற்றிலும் அமெரிக்கா சுரங்க வெடிகளை மிதக்க விட்டுள்ளது. நிகராகுவா பிரதேசத்துக்கு மிக அருகில் அமெரிக்க விமானப் படையும் கடற் படையும் இராணுவ ஒத்திகைகளை நடத்திய வண்ணம் உள்ளன. சுருங்கக்கூறின், நேரடி அமெரிக்க ஆக்கிரமிப்புக்கான தயாரிப்புக்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன.

சில முக்கிய புள்ளிவிவரங்களை இங்கேபார்ப்போம்: நிகராகுவாவுக்கு எதிராக அமெரிக்கா கடைப்பிடித்து வரும் அரசு பயங்கரவாதக் கொள்கைக்கு இதுகாறும் 7,000-க்கும் அதிகமான மக்கள் பலியாகி இருக்கிறார்கள். நிகராகுவாவில் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு ஆதரவளித்து

சட்டபூர்வமான சான்டினிஸ்டா அரசாங்கத்தைத் தூக்கி எறியும் முயற்சிக்காக, ரீகன் நிர்வாகம் கடந்த மூன்றாண்டுகளில் 7 கோடி 30 லட்சம் டாலருக்குக் குறையாமல் செலவழித்துள்ளது என்று செனட்டர் எட்வர்டு கென்னடி அறிவித்திருக்கிறார்.

மத்திய அமெரிக்காவிலும் கரீபியனிலும் அமெரிக்க ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இலக்காகியிருக்கும் நாடுகளில் நிகராகுவாவைத் தவிர வேறு சில நாடுகளும் உள்ளன. உதாரணமாக, எல் சால்வடோரில் அமைதியான பணிகளில் ஈடுபட்டிருக்கும் சாதாரணப் பொதுமக்களைக் கொன்று குவிப்பதில் "தனித்தேர்ச்சி" பெற்றுள்ள கொலைவெறிக் கும்பல்களுக்கு அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள்தான் தளபதிகளாக இருந்து வருகின்றனர். கியூபா மீது படையெடுக்கப் போவதாய் அமெரிக்கா எப்போதுமே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது; கியூபாவின் கடல் மற்றும் வான எல்லைகளை அமெரிக்கா தொடர்ந்து அத்துமீறி வருகிறது; கியூபாவின் மீது அமெரிக்க உளவு விமானங்கள் அல்லும் பகலும் ரோந்து சுற்றிக்கொண்டே இருக்கின்றன. மிகப்பெரிய ஏகாதிபத்திய வல்லரசு, சுண்டைக்காய் அளவுள்ள மிகச்சிறிய கிரெனடா தீவின் மீது தொடுத்த படையெடுப்பு, அமெரிக்க அரசு பயங்கரவாதத்துக்குத் தலைசிறந்த உதாரணமாய்த் திகழ்கிறது.

மத்திய அமெரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு வருகிற அமெரிக்கா, அப்பிராந்தியத்தில் நெருக்கடியையும் பதற்றத்தையும் அதிகரித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா, அங்கே உள்ள பிரச்சினைகளுக்கு சமாதான பூர்வமாகத் தீர்வுகாண விடாமல் குந்தகப் படுத்திக் கொண்டிருக்கிறது; ஆனால் அதே சமயம் தனது சமாதான நோக்கங்களைப் பற்றி நயவஞ்சகமாய் வாய்கிழியப் பேசவும் செய்கிறது. இந்தப் பிராந்தியத்தில் அரசியல் தீர்வுகாண நிகராகுவாவும் இதர நாடுகளும் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்கத் தன்னாலியன்றதனைத்தையும் அமெரிக்க நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, கான்டடோரா குழு என அழைக்கப்படும் வெனிஜுலா, கொலம்பியா, மெக்சிகோ, பனாமா ஆகிய நாடுகள் வெளியிட்டிருக்கும் கான்டடோரா பிரேரணையை அமெரிக்கா எதிர்க்கிறது.

ஏனெனில், மத்திய அமெரிக்க நாடுகளிலிருந்து அன்னிய இராணுவ ஆலோசகர்களை வாபஸ்பெற வேண்டுமென்றும், இந்தப் பிராந்தியத்தில் இராணுவ ஒத்திகை நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும் அந்தப் பிரேரணை வற்புறுத்துவதே இதற்குக் காரணமாகும்.

மத்திய அமெரிக்க மக்களுக்கும் உலகமக்கள் அனைவருக்குமே,மிகவும் பேரபாயமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இந்த அமெரிக்க நடவடிக்கைகளை, சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டிக்கிறது. மக்கள் ஜனநாயகப் புரட்சியின் ஆதாயங்களை வலுப்படுத்திக் கொள்வதற்காக, ஏகாதிபத்தியத்தையும் பிற்போக்குப் பிண்டங்களையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் வீரஞ்செறிந்த நிகராகுவா மக்களுக்கு முழு ஆதரவையும் சோவியத் யூனியன் அளிக்கிறது. எல் சால்வடோர், குவாதமாலா, ஹோண்டுரஸ் நாடுகளின் தேசபக்தர்களது நியாயமான போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு நல்குகிறது. இந்தப் பிராந்தியத்தை சமாதானம், சுதந்திரம், அபிவிருத்தி மண்டலமாக மாற்றிட கியூபாவும், நிகராகுவாவும், கான்டடோரா குழு நாடுகளும் மேற்கொண்டு வரும் முயற்சிகளையும்

சோவியத் யூனியன் ஆதரிக்கிறது. வெளியார் தலையீடின்றி, தனது சொந்த சுயப்போக்கைத் தானே நிர்ணயித்துக் கொள்ள ஒவ்வொரு நாடும் பெற்றிருக்கும் அரசுரிமையை மதித்து நடத்தல் என்ற அடிப்படையில் மட்டுமே, உலகிலுள்ள வேறு எந்தப் பகுதியையும் போலவே மத்திய அமெரிக்காவிலும் கரீபியனிலும் சமாதானத்தையும் ஸந்தோஷத்தையும் உறுதிப்படுத்துவது சாத்தியமாகும் என்ற தனது திட நம்பிக்கையை சோவியத் யூனியன் பன்முறை பறைசாற்றி உள்ளது.

ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் அமெரிக்காவும் தென்னுப் பிரிக்கக் குடியரசும் மேற்கொண்டிருக்கும் ''சமாதானத் தாக்குதலைப்' பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவும் தென்னுப்பிரிக்காவும் ராஜிய நடவடிக்கைகளைத் தீவிரமாய் முடுக்கி விட்டதன் விளைவாக, மொசாம்பிக் மக்கள் குடியரசுக்கும் தென்னுப்பிரிக்கக் குடியரசுக்குமிடையே 1984 மார்ச்சில் அநாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது; அதே ஆண்டு பிப்ரவரிமாதத்தில் அங்கோலா மக்கள் குடியரசுக்கும் தென்னுப்பிரிக்கக குடியரசுக்குமிடையே ''லுசாக்கா உடன்பாடுகள்'' செய்து கொள்ளப் பட்டன. ஆனால் இவையெல்லாம், அந்தப் பிராந்தியத்தில் எஞ்சி யிருக்கும் காலனியாதிக்கம், நிறவெறி என்ற அடிப்படையான பிரச்சினைக்குத் தீர்வுகாணவிடாமல் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளே என்று நாங்கள் கருதுகிறோம். அண்டையிலுள்ள சுதந்திர மான நாடுகளை, தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஓர் அரசியல், இராணுவ, பொருளாதாரக் கூட்டணிக்குள் இழுத்துக் கொள்வதன் மூலம், இந்தப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தைத் திணிக்க இனவெறி பிடித்தாடும் தென்னுப்பிரிக்க அரசு முயலுகிறது. இந்த அயல்துறைக் கொள்கைக்கு ஏற்பதான் வாஷிங்டனும் பிரிட்டோரி யாவும் தமது ''சமாதான நடவடிக்கையை'' எடுத்துள்ளன.

தென்னுப்பிரிக்க மக்கள் ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசின் தலைமை யின் கீழ் இன ஒதுக்கலை எதிர்த்து வீரதீரமாகப் போராடிக் கொண்டிருக் கிறார்கள். தென்னுப்பிரிக்காவுக்கும் மொசாம்பிக்குக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம், மொசாம்பிக் பிரதேசத்தில் ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வகை செய் கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கையெழுத்தான அதே சமயம் மபுடோவில் இன்னொரு விஷயமும் வலியுறுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் செய்து கொண்டதால், இன ஒதுக்கல் ஆட்சிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகாதென்றும், ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசுக்கு மொசாம்பிக் தொடர்ந்து அரசியல், ராஜிய, தார்மிக ஆதரவு அளித்து வருமென்றும் சுட்டிக்காட்டப் பட்டது.

1984 பிப்ரவரியில் லுசாக்காவில் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டபோது, 1984 மார்ச் 31 ஆம் தேதிக்குள் அங்கோலா மக்கள் குடியரசின் தென் பகுதிகளிலிருந்து தன் படைகளை வாபஸ் வாங்கிக் கொள்ள தென்னுப்பிரிக்கக் குடியரசு ஒப்புக் கொண்டது. சட்ட விரோதமாகக் கைப்பற்றிக் கொண்ட மற்றோர் அரசின் பிரதே சத்திலிருந்து வாபஸ் வாங்குதல் என்ற சர்வதேசச் சட்ட விதிகளைக் கடைப்பிடிக்க தென்னுப்பிரிக்க அரசாங்கம் இவ்வாறு வாக்குறுதி

யளித்தது. அவ்வளவுதான் என்றாலும், இந்தச் செயல் தென்னாப் பிரிக்காவின் ''சமாதானப் பண்புக்கு'' மிகச்சிறந்த எடுத்துக்காட்டு என்று பிரிட்டோரியாவிலும் மேலை நாடுகளின் தலைநகரங்களிலும் போற்றிப் புகழப்பட்டது. அதேசமயம், ஆக்கிரமிப்பு மீண்டும் நடைபெறாது என்று அது உத்தரவாதமளிக்க மறுக்கிறது; மாறாக, துருப்புக்கள் வாபஸ் ஆவதையும் அப்போதைக்கப்போது நிறுத்தி விடுகிறது; அங்கோலா மீது புதிய தாக்குதல் தொடுக்கப் போவதாயும் அச்சுறுத்துகிறது. இதன் விளைவாக, தென்னாப்பிரிக்காவின் ஆக்கிர மிப்புப் படைகள் இப்போதும் கூட அங்கோலாப் பிரதேசத்தில் இருந்து வருகின்றன.

யூனிட்டா கூலிப்படைகளுக்குத் தென்னாப்பிரிக்கா தொடர்ந்து உதவி செய்து கொண்டிருக்கிறது. தென் அங்கோலாவில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதால், தென்னாப்பிரிக்கா இப்போது தென் திசையிலிருந்து உதவியை அளிப்பதற்கு பதிலாக, இஸ்ரேலின் ஒத்துழைப்புடன் ஜைரே மூலம் எதிர்ப்புரட்சிக் கும்பல் களுக்கு அதிக அளவில் உதவி செய்து கொண்டிருக்கிறது. அதே சமயம், அங்கோலா எதிர்ப்புரட்சிக் காரர்களின் ''ஐக்கிய அணி''யை அமைக்க, அமெரிக்கா முயன்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அணியில் யூனிட்டா, அதன் முந்தைய கூட்டாளி எஃப் என் எல் ஏ (அல்லது அதன் எச்ச மிச்சம்) எஃப் எல் இ சி என்ற கபிண்டா பிரிவினை இயக்கம் போன்றவற்றை சேர்க்க அமெரிக்கா முயலுகிறது. 1984 மார்ச்சில், இந்தக் கோஷ்டிகளைச் சேர்ந்த தலைவர்கள் வாஷிங்டனுக்குச் சென்றார்கள். அங்கோலா மக்களின் பகைவர்கள், சுதந்திர அங்கோலா மக்கள் குடியரசுக்கெதிராகக் குழிபறிப்புச் செயல் களில் ஈடுபட, தொடர்ந்து சதித்திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

நமீபிய சுதந்திரப் பிரச்சினையில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை. நமீபிய ஆப்பிரிக்க மக்களின் தலையாய அரசியல் ஸ்தாபனமான ஸ்வாப்போவுடன், 1984 ஜனவரியில் பிரிட்டோரியா நேரடியாகத் தொடர்பு கொண்டது. நமீபிய மக்களின் சட்டபூர்வமான ஏகப்பிரதிநிதியென்று ஸ்வாப்போ வை ஐ. நா. சபையே அங்கீகரித் துள்ளது. தென் அங்கோலாவில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை தான் மதித்து நடப்பதாகவும், அதே சமயம், ஸ்வாப்போவுக்கும் தென்னாப்பிரிக்காவுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும் வரையிலும், நமீபியாவில் தொடர்ந்து ஆயுத மேந்திய விடுதலைப் போராட்டம் நடத்தப்படுமென்றும் ஸ்வாப்போ எச்சரித்தது.

நமீபியாவின் சுதந்திரம் பற்றி ஐ. நா. பந்தோபஸ்து சபை நிறை வேற்றிய பிரபலமான 435 ஆம் எண் தீர்மானத்தை அமல் நடத்த அமெரிக்காவும் தென்னாப்பிரிக்காவும் இப்போதும் மறுத்து வருகின்றன. அந்தத் தீர்மானத்துக்குப் பலவிதமான முட்டுக்கட்டைகளையும் போடு கின்றன; அல்லது அதை ஒதுக்கிப் புறக்கணிக்கின்றன. உதாரணமாக, தென்னாப்பிரிக்கா இதற்கு ''இரட்டை நிபந்தனை''களை விதித்திருக் கிறது. கியூபா சர்வதேசப் போர்வீரர்களை அங்கோலாவிலிருந்து வாபஸ் பெற வேண்டுமென்றும், யூனிட்டாவை சட்டபூர்வமாக்க வேண்டு மென்றும் அது கோருகிறது. பிரிட்டோரியாவின் கைக்கூலிகளாகத் திகழும் யூனிட்டா கொலைகாரர்களுடன் எத்தகைய பேச்சுவார்த் தையும் நடத்த அங்கோலா அரசாங்கம் உறுதியாக மறுக்கிறது. அங்கோலாவில் கியூபா படைப்பிரிவுகள் இருப்பதைப் பற்றியும்

அங்கோலா தலைமை உறுதியான முடிவு எடுத்துள்ளது: அங்கோலாவிலிருந்து தென்னாப்பிரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர்தான், அங்கோலாவுக்கெதிரான ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்ட பின்னர்தான், யூனிட்டாவுக்கு ஆதரவு அளிக்க தென்னாப்பிரிக்கா மறுத்து விட்ட பிறகுதான், 435 ஆம் எண் தீர்மானத்தின் அமலாக்கம் தொடங்கிய பிறகுதான் கியூபா படைப்பிரிவுகளை சன்னஞ் சன்னமாக வாபஸ் வாங்கும் சாத்தியக்கூறு பற்றி அங்கோலாவும் கியூபாவும் விவாதிக்க முடியும் என்று அங்கோலா அரசாங்கம் உறுதியான முடிவு எடுத்துள்ளது.

அமெரிக்காவும் தென்னாப்பிரிக்காவும் எடுத்துள்ள ''சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ராஜிய நடவடிக்கைகளை''ப் பற்றி சோவியத் யூனியனுடைய கருத்தை இப்போது கவனிப்போம். படைபலத்தின் மூலம் சாதித்துக் கொள்ள முடியாததை இத்தகைய ராஜதந்திரச் செயல்களின் மூலம் சாதித்துக் கொள்ள தென்னாப்பிரிக்கா முயலுகிறது என்றுதான் நாங்கள் நம்புகிறோம். எனினும், ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் தனது குறிக்கோள்களை அடைய இராணுவ பலத்தின் மீதுதான் இன்னும் பிரிட்டோரியா ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது தென்னாப்பிரிக்கத் தலைவர்களின் பேச்சுக்களிலிருந்தே தெளிவாகிறது. 1984—1985 ஆம் ஆண்டுக்கான இராணுவச் செலவை, தென்னாப்பிரிக்க அரசாங்கம் 20 சதவீதம் அதிகரித்துள்ளதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேறு சொற்களில் கூறினால், ஆப்பிரிக்க தேசங்களுடன் தென்னாப்பிரிக்கா நடத்தும் ''சமாதான பூர்வமான பேச்சுவார்த்தைகளில்'' இராணுவ பலம்தான் அதனுடைய அடிப்படை வாதமாக இருந்து வந்துள்ளது, இப்போதும் இருந்து வருகிறது எனலாம்.

இந்தப் பிராந்தியத்தில் தனது சுயநல நோக்கங்களை அமெரிக்காவும் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. அது கடைப்பிடிக்கும் முறைகள் சற்று மாறுனவை ஆப்பிரிக்காவின் தென்பகுதியில் நிலையான, உறுதியான சமாதானம் ஏற்பட வேண்டுமானால், தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; நமீபியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணவேண்டும். ஆனால் வாஷிங்டன், பிரிட்டோரியா இரண்டுமே இதை வன்மையாக எதிர்க்கின்றன.

சர்வதேச பயங்கரவாதத்தை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். இதைப்பற்றித் தங்கள் விமர்சனம் யாது ?

சர்வதேச உறவுகளில் பயங்கரவாதம் உள்பட, பயங்கரவாதத் தத்துவத்தையும் நடைமுறையையும் சோவியத் யூனியன் எப்போதுமே எதிர்த்து வந்துள்ளது; இப்போதும் எதிர்க்கிறது. சோவியத் மக்களின் உலகக் கண்ணோட்டத்துக்கும், சோவியத் அரசின் கொள்கைக்கும், பயங்கரவாதம் முற்றிலும் புறம்பானது.

ஆனால் இதற்கு மாறானதை நிரூபிக்க, சர்வதேச பயங்கரவாதத்துக்குப் பக்கபலமாக சோவியத் யூனியன் இருக்கிறது என்று மக்களை நம்பும்படி செய்ய, ரீகன் நிர்வாகம் பகீரதப் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் சிஐஏவினால் கூட இதற்கு சான்றுகளை அளிக்க முடியவில்லை. 1981 ஜனவரி இறுதியில், இந்த விஷயம் பற்றி அமெரிக்க நிருபர்கள் சிஐஏயிடம் கேட்டபோது, அதனால் எத்தகைய பதிலும் கூற முடியவில்லை.

எனவும், ''சர்வதேசக் கம்யூனிசம்'' என்பதும் ''சர்வதேச பயங்கரவாதம்'' என்பதும் ஒரே சொல்லின் இரண்டு அர்த்தங்கள் என்றும், எனவே, கம்யூனிஸ்டுகளின் ஆதரவைப் பெற்றிருக்கும் தேச விடுதலை இயக்கங்களும் உண்மையில் ''சர்வதேச பயங்கரவாதமே'' என்றும் மேற்கு நாடுகளிலுள்ள மக்களை நம்பவைப்பதற்கு ரீகன் நிர்வாகம் அயர்வு சோர்வின்றிப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. போலியான மார்க்சிய கோஷங்களைப் பிதற்றிய வண்ணம் பயங்கர வாதச் செயல்களில் ஈடுபடும் ஸ்தாபனங்களையெல்லாம் கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள் என்று வர்ணிக்கவும், அவை ''சர்வதேசக் கம்யூனிஸ்டு பயங்கரவாதச் சதியின்'' அங்கங்கள் என்று சாயம் பூசவும், அவற்றுக்கு சோவியத் யூனியன், ''நிதி உதவி செய்து, ஆயுதங்களை அளித்து, வழிகாட்டுகிறது'' என்று குற்றம் சாட்டவும் ரீகன் நிர்வாகம் முனைகிறது.

''கம்யூனிஸ்டுகளின் பங்கு'' பற்றி வாஷிங்டன் எடுத்துக் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு சான்றுகள் இல்லாதபோது, பொய்ச் சான்றுகள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கு மிகவும் அவக்கேடான உதாரணத் தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போப்பைக் கொல்ல நடைபெற்ற முயற்சியில் பல்கேரியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் சம்பந்தமுண்டு என்று சிஐஏ இட்டுக் கட்டியிருக்கும் மிகவும் கேவலமானகட்டுக்கதையே இது. அல்லது மற்றோர் உதாரணத்தையும் பார்ப்போம். எல் சால்வடோரில் ''உயிருடன் பிடிக்கப்பட்ட'' பயங்கரவாதி ஒருவர் அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டார். அமெரிக்க ராஜாங்க இலாக்காவில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் அவர் பேசுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அவர் அமெரிக்காவின் முகத்தில் கரி பூசிவிட்டார். தன்னைச் சித்திரவதை செய்தது பற்றியும், குற்றுயிரும் குலை உயிருமாய்க் கிடந்த தன்னிடமிருந்து ''வாக்கு மூலத்தில்'' கையெழுத்து வாங்கப்பட்டதாகவும் அவர் திட்டவட்டமாக அறிவித்து பரபரப்பூட்டினர்.

சுதந்திரத்துக்காகவும், காலனியாதிக்கம் மற்றும் இனவெறிக் கொடுமையிலிருந்து விடுதலை பெறவும் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் தேச விடுதலை இயக்கங்களை ''பயங்கரவாதம்'' என்று பெயர் தீட்ட மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளையும் சோவியத் யூனியன் உறுதியாக எதிர்க்கிறது. தேச விடுதலை இயக்கங் களுக்கு சோவியத் யூனியன் அளித்துவரும் ஆதரவை, ''பயங்கர வாதத்துக்கு'' அளித்துவரும் ஆதரவு என்று புரட்டிக் கூற அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் செய்யும் முயற்சிகளையும் நாங்கள் உறுதியுடன் நிராகரிக்கிறோம்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கெதிராகப் போராடிக் கொண்டிருக்கும் அரபு மக்களின் பிரதிநிதிகள், நமீபிய விடுதலைக்காகப் போராடும் தேசபக்தர்கள், எல் சால்வடோர் தேசபக்தர்கள் ஆகியோரை ''பயங்கரவாதிகள்' என்று வாஷிங்டன் அழைக்கிறது. ''பயங்கர வாதம்'' பற்றி அமெரிக்க உச்சிமட்ட அரசியல்வாதிகள் கூறும் கூற்றுக்களின் உண்மையான அர்த்தம் இதிலிருந்து தெளிவாகிறது அல்லவா?

இன்னொரு விஷயம்: பயங்கரவாதத்துக்கு சோவியத் யூனியன் ஆதரவளிக்கிறது என்று குற்றம் சாட்டும் பேர்வழிகள் யார்? பெகின், ஷரோன் வகைப்பட்ட இஸ்ரேலியக் கொலைகாரர்களுக்கும் பயங்கர வாதிகளுக்கும் நவநவீன ஆயுதங்களை அளித்து சகல உதவிகளையும் செய்துவரும், நிகராகுவா எதிர்ப்புரட்சிக்காரர்களுக்கு இராணுவ உதவி உள்பட சகலவிதமான உதவிகளையும் அளித்துவரும், ஆப்கன்

ஜனநாயகக் குடியரசுக்கெதிராக நடந்து கொண்டிருக்கும் போர்ப் பிரகடனமற்ற யுத்தத்துக்கு சகல மானியங்களையும் அளித்து வரக் கூடிய, சின்னஞ்சிறு கிரெனடாவை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த கழிசடைகள்தான் அவர்கள். பிடெல காஸட்ரோவையும், நிகராகுவா தலைவர்களையும் படுகொலை செய்ய இந்தக் கயவர்கள் பல தடவை முயன்றார்கள். சால்வடார் அலெண்டே, மாரிஸ் பிஷப், அர்லாண்டோ லெடெலியர், அல்டோ மோரோ போன்ற தலைசிறந்த தேசபக்தர்களை படுகொலை செய்ததிலும் இந்த அரக்கர்களுக்குப் பங்குண்டு. ' திருடன் திருடன் பிடியுங்கள்!'' என்று உரக்கக் கூச்சலிட்டுக் கொண்டே முன்னால் ஓடுவோனும் உண்மையான திருடன் என்ற பழமொழிதான் இந்தக் கழிசடைகளின் பிதற்றலைக் கேட்கும்போது நமக்கு நினைவுக்கு வருகிறது.

அமெரிக்கக் கொள்கையின் அபாயகரமான போக்கும் அதன் ஆணவத் திமிரும், பொறுப்பற்ற தன்மையும் அண்மைக் காலத்தில் மேன் மேலும் தெளிவாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தம்முடைய நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைவதற்கு உதவும் என்று தாங்கள் கருதும் எத்தகைய கிரிமினல் வழி முறைகளையும் சட்ட பூர்வமானவை, நியாயமானவை என்று பிரகடனம் செய்ய அமெரிக்கத் தலைவர்கள் முற்றிலும் தயாராக இருப்பது போலத் தோன்றுகிறது. இதர நாடுகளின், எல்லாவற்றுக்கும் முதலில் வளர்முக நாடுகளின், சமூக அரசியல் அமைப்புக்களை சீர்குலைக்க வெளிப்படையாகவும், ரகசியமாகவும் செய்யப்படும் சதிச்செயல்களும் இவற்றில் அடங்கும்.

இந்த அரசு பயங்கரவாதக் கொள்கையும்; இத்தகைய சதிச் செயல்களும் சர்வதேச நியதிகளைக் காலடியில் போட்டு மிதித்துத் துவைக்கின்றன; உலக நெருக்கடியை மேலும் அதிகரிக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டுதான் சோவியத் யூனியன், ஐ. நா. பொதுச் சபையின் 39 ஆவது கூட்டத் தொடரின் பரிசீலனைக்காக, ஒரு முக்கிய மான அதி அவசரப் பிரேரணையை சமர்ப்பித்தது. ''இதர சுதந்திர நாடுகளின் சமூக அரசியல் அமைப்புக்களை சீர்குலைக்கும் நோக்குடன் வேறு நாடுகள் மேற்கொள்ளும் அரசு பயங்கரவாத கொள்கையும் ஏனைய செயல்களும் அனுமதிக்கப்படக் கூடாது'' என்பதுதான் அந்தப் பிரேரணையின் தலைப்பு.

அரசுகளின் சமூக அமைப்பை பலவந்தமாக மாற்றுவதையோ அல்லது சீர்குலைப்பதையோ நோக்கமாய்க் கொண்ட, அந்நாடுகளின் அரசாங்கங்களைத் தூக்கியெறிவதைக் குறிக்கோளாய்க் கொண்ட எத்தகைய அன்னிய முயற்சிகளையும், ஐ. நா. பொதுச்சபையில் இந்த சோவியத் பிரேரணையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது, மிகப் பெரும்பான்மையான பிரதிநிதிகள் வன்மையாகக் கண்டித்தார்கள்.

சோவியத் நகலின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட ஐ. நா. தீர்மானம் இந்தக் கொள்கையை உறுதியாக நிராகரித்தது. பல நாட்டுத் தூதுக்குழுக்களின் விருப்பங்களையும் இந்தத் தீர்மானம் பிரதிபலித்தது. 117 நாடுகளின் ஆதரவைப் பெற்ற இந்தத் தீர்மானம், ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக, அரசு பயங்கரவாதக் கொள்கை அனுமதிக்கப்பட முடியாதது என்று கோட்பாடு ரீதியாகப் பிரகடனம் செய்தது. அமெரிக்காவும் அதன் நெருக்கமான கூட்டாளிகளும் இந்த முக்கிய தீர்மானத்துக்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டன. அரசு பயங்கரவாதக் கொள்கையின் மூலாதாரம் எங்கே பொதிந்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகும்.